Govt. ...
DEPT OF ...
...
MADRAS

20/5/1969

M



அன்பு மகள் அன்பரசி



இந்நூல் ஆசிரியர் புதுமைலோலன்

# தடுப்புக்காவலில் நாம்

அன்பு மகள்

அன்பரசிக்கு

எழுதிய மடல்கள்.

புதுமை லோலன்.

அன்பு வெளியீடு

முதற் பதிப்பு: ஏப்ரில் 1969

தடுப்புக் காவலிலிருந்த எல்லோரிடமும் புகைப்படம் கேட்டெழுதினேம்; அனுப்பியவர்களது படங்களை நூலில் சேர்த்துள்ளோம். புகைப்படங்களனுப்பி ஆதரவு தந்தவர் களுக்கு எமது நன்றிகள்.

— அன்பு வெளியீடு —

விற்பனையாளர்கள் :-

அன்பு புத்தகசாலை,
27D, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# வெளியீட்டுரை

ஈழத் தமிழனது வரலாற்றில் போராட்டகால உன்னத காலம் அறப்போர்க் காலமேயாகும். முன்போ, அதன் பின்போ, அப்படிப்பட்டதொரு ஒன்றுபட்ட தமிழுணர்வை தமிழினம் சந்திக்கவில்லை. இத் தமிழுணர்வை இலங்கைத் தமிழரசுக்கட்சி கட்டி எழுப்பியது, என்பதுஉண்மை. பல காட்டாறுகளைத் தாண்டி இந்நிலையைத் தமிழரசுக்கட்சி உருவாக்கியது. இழந்த உரிமைகளைப் பெறும் உறுதி நெஞ்சத்தை மக்களுக்குக் கொடுத்த பெருமை தமிழரசு இயக்கத்தைச் சேரும். அவ்வியக்கம் நடாத்திய சத்தியாக்கிரகம் ஈழத்தமிழன் யாவரையும் ஒன்ருக்கியது. அப்போராட்டத்தில் இரத்தம் சொரிந்தோர், வாழ்வில் இன்னல் பல அடைந்தோர், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோர் எனப் பல நூற்றுக்கணக்கானேர் நாட்டுக்குத் தமது தொண்டினை நல்கினர். அவர்களில் புதுமைலோலன் அவர்களும் குறிப்பிடக் கூடியவரென்பதை நாடறியும். அவர் போராட்டத் தொடக்க நாளே கச்சேரியடியில் இரத்தம் சொரிந்தார், பொலீசாரின் குண்டாந்தடியினல்... பின்பு தடுப்புக்காவலிலும் வைக்கப்பட்டார். நூறுநாட்கள் சிறையிலிருந்து, தனது மகள் அன்பரசிக்குக் கடிதவாயிலாக எழுதிவந்தவையே இம்மடல்கள் ஆகும். இவற்றைச் சுதந்திரனிதழ் ஆறுமாதங்களாகத் தொடர்ந்து பிரசுரித்து வந்தது. நாம் புத்தகமாக்க உரிமையளித்த சுதந்திரன் நிர்வாகிகளுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

அந்த நாட்களை எண்ண எமதிதயம் பூரிக்கின்றது; உணர்ச்சியால் துள்ளுகின்றது. அன்றைய தமிழரிதயம் வீரமுடன் முழக்கமிட்டது;— இன்றைய தமிழரிதயம் சோர்ந்து, முறுக்கிழந்து... ஏக்கம் நிறையப்பார்ப்பதேன்? —ஏன்?

**— அன்பு வெளியீடு —**


*அவசரமாக அச்சிட்டுதவிய ஸ்ரீலங்கா அச்சகம், ஆனந்தா அச்சகம், ஸ்ரீ சண்முகநாத அச்சகம் அதிபர்களுக்கு எமது கடப்பாடுடைய நன்றிகள்.*

"வெளியீட்டாளர்"

**18-4-1961** தொடக்கம் **26-7-61** வரை தடுப்புக் காவலிலிருந்த புதுமைலோலன் அவர்கள், விடுதலையாயதும் தொடர்ந்து 6 மாதங்களாக எழுதிய கடிதங்களிவை. "சுதந்திரன்" கட்டுரை முடிவில்; கீழ்வருமாறு குறிப்பிடப் பட்டிருந்தது:—

"ஈழத் தமிழ் பேசுமினம் எதற்கு மகிழப் போகின்றனர்? துயரமே வாழ்வாகக் கொண்டுவிட்ட தமிழ் பேசுமினத்தின் உறுப்பினர் யாம். இந்த விடுதலை கேட்டு மகிழவா வேண் டும்" என்று குறிப்பிட்டுள்ளது முற்றிலும் உண்மை. இந்த விடுதலையை, அல்ல, உண்மை விடுதலையைத் தமிழ் பேசும் இனம் பெறும்வரை, துயரமே வாழ்வாகக்கொண்ட இனம்தான் தமிழ்பேசுமினம், இதில் ஐயமில்லை. வீர சுதந்திரம் வேண்டி நிற்கிறது, ஈழத் தமிழினம். அந்தச் சுதந்திர வரலாற்றின் ஒரு அங்கமே கடந்த ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம்.

அதையடுத்து, எதேச்சாதிகார மனப்பான்மைகொண்ட வகுப்புவாத தனிச்சிங்கள ஆட்சிபீடம், தமிழினத்தின் தலைவர் களை இரண்டாவது முறையாகத் தடுப்புக் காவலில் வைத்தது. அவர்களில் ஒருவராகத் தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பீரங்கி யாகிய திரு. புதுமைலோலனும், ஹோமகம தடுப்புக் காவல் முகாமில் வைக்கப்பட்டார். அவர்கள் தனது நூறு நாளைய தடுப்புக்காவல் அனுபவங்களை, கடந்த இருபத்தைந்து வாரங்க ளாகக் கடித உருவில் வாசகர்களுக்கு அளித்து வந்துள்ளார்.

தமிழினத்தின் போராட்ட வரலாறுகள் அனைத்தும் உல கறிய வேண்டும், அதற்கு இப்படியான முயற்சிகள் அவசியம் வேண்டும்.

# தடுப்புக் காவலில் நாம் - 1

தடுப்புக் காவல் நிலையம்;
பனுகொடை,
ஹோமகம.
**13 - 4 - 1961**

**என் அருமை மகள்**
**அன்பரசிக்கு!**

நேற்றிரவு என்னருகே படுத்து நித்திரை செய்தாய். நடுச் சாமநேரம். உன் அப்பாவைப் பிரிய நேரப் போகின்ற தெனக் கனவு கண்டாயோ, என்னமோ தெரியாது; அழுதாய். யான் உன் அழுகைச் சத்தம் கேட்டு எழுந்துவிட்டேன். உனக் கென்ன அதிக வயசா? ஒன்றரை வயசுதானே பூர்த்தியாகப் போகின்றது. அடுத்த கட்டிலில் படுத்திருந்த உன் அருமை அம்மா, உன் தம்பி அன்பழகனை அணைத்தபடி நல்ல உறக் கத்திலிருந்தார். உன் தம்பியும் இந்த உலகில் காலடி எடுத்து வைத்து அதிக காலமில்லையே! முப்பத்தொன்பது நாட்கள் தானே ஆகின்றன.

உன் அழுகையை மாற்றுவதற்காக, உன்னைத் தூக்கித் தோளில் போட்டபடி உலாவினேன். சிறிது நேரத்தில் நீ என் தோளில் உறங்கிவிட்டாய். உன்னை மறுபடியும் படுக்கையில் கிடத்திவிட்டு, நான் உன்பக்கத்தில் படுத்தேன். அப்போது சாமம் இரண்டு மணியிருக்கும். கண்ணை மூடினேன். ஆனால் உறக் கமும் என்னை அணைக்கவில்லை. சிந்தனை விழிப்புடன் அலை யெறிந்தது. கண் மூடியிருந்தது ஒழிய, நினைவு யாழ்ப்பாணக் கச்சேரியை நோக்கிச் சென்று விட்டது. இரவு பதினொரு மணிவரை கச்சேரியடியிலிருந்தே வீடுவந்தேன். இந்நேரமும் ஆண் பெண் தொண்டர்கள் அறப் போரில் ஈடுபட்டிருப்பர். அறப் போர்த் தோற்றம் கண்ணில் நிழலாடிற்று. அதோ தொண் டர்களின் ஒலி... ஆம்! காதில் ஒலிக்கின்றது.

**''கத்தியின்றி இரத்தமின்றி**
**யுத்தமொன்று நடக்குது**
**கலியுகத்தில் கண்டிராத**
**அற்புதத்தில் அற்புதம்''**

இக் கீதத்தை என்வாயும் முணு முணுக்கின்றது.

அப்போது—;

ஒரு ஜீப் ஓடிவந்து நின்ற ஓசை; அதைத் தொடர்ந்து சப்பாத்தொலிகள்.

ஒருகணம் ஓடிற்று.

"மாஸ்றர்! மாஸ்றர்!" என்ற குரல்! என்ன அந்தக் குரல், முன்பு கச்சேரியடியில் கேட்டகுரலல்லவா? ஆமாம்! அதே குரல் ஒலி. உடுவில் பாரராளுமன்றப் பிரதிநிதி தர்மலிங்கம் அவர்களே அழைத்தார்.

அப்பொழுது உன் பிஞ்சுக் கால்கள் என் நெஞ்சிலே கிடந்தது. அமைதியாகக் கால்களைத் தூக்கி படுக்கையில் வைத்துவிட்டு, எழுந்து குரல் கொடுத்தேன்; வெளியே வந்தேன். சடசட வெனச் சப்பாத்துக்களின் ஒலி என்னைச் சூழ்ந்தன. மூன்று பொலிசார்; ஒரு பொலிஸ் அதிபர் என்னைச் சூழ நின்றனர்.

"உங்களைக் கைது செய்யும் இப்பத்திரத்தை தருவதற் காக வருந்துகிறேன்" என்றபடி, பொலீஸ் அதிபர் என்னைக் கைது செய்தற்குரிய பத்திரத்தை 'சல்யூட்' செய்துவிட்டு நீட்டினார்.

"என்னையும் அவசரகால நிலைச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். அதே போன்று உங்களையும் கைது செய்கின் றனர்" என்றார் உடுவில் பிரதிநிதி.

"நாங்கள் எதிர்பார்த்ததுதானே." — என்றபடி அப்பத்தி ரத்தை வாங்கினேன்.

அப்பொழுது ஒரு சிறு நடுக்கம் — உங்களை யெல்லாம் பிரிய நேர்ந்ததே என்று. ஓர் மகிழ்ச்சி — நாட்டுக்காக உழைக்க இன்னும் உறுதியை, ஊட்டுகின்றதே என்று—

அந்நேரம் உன் அம்மாவும் எழுந்து விட்டார்.

"மணி" — நான் உன் அம்மாவை இப்படித்தானே அழைப்பேன்.

"திகைப்பு"—உன் அம்மாவின் வதன மெங்கும். 'வியர்வை' — உன் அம்மாவின் கை கால்கள் எங்கும்..., "நீ தமிழ்ப் பெண் ஈழநாட்டுத் தமிழ்ப் பெண். இந்த அனுபவங்களை இனி வரவேற்றேயாக வேண்டும்." — என எத்தனையோ முறை கூறியிருந்தும், பிரிவுத் துயரம் கவலையை உண்டாக்காது விடுமா? உன் அம்மாவின் கண்ணீர் என்னையுமொரு கணம் வேதனையடையத்தான் செய்தது.

உன் அம்மாவை மணம் முடித்த இரண்டரை ஆண்டுகளில், ஆகக் கூடினுல் இரண்டு அல்லது மூன்று நாட்கள் மட்டுமே பிரிந்திருப்பேன், அதுவும் எங்கேயாவது பயணமானுல் மட்டுமே. ஆனுல் சத்தியாக்கிரக நாட்களில் சில நாட்கள் பகலும் இரவும் கச்சேரியிலேயே கழித்தேன்.

பிரிவையே அனுபவித்தறியாத உன் அம்மா "போய் வாருங்கள்" எனக் கைகூப்பினுர்.

நல்ல காரணமே என்னைச் சிறைக்கு அழைக்கின்றது மணி, எனக் கூறிவிட்டு உன்னைப் பார்த்தேன். நீ, ஆழ்ந்த உறக்கம். உனது கன்னத்தில் முத்தம் சொரிந்தேன். உன் தம்பி அன்பழகன் கன்னத்திலும் முத்தம் சொரிந்தேன்.

புறப்பட்டுவிட்டேன்.

ஜீப்பில் பக்க மெங்கும் துப்பாக்கியுடன் பொலீசார், இடையே யான். பெரிய புரட்சிக் காரனைப் பிடித்துப் போவதுபோல பொலீசார் உட்கார்ந்திருந்தனர்.

உடைகள் சில எடுப்பதற்காக, என் அன்னையின் வீட்டிற்குப் போக, பொலீஸ் அதிபர் உத்தரவு தந்தார். என்முன்னறி தெய்வத்தை, என் தாயைக்காண ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. "கண்ணீரும் அன்னைமுகமும்" விடைதந்தன.

ஜீப் ஓடிற்று. வேகமாக ஓடிற்று. என்னையும் உடுவில் பிரதிநிதியையும் கைது செய்த பொலீஸ் அதிபரே ஊர்காவற்றுறை பிரதிநிதி வி. ஏ. கந்தையா அவர்களையும் கைது செய்யவேண்டியிருந்ததால், கந்தையா அவர்களைத் தேடி ஜீப் ஓடிற்று.

சிலவேளை கந்தையா அவர்கள் கச்சேரியடியில் இருக்கலாமெனை எண்ணி, ஜீப் வண்டி கச்சேரியடியை அடைந்தது.

எ - ன் - ன ?

தெருவெங்கும் இராணுவக் கும்பல்! எங்கு திரும்பினும் துப்பாக்கிகளின் காட்சி. கச்சேரியுள் நிறைய காக்கி உடைகளின் தோற்றம்.

எமதில்லமாக, புனிதஇடமாக, தியாக மண்ணாக மாறியிருந்த கச்சேரியின் வாயிலிலே, சத்தியாக்கிரகிகள் உட்கார்ந்திருந்தபாய்கள் எரிந்து கொண்டிருந்தன.

தெருவெங்கும் பனங்காய் அளவுகற்கள் சிதறிக்கிடந்தன. ஒரு மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்டுக் கிடந்தது. இக் காட்சியைக்காண, ஏனோ என்னையறியாதே கண்கள் கலங்கின. நெஞ்சுவலித்தது. அறப்போர் செய்த தொண்டர்கள் எங்கே? என்னவானுர்கள்? அவ்வளவு பேரையும் கைது செய்து விட்டனரா?... இப்படியெல்லாம் வினுக்கள் முட்டி மோதின.

திரு. கந்தையா அவர்களைக் கைது செய்வதற்காக ஜீப் ஓடிற்று; வேலணையை நோக்கி ஓடிற்று. கந்தையா அவர்களின் இல்லத்தில் வைத்து திரு. வி. ஏ. கந்தையா அவர்களையும், கைது செய்து கொண்டு வந்த ஜீப்வண்டி யாழ்ப்பாணம் பொலீஸ்தானம் வந்து சேர்ந்தது.

ஒரே பொலிஸ் கும்பல். சாராய நெடியடித்தது. பாது காப்புக் கைதிகள் வைத்திருக்கும் சிறு கூடத்தைக் கவனித்தேன். நெருங்கியபடி பெண்கள் உட்கார்ந்திருந்தனர். யார் இப் பெண்கள் என்று உற்றுக் கவனித்தேன். சத்தியாக்கிரகம் செய்த எங்கள் தாய்மாரும், சகோதரிகளுமே அங்கே உட்கார்ந்திருந்தனர். நமது அறப்போர் அன்னைகளை - உட்காரவே இடம் காணுத இடத்தில், ஆடுகளைப் பட்டியில் அடைத்ததுபோல் அடைத்திருந்தனர்.

எந்தக் காரணத்திற்காகவும் பொலிஸ்தானம் அடையாத நமது தாய்க்குலம், நாட்டுக்காக வரநேர்ந்ததே... என்று என் இதயம் குரல் கொடுத்தது. உள்ளம் நடுங்கியது. மனம் அழுதது. கண்ணீர் கன்னம் வழி ஓடியது. என்ன? நான் அழுகிறேனு? கோழைத்தனமா என்னை அழ வைக்கின்றது. இல்லை! இல்லை! நெஞ்சுரம் வேண்டியளவு இருக்கிறது. உரம் உள்ள நெஞ்சிலே இரக்கமுமல்லவா குடிபுகுந்துள்ளது.

“மாஸ்ற்றர் சிகறற் புகைக்கிறீர்களா?” என ஒரு பொலீஸ் குரல்.

அப் பொலிஸ் குரல் தமிழ்க் குரல். அக்குரலிலும் சிறு நடுக்கம். அப்போது உதயம் நாலுமணியிருக்கலாம். அந்நேரம் சிகறற் புகைப்பது நிம்மதி தரலாம் என்றெண்ணி ஓர் சிகறற்றை எடுத்தபடி, அப் பொலீஸ் மகனின் முகத்தைப் பார்த்தேன்.

என்னுச்சரியம்! அவரின் முகத்திலே கண்ணீர் வாய்க்கால்கட்டி ஓடிக் கொண்டிருந்தது. எனக்கு நன்கு பழக்கமான நட்பான பொலீசாரின் முகம்! ஏன் அவர் அழுகின்றுர்? பொலீசாக இருப்பினும் தமிழ் மகன் அல்லவா?

ஜீப் ஓடிற்று. காங்கேசன்துறை வீதி வழியாக ஓடிற்று. விடிய ஒரு மணித்தியாலம் வரை உண்டு. காங்கேசன்துறை வாடிவீட்டினுள் ஜீப்வண்டி நுழைந்தது. அங்கும் ஒரே இராணுவக்கும்பல்.

அமிர்தலிங்கம் தம்பதிகள், திருவாளர்கள் க. ஜெயக்கொடி (முன்னாள் நீதிபதி), சி. கதிரவேற்பிள்ளை (நியாயவாதி), சி. சின்னத்துரை (முன்னாள் தபாற் கந்தோர் அதிபர்), ரி. எஸ். துரைராசா (மாநகரபிதா), க. துரைரத்தினம் (பருத்தித்துறை பிரதிநிதி), முதலியோர் கைது செய்யப்பட்டு வந்திருந்தனர்.

விடிந்தது ...!

தந்தை செல்வநாயகமும் அவரது பாரியாரும் கைது செய்யப்பட்டு வந்தனர். பலத்த பொலீஸ் காவலுடன், பலாலி ஆகாய விமானத் தளத்திற்குக் கொண்டு போனார்கள். காங்கேசன் துறையிலிருந்து கடற்கரை வீதிவழி, பலாலி விமானத் தளம் போகும் மட்டும் சனக் கும்பல் ஆரவாரித்தது. மயிலிட்டியில் ஓர் பெரும் சனத்திரள்; 'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை! ..." எனக்குரல் கொடுத்து விடை கொடுத்தது.

விமான தளத்தில் கிளிநொச்சிப் பிரதிநிதி சிவசுந்தரம் அவர்களும் கைது செய்யப்பட்டு வந்திருந்தார். தளத்தில் விசேட விமானம் நின்றது.

எங்கள் அத்தனை பேரையும் அவ்விசேட விமானத்தில் ஏற்றினர். விமானம் எவ்விப் பறந்தது.

யாழ்ப்பாண மண்ணை - எமது தீந்தமிழ்மண்ணை எட்டிப் பார்த்தோம்.

விமானம் பறந்து கொண்டிருந்தது. எங்கே போகின்றது, யாருக்குமே தெரியாது. விமானத்தினுள்ளும் பலத்த பொலீஸ் காவல்.

அதோ தலைமன்னூர்க்குடா, விமானம் பறக்கிறது.

விமானம் இறங்கியது. நாமும் இறங்கினோம், அது இரத்மலானை விமான நிலையம். பொலீஸாரின் கும்பல் வரவேற்றது. மழைத்தூற்றல் வீழ்ந்து கொண்டிருந்தது. பெரிய பொலீஸ் வண்டி ஒன்றில் ஏற்றப்பட்டோம். வண்டியைச் சுற்றித் தடித்த, கறுத்த சேலையால் மூடிக் கட்டினர்.

பொலீஸ் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் தெருவோ, எதுவுமோ தெரியவில்லை. இருளில் இருந்தோம். கடைசியாக வண்டி நின்றது. இறங்கினோம். சிறிது நேரம் எதையும் பார்க்க முடியவில்லை. இருளில் இருந்ததால் கண் மணிகள் வேலை செய்ய மறுத்தன.

சிறிது நேரம் சென்றது. நிமிர்ந்து பார்த்தோம். ஓர் நீண்ட 'ப' வடிவம் கொண்ட மேன்மாடிக் கட்டிடம், இராணுவ உத்தியோகத்தர், தங்கக் கட்டப்பட்ட கட்டிடமாம். இன்னும் குடிபுகாத புதுக்கட்டிடமாம்.

இக் கட்டிடத்தைக் கண்டதும், எனக்கோர் நினைவு உண்டாயிற்று. சந்திரலேகா என்ற சினிமாப் படத்தின் இறுதியில், முரசு நாட்டியம் ஒன்று வருகின்றதல்லவா? அந்த நாட்டியம் நடைபெறும் இடத்திற்கு நேரே அமைந்த 'ப' வடிவு கொண்ட பெரிய கட்டிடம் போல் இருந்தது. படத்திலே முரசு நாட்டியம்... இங்கே தமிழ் முரசு கொட்டியமைக்காக எம்மைத் தனிமைப் படுத்தி வைக்கும் சிறைமுகாம்.

இக்கட்டிடத்தில் நுழைந்தோம். இக்கட்டிடம் பனகொடை என்ற கிராமத்தில் உள்ளது. பனகொடை ஹோமகம என்ற ஊரில் உள்ளது. ஹோமஹம கொழும்பிலிருந்து 16 மைல் தூரமுள்ள ஓர் கிராமம்.

அவசிய நேரத்தில்நாட்டைக் காக்கவுள்ள இராணுவத்தினரது கட்டிடங்கள் சூழவுள்ள இக்கட்டிடத்தில், தமிழ்பேசும் இனத்தின் உரிமை முழக்கமிட்ட இலட்சியத்தின், உருவங்கள் குடியேற்றப்பட்டனர். அவர்களுடன் யானும் குடியேற்றப்பட்டேன். அதாவது, தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டோம்.

அன்பு! இதையெல்லாம் உனக்கேன் எழுதுகிறேன், இதை நீ வளர்ந்து படிக்கவேண்டும். இப்போது படிக்கமுடிந்த அத்தனை

பேரும் படிக்கவேண்டும். ஈழத்தமிழனின் போராட்டத்தில் சந்தித்தவரலாற்றுக் குறிப்புகளை மறக்கமுடியுமா? ம்! இன்னும் எவ்வளவோ எழுத உண்டு. இங்கிருந்து உனக்கு கடிதமூலம் எல்லாமே எழுதப்போகிறேனே.

சரி மேன்மாடியில் ஏறினேம்! மீதி நாளை வரைகின்றேன்.

உன் அப்பா;
**புதுமைலோலன்**

---

# தடுப்புக்காவலில் நாம் - 2

பனுகொடை,
ஹோமகம.
**19-4-1961.**

**என் அருமை மகள்**
**அன்பரசிக்கு!**

மேல்மாடியில் ஏறினேமா? அம்மாடிக் கட்டிடம் கட்டப்பட்டு முதன்முதலில் ஏறியவர்கள் நாங்களே. மேல்மாடியில் இருந்து கீழே பார்த்தோம். இன்னுமிரண்டு பொலிஸ் வண்டிகள் வேகமாக வந்துநின்றன. மூடிக் கட்டியிருந்த துணிகள் அகற்றப்பட்டதும் பார்த்தோம்; ஆவலுடன் பார்த்தோம்.

ஒரு வண்டியிலிருந்து மீன்பாடும் தேன்நாடு தந்த அறப்போர் வீரர்கள் இறங்கினர். திருவாளர்கள்: செ. இராசதுரை (மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி), எஸ். எம். இராசமாணிக்கம் (பட்டிருப்புப் பிரதிநிதி), பொ. மாணிக்கவாசகர் (கல்குடாப் பிரதிநிதி), அறப்போர் முன்னணி அரியநாயகம், மு. மாணிக்கம் முதலியோர் சேர்ந்த குழுவினரும் மேன்மாடி யடைந்தனர். பாசஉணர்வு திரண்டு உருண்டு இதயத்தை உருக்க, கிழக்கு மாகாண வீரர்களைப் பார்த்தோம். களைப்புக்கொண்ட வதனங்கள் - ஆனல் உறுதி மாருத கண்பார்வைகள்! உறக்கமற்றுக் காணப்பட்ட சோர்ந்திருந்த இராசதுரையின் முகம்; நாட்டுத் தொண்டின் கடினத்தையும், அதைத் தாங்கும் உறுதி நெஞ்சத்தையும் உணர்த்திக்கொண்டேயிருந்தது.

அடுத்த வண்டியில் மூடிக் கட்டப்பட்டிருந்ததுணி அகற்றப்பட்டது. வவுனியா பெற்றெடுத்த வன்டமிழ்வீரர் இறங்கினர்.

வவுனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம், வவுனியா பட்டினசபைத் தலைவர் திரு. த. சுப்பிரமணியம் என்போர் சேர்ந்த குழுவினர்கள் எம்முடன் மேன்மாடியை அடைந்தனர்

**அக்கட்டிடத்தில் கால்வைத்தால் கரியாகும், தமிழினத்தின் உரிமையைப் பறித்து அடக்குமுறையை வீசிவிட்ட ஆட்சிபீடத்தின் பண்பற்ற இருள்போன்ற கரி, அக்கரி. தம்மையடக்கிக்கொண்டு ஜனநாயகம் பேசும் முகங்களில் ஏற்பட்டவெட்கத்தின் பிரதிபலிப்பை அக்கரி உணர்த்திற்று. ஈழ நாட்டின் பெண்மந்திரியாரின் உள்ளம் எப்படிப்பட்ட தென்பதை அக்கரி பேசாமல் பேசியது,**

சிறிதுநேரம் ஓடிற்று. இன்னோர் பொலீஸ்வண்டி வரும் ஓசை. எட்டிப் பார்த்தோம். எம்மைக் கொண்டு வந்தது போன்ற ஓர் வண்டி. மூடியிருந்த துணி அகற்றப்பட்டது. திருமலைவீரர்கள் வண்டியிலிருந்து குதித்தனர். திருமலைப் பிரதிநிதி திரு. ந. இராஜவரோதயம், ஆசிரியர் க. சிவகுரு ஆகியோர் கொண்டகுழுவினரும் எம்முடன் மேன்மாடியையடைந்தனர்.

மேன்மாடியில் உள்ள அறைகள் திறக்கப்பட்டன. வருக என சீமெந்து வாசினை வரவேற்பு நல்கிற்று. கட்டிடம் கட்டியபின்பு முதல் கால்வைக்கும் பிரகிருதிகள் நாம்தானே.

வெளிச்ச ஒழுங்கு, குழாய்த்தண்ணீர் ஒழுங்கு என்பன அதன்பின்னர் செய்யப்பட்டன.

அம்மேல் மாடியில் கிட்டத்தட்ட இருபத்தைந்து அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் மூவராகக் கட்டில் போட்டுவிட்டார்கள். இராணுவம் உபயோகிக்கும் கட்டில்கள் அவை- உட்கார்ந்தால் அப்படியே அழுத்திவிடும் அமைப்புக் கொண்ட கட்டில்கள் அவை. சில அறைகளில் நால்வரும் விடப்பட்டனர். தந்தை செல்வநாயகம் தம்பதிகளுக்கும், அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கும் தனித்தனி அறைகள் கொடுத்தனர்.

நேற்று பிற்பகல் 2-30 வரையாகிவிட்டது. முதனுள் இரவு சாப்பிட்ட பிற்பாடு எமது வயிறு உணவைச் சந்திக்கவில்லை. இருமுறை தேநீர்மட்டும் பருகினேம்.

**பசி எம்மை என்ன செய்ய முடியும். துப்பாக்கிச் சனியனே எதுவும் செய்யாதபோது......பொலிஸாரின் இராணுவத்**

**தாரின் குண்டாந்தடிகளே எதுவும் செய்யாதபோது...இலங்கை ஆட்சிபீடத்தின் அடக்குமுறைகளின் தீவிரமே அசைக்கமுடியாத போது......இந்தப்பசி எம்மை என்ன செய்யும்?**

கொழும்பிலிருந்து கிறீன்லன்ட் ஹோட்டலிலிருந்து உணவுடன் ஒரு ஜீப்வண்டி வந்து சேர்ந்தது.

மறியற்காரருக்குக் கொடுப்பதுபோலத் தகரக்கோப்பை ஒவ்வொன்று ஒவ்வொருவருக்கும் தந்தார்கள். உணவு பரிமாறினூர்கள்.

சாப்பிட்டுக்கொண்டு இருக்கும்போது உள்நாட்டமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. பெர்னுண்டோ அவர்களும், சிறைச்சாலை அதிகாரி திரு. பிள்ளை அவர்களும் வந்தனர். பெர்னுண்டோ அவர்களிடம் பிரதமர் ஸ்ரீமா அவர்கள் தொலைபேசிமூலம் எங்களைப் போய்ப்பார்த்து வரச் சொன்னுர்களாம்.

**பட்டியிலே அடைக்கப்பட்ட ஆடுகளை இடையன் பார்க்கச் செல்வானே அப்படியா? அல்லது எதிர்ப்படைகளைத் தனது சிறையிலிட்டு மீசையை முறுக்கியபடி பார்க்கவரும் சேனுதிபதி போன்ற பார்வையா? அடக்குமுறையிலும் அடிமையாக்கிவிட்டும் அன்பு காட்டுகின்றேம் என்ற நடப்பா? ம்! வாழ்க சிறிமா அரசு என வாழ்த்தவா முடியும்! அராஜகரீகத்தை வாழ்த்துபவன் யார்? சர்வாதிகாரத்தை வாழ்க என்பவன் எவன்? உரிமை கேட்பது தப்பா? அதுவும் உயிரனைய தமது உரிமையை, எந்த இனம் உலகில் கேட்காதுவிட்டது. அதற்குப் பதில் துவக்குமுனையில் சிறைச்சாலையா?**

இங்கிலையில் உள்நாட்டமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி வந்தார்......!

முதலிரவு கைதுசெய்து - அதுவும் திடுதிப் என்று கைது செய்து, அடுத்தநாள் பிற்பகல் 2-30 வரை பட்டினிபோட்ட ஆட்சியாளரின் கொடுமை, ஈழநாட்டு ஆட்சி பீடத்தின் நிர்வாகஒழுங்கு எங்கே போகின்றது என்பதை உணர்த்தப்போதுமானது. கொலைசெய்த கைதியும்கூட உரியநேரத்திற்குச் சாப்

பிடுவான். ஆனல். காரணம் கூருது, எதுவுமே சொல்லாது கைதுசெய்த... ...அதுவும் அரசியல் கைதிகளாயிருந்தும்கூட... காருண்ணியம்மிக்க ஆட்சிபீடம் இப்படி நடந்துகொள்ளாது வேறு எப்படி நடந்துகொள்ள முடியும்? கொங்கோநாட்டரசியல் நெருக்கடியின்போதுகூடக் கைதிகளை இப்படிச் செய்ததாக நாம் கேள்விப்பட்டது கிடையாது.

உண்டுமுடியச் சிறிதுநேரம் களைப்பாறினேம். அடுத்த பொலிஸ்வண்டி வரும் ஓசை கேட்டது. எட்டிப் பார்த்தோம். மன்னூர் மாவீரர்கள், மன்னூர்ப் பிரதிநிதி வி. ஏ. அழகக் கோன் தலைமையில் வந்து எமது மேல்மாடியை அடைந்தனர்

சத்தியாக்கிரகம்பற்றிக் கலந்துரையாடினேம், தமது அனுபவங்களை ஒவ்வொருவரும் கூறும்போது தமிழன் துணிந்து விட்டான். இனி, அரசுசெய்யும் எதுவுமே தோல்விகாணும் என்பதையே என்னல் உணரமுடிந்தது. சூரியனும் மேலை வாயிலை இரத்தமாக்கி, தமிழர் யாழ்ப்பாணக் கச்சேரி முன்பு 17-4-61 இரவு சொரிந்த இரத்தத்தை நினைவுறுத்தி மறைந்தான்.

மகளே அரசி! சென்ற இரவு இங்கே தடுப்புக்காவல் கைதியாக ஓர் அறையில் ஓர் கம்பிக்கட்டிலில் படுத்தேன். உறக்கம் நெருங்கவில்லை; சிந்தனை சுழன்றது...

என்னை, உன்தம்பியை, உன் அன்னையை, உன் அப்பாச்சியை... யாழ்ப்பாண மண்ணை, நண்பர்களை நான் படிப்பித்த பாடசாலையை, உடன் ஆசிரியர்களை, மாணவர்களை... சத்தியாக்கிரக நாட்களை, தியாகசெம்மல்களை, வீராங்கனைகளை... எண்ணினேன் எண்ணிக் களைத்துத் தூங்கிவிட்டேன்.

நடுச்சாமம் இரண்டு மூன்று மணியிருக்கலாம். முதனுள் என்னைக் கைதுசெய்த நேரம், கண்விழித்துவிட்டேன்.

எழுந்தேன். யன்னல் பக்கத்தால் பார்த்தேன், கீழே துவக்கு சகிதம் உலாவிய ஓர் பொலிஸ், துவக்கை உயர்த்தி நீட்டி... ஆமாம் பாய்ந்து ஓடிவிடுவேன் என எண்ணினரோ?

பொலிசின் கடமையது. ஆனல் துவக்குக்கு அஞ்சிய காலம் மலையேறிவிட்ட தென்பதை அவருணரவில்லை.

நாம் மேல்மாடியை விட்டுக் கீழே இறங்குவதற்கு மூன்று வழிகளுண்டு. அவ்வழிகளில் துப்பாக்கிசகிதம் பொலிஸ்காவல். மூலைகளில் சூழவரத் துவக்கும் பொலீசும்மட்டுமே காணக் கூடியதாக அமைக்கப்பட்டது எமது முகாம்.

**துப்பாக்கிமுனையில் தமிழ்பேசும் இனத்தை அடிமையாக்கி விடத் துணிந்த அநீதியை உணர்த்தியபடி பார்த்த இடமெங் கும் காக்கிச்சட்டையணிந்த பொலிசாரும் துப்பாக்கிகளுமே தெரிந்தன. இலங்கையின் இராணுவமும் பொலிசாரும் இன்று தமிழ் பேசுமினத்தை அடக்கி ஒடுக்கமட்டுந்தானே!**

விடிந்தது. இன்று காலை சாப்பிட்ட பின்பு தடுப்புக் காவல் கைதிகளாய் நாம் அனைவரும் கூட்டமாகக் கூடி ேனும். தடுப்புக்காவலில் நாம் கைக்கொண்டொழுக வேண்டிய ஒழுங்குகளைப்பற்றி ஆலோசிக்கும் கூட்டமே இது. அக்கூட் டத்தில் சிலஒழுங்குகளை நாமே வகுத்துக்கொண்டோம்.

தினமும் மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு ஓர் மணி யடிக்கும். அப்போது இரண்டு நிமிடங்கள் தமிழ்பேசுமினத்தின் உரிமைகள் கிடைக்க மௌனமாக ஆராதித்தல், மாலை ஆறு மணிக்கு, எல்லோரும் பொதுமண்டபத்தில் கூடி ஆராதித்தல்.

பொதுமண்டபம் மேல்மாடியின் மத்தியில் உள்ளதாகும், இம்மண்டபத்திற்கருகே ஓர் பொதுஅறை உண்டாக்கினேம். அவ்வறையிலே பத்திரிகை, வானெலி, எண்ணெய்போன்ற பொருட்கள் வைக்கப்படும். தேவையானவர்கள் அவற்றை உப யோகிக்கலாம். இவைபோன்ற சில அவசியமான ஆலோசனை களை யோசித்து ஓர் முடிவுக்கு வந்தோம். இதைவிடச் சில குழுக்களும் தெரிவுசெய்து, சிலகடமைகளையும் அவர்களுக்குப் பணித்துச் செயலாற்றச் செய்தோம். வடக்கு கிழக்கு மாகா ணமே மேல்மாடியில் குடிபுகுந்ததுபோல...பலப்பல இடங்களை யும் சேர்ந்த நாம்—இயக்கத்தின் கொள்கைப்பற்றுல் குடும்ப பாசம் கொண்டிருந்த நாம் ஓர்—குடும்பம்போல ஆனேம்.

தமிழரசுத் தந்தை அவர்கள் "நாம் தடுப்புக் காவலில் ஒழுகவேண்டிய தன்மைகளை" எடுத்துக் கூறினர். முன்னைய தடுப்புக் காவலின்போது நடைபெற்ற விவரங்களை திரு. அமிர்த லிங்கம் அவர்கள் கூறினார்கள்.

இன்று எமது தடுப்புக்காவல் குடும்பத்தில் இன்னும் நால் வர் வந்து சேர்ந்தனர். இல்லை இல்லை அரசினரால் சேர்ப்பிக் கப்பட்டனர்.

முன்னாள் நிரந்தரக் காரியதரிசி சேர். கந்தையா வைத்திய நாதன், ஜனப். மசூர் மௌலானா, எருக்கலம்பிட்டி கே. எஸ். ஏ. கபூர், முன்னாள் சொலிசிற்றர் ஜெனரல் திருச்செல்வம் ஆகியோர்.

ஆட்சியாளரின் தடுப்பு அதிகாரியின், பார்வையில் வெளி யாகும் பத்திரிகைகள், ஆட்சியினர்மட்டுமே ஊதும் வானொலி என்பனவற்றால் அறியமுடிந்த நாட்டுநிலைகளை அறிய முயன் றோம்; முடியவில்லை. ஆனால், இன்று புதிதாகச் சேர்ந்த நால்வரும் புதுச்செய்திகளை அறியத் தந்தனர்.

சுகயீனமானோரைப் பரிசோதிக்க இராணுவப் பகுதியைச் சேர்ந்த ஓர் டாக்டர் வந்தார். தபால் அனுப்புகிற ஒழுங்கும் இன்று செய்யப்பட்டது. உங்களுக்கெல்லாம் நான் கைது செய்தபிற்பாடு என்னவரனேன்? எங்கேயிருக்கின்றேன்? என் பதைக்கூட இனிமேல்தான் எழுதமுடியும். நாம் எழுதும் அஞ் சல்களை இரகசியப் பொலிஸ் பகுதி (C. I. D.) பரிசீலனை செய்தே சேர்ப்பிக்கும். சுகம்பற்றிமட்டுமே எழுதமுடியும்.

இப்படியாகப் புதிய புதிய வாழ்வுச் சுழலுள் இன்றைய பொழுதும் கழிகின்றது.

இன்னும் எத்தனையோ எழுத வேண்டுமே! நாளை வரை வேன்.

உன் அன்பு அப்பா;

புதுமைலோலன்.

# தடுப்புக்காவலில் நாம் - 3

பனுகொடை,
ஹோமகம,
**20-4-61.**

**என் அருமை மகள்**
**அன்பரசிக்கு.**

தடுப்புக் காவலில் வைத்து மூன்று நாட்கள் கடக்கின்றன. சுதந்திரப் பறவையாக யாழ்ப்பாணத்தெருவில் உலாவிய யான் —'ப' வடிவுகொண்ட மேல்மாடியில்மட்டுமே உலாவ வேண்டியுளளது.

மேல்மாடியில் ஏறக்குறைய இருபது அறைகள். அவ்வறைகளிலெல்லாம் தலைவர்களும் தொண்டர்களும், அறைகளுக்குப் போகலாம், அறைகளுக்கு முன் உள்ள விறுந்தையில் உலாவலாம். இதுதவிர மாடிப்படியைக்கூட எமது கால்கள் தீண்டமுடியாது. அதாவது பூமியை எங்கள் பாதங்கள் தீண்டுவதில்லை. ஒவ்வொரு அறையிலும் குளிக்கும்அறை, மலகூடம் ஆகியன இணைக்கப்பட்டுள்ளன. உணவுகூட மேன்மாடியின் மத்திய பகுதியிலாகும். மேன்மாடியிலிருந்து கண்ணுக்கெட்டியதூரம் பார்க்க முடியும்.

அவிசாவலைப் பக்கமாகவுள்ள மலைத் தொடர்கள். அத்தொடர்களில் பனிப்புகார் உறையும்காட்சி, இடைக்கிடை காணப்படும் தென்னை மரங்கள் ... சூழவுள்ள இராணுவக் கட்டிடங்கள், இராணுவத்தினர் தேகப்பயிற்சி செய்யும் காட்சி, அணிநடைபுரியும் காட்சி... இவைகளே கண்ணுக்குத் தெரியும். மூன்று நாட்களாகத் தொடர்ந்து பார்த்ததால், அச்சடப்பொருட்களும் எங்களுடன் வாழும் பொருட்கள் போலாகிவிட்டன.

பதினெட்டாவது இலக்க அறையில் எனது படுக்கை இருந்தது. இன்று எல்லோரும் அறையிலேயே சிந்தனைவயப்பட்டவர்களாக இருந்தனர். எல்லாரது இதயங்களும் அழுது கொண்டிருந்தன.

ஏன்? நேற்றுக் கைதாகி வந்தவர்கள்மூலம் 17-ந் திகதி இரவு யாழ்ப்பாணக் கச்சேரியடியில் நடந்தவற்றை யெல்லாம் ஓரளவில் கேள்விப்பட்டோம். ஆனுல், கூறியவர்களும் முழு வதையும் கூறினுர்களா? அவர்கள் தாமறிந்தவற்றையே கூறி னர்.

பதினேழாந் திகதி இரவு; நாம் கைதான இரவு......சாம நேரம், அலைஅலையாக யாழ்ப்பாணத் தியேட்டர்களிலிருந்து மக் கள்கூட்டம் கச்சேரியை நாடிற்றும். கச்சேரியின் சூழலெங்கும், இராணுவம் காவல் செய்தனராம். ஆட்சிபீடத்தின் கொடுமைக் கரங்கள் இரத்தஆறு ஓடச்செய்ய எண்ணியிருக்க வேண்டும்.

சடசடவெனக் கச்சேரியிலிருந்து இராணுவக்கும்பல் சத்தி யாக்கிரகிகளை நாடி வந்தனராம். ஒரு சத்தியாக்கிரகியை மூன்று நான்கு இராணுவவீரர் வீதம் தாக்கினராம். தலைவர்கள் யாவரும் கைதுசெய்யப்பட்டாயிற்து ...... அப்போது அங்கே நின்றவர்களில் உடுப்பிட்டி சிவசிதம்பரம் அவர்களும் வழக்கறி ஞர் நடராசா அவர்களும் தாக்கப்பட்டனராம். பெண்களின் வீரத்தைக் கூருது இருக்கமுடியவில்லை.

"எழுந்து செல்லுங்கள், எழுந்து செல்லுங்கள்" என இராணுவ அதிகாரி தயவாகக் கூறினுராம்.

பெண் சத்தியாக்கிரகிகள் அசையவில்லை. உரமாகக் கோபமுடன் கூறினுராம், பெண்கள் அப்போதும் அசைய வில்லை.

பெரியதொரு ஜீப்வண்டி வந்ததாம். அதில் ஏறச்சொன் னுர்களாம். பெண் சத்தியாக்கிரகிகள் அசையவில்லையாம்.

திருமதி இராசாத்தி என்ற பெண்ணின் வீரத்தையும் உறுதியையும் கண்ட இராணுவமே ஆச்சரியம் அடைந்ததாம். பெண்களைத் தூக்கி வண்டியிற்போட இராணுவம் எண்ணிய தும்......பெண்கள் வண்டியில் ஏறினராம். வண்டியில்கூட அவர் களது சத்தியாக்கிரகப்பாட்டு ஒலித்துக்கொண்டே யிருந்ததாம்

இவற்றையெல்லாம் கேட்கக், கேட்க நெஞ்சு விம்மிற்று. பழனி என்ற வாலிபன் மூர்ச்சையாகி, எழமுடியாத அளவுக்குத தூக்கப்பட்டாராம்: என்பதை அறிந்து தோள்கள் பூரித்தன.

வழக்கறிஞர் நடராஜாவின் வெண்மண்டை உடைக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டும், இதயம் பூரிப்பே அடைந்தது, சத்தியாக்கிரகிகள் காணும் துன்பம்—தன்னலமறுப்பு — துயரத்திற்குரியதல்லவே.!

சத்தியாக்கிரகிகளின் உடலிலிருந்து புறப்படும் ஒரு துளி இரத்தம் போதும் ..சரித்திரத்தை மாற்றியமைக்க ..! தமிழரின் வீரம் மடியவில்லை. துணிவும் தியாகமும் மாயவில்லை. அன்புக்குண்டாம் அகிம்சை யென்னும் பேராயுதம்கொண்டு மலையுடன் தமிழர்கள் மோதுகின்றனரா?

அகிம்சைக்கு மலையும் மடுவாகும்; கொடுமையும் பணிந்தேயாகும் ..காலம் காட்டப்போகும் உண்மைகள் மகளே உண்மைகள்!

இவற்றை யெல்லாம் அறிந்துகொண்ட நேரத்திலேயே; யான் இக்கடித ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல எமது இதயம் அழும்செய்தியும் கேள்விப்பட்டோம். உடுப்பிட்டிப் பிரதிநிதி மு. சிவசிதம்பரம் அவர்கள் பதினேழாந் திகதியிரவு கடுமையாகத் தாக்கப்பட்டதால்...'' எப்படி எழுதவென்றே தெரியவில்லை? ......எங்களை யெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டாரென, அதாவது அமரராகிவிட்டாரெனக் கேள்விப்பட்டதும்......உடல் நடுங்கியது: உள்ளம் நினைவற்றுமரத்தது.

ஐயகோ!...... தமிழ்க் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதியாக விருந்தும்; ஆண்மையாளராக—வீரத்தமிழனாக—போராட்டத்தில் முக்கிய பங்குகொண்ட தலைவர்......தண்மையும், பெருமையும், தொண்டு மனமும் நிறையக்கொண்டிருந்த தலைவர் ...... சில காலத்துள் மக்களின் மதிப்பை அபரிமிதமாகப் பெற்றுக் கொண்டுவிட்ட சிவசிதம்பரம் எங்கே? எங்கே?

அயல்வீட்டு மல்லிகையின் மணங்கண்டு மகிழக்கூடாதா? என்ன? எங்களது தமிழரசுப் பாசறையில் இல்லாவிட்டாலும், தமிழ்க்காங்கிரசுக் கட்சியை ஆதரித்துவரும், மிகச்சிறு கூட்டத்தவர்கள், சிவசிதம்பரத்தின் தன்னலமறுப்புக்கண்டு மகிழலாம். தமிழரசுக்கட்சியின் பாடிவீட்டின் உத்தமராக திரு. சிவசிதம்பரம் மதிக்கப்பட்டார். அவரது சொற்பொழிவுகள் அவரது பாராளுமன்றப் பேச்சுகள்; அரசியல் நடத்தைகள்; என்பன யாவும் தமிழரசுவாதி போன்றேயுள்ளன? ஆனால் இன்னும் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினராக விருப்பது ஏன்—என என்னையே யான் கேட்டுப்பார்த்திருக்கிறேன் பலமுறை. விரைவில் தமிழரசு இயக்கத்தில் உறுப்பினராகி, உள்ளும் புறமும் தூய்மையுடன், தமிழரசுக்கட்சியினர் ஆவார் என்றே நானும் பலரும் எதிர்பார்த்தோம். ஏனெனில், அரசியலில் சிறந்த ஒரு தலைவன் எப்போதும் நடிகனாக அமைவதில்லை? தோல்வியணைப்பினும் இலட்சியத்துக்கே மதிப்பளிப்பான்?

ஆகவே, திரு. சிவசிதம்பரம்—சத்தியாக்கிரகத்தின்போது நடந்துகொண்ட உயர்தன்மைகளைக் கண்டு, மேற்குறிப்பிட்டவை போலத்தானே கருதமுடியும்?

அப்படிப்பட்ட தமிழர் தலைவர் ...... அமரராகிவிட்டாரா? தாங்கமுடியாத வேதனையின் சூழலில் அகப்பட்டோம்! பூமித்தாயையே மிதிக்க முடியாது மேன்மாடியில் அந்தரத்தில் வாழும் நாம்... —எதைத்தான் செய்யலாம்? மனதினுல் குமையலாம், வாதனைகொண்டு உலவலாம்.

எங்களுக்கு "தினகரன், வீரகேசரி, டெயிலிமிறர், ஒப்சேவர்" ஆகிய பத்திரிகைகள் தந்தனர். அவைகளிலாவது திரு. சிவசிதம்பரம் அவர்களின் நிலைபற்றி இருக்காதா எனத் தட்டித் தட்டிப் பார்த்தோம்.

ஊரடங்குச் சட்டமும் அவசரகாலநிலையும் காரணமாகப் பத்திரிகைகள் எதைத்தான் எழுதமுடியும்?

மாலை ஆகியது. மல்லாகத்தைச் சேர்ந்த—தமிழரசுத் தபாலதிகாரி—திரு. சு. நடராசா (வழக்கறிஞர்) கைதாகி வந்தார்.

அவருக்கெனத் தனிவிசேட விமானம், யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவந்ததாம். அவரைக் கண்டதும் எல்லார் இதயத்திலும் ஒருசிறு துள்ளல் எழுந்தது. ஏனெனில் சிவசிதம்பரம்பற்றி அறியலாமல்லவா? நடராசா அவர்கள் மேன்மாடியை அடைந்தார், தலையில் கட்டுகளுடன் காணப்பட்டார். எங்களியக்கத் தவர்கள் குடும்பபாசம் கொண்டவர்கள் போன்று உறவாடுவோம். சொந்தச் சகோதரர்கள் போன்று பழகுவோம் நடராசா அவர்களின் அரசியல் வாழ்வைக் கூர்ந்து கவனித்தேன் பலமுறை.

**எத்தனையோ தலைவர்கள் தூரத்துப் பச்சைகள். அவர்களுடன் நெருங்கினால் .....ஆச்சரியப்படும்படியான, நம்பமுடியாத, தலைவராக விருக்கமுடியாத பலதன்மைகளைக் காணலாம்.** ஆனால், நடராசா சாதாரண ஒரு தொண்டர் போன்றே என்றும் கட்சியில் இயங்கி வருகின்றார். அவரிடம் தலைவருக்கிருக்க வேண்டிய பண்புகள் பலவற்றைக் கண்டவன்......ம்! அவர்பற்றியல்லவா எழுத ஆரம்பித்துவிட்டேன்.

"சிவசிதம்பரம்"... என்று ஆரம்பித்தோம். "நலமே, சுகமே" காயங்களுடன் உள்ளார் என்றார் நடராசா-

அப்பாடி! மகிழ்ச்சி மூச்சு எழுந்தது! சிறப்புக்குரிய சிவசிதம்பரம் வாழ்கின்றார்...வாழ்க பல்லாண்டு! எல்லோரும் அமைதி யடைந்தோம். யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை என்ன?...நடராசா கூறத்தொடங்கினார். இடையே நல்லூர்ப் பிரதிநிதி நாகநாதன் உங்களுடன்தானே?" என்றார்.

எ...ன்...ன?

நாகநாதன் எங்கே? - கைதும் ஆகவில்லையா ......எங்கே? எங்கே...?

நாகநாதன் பற்றிப் பலவாறு நினைக்கக்கூடியதாக எமது நிலையமைந்தது.

அன்பு! மணியடிக்கிறது—இராச்சாப்பாட்டிற்காம். நாளை மீதி—.

அன்பு அப்பா,

"புதுமைலோலன்."

# தடுப்புக்காவலில் நாம் - 4

பனுகொடை;
ஹோமகம,
21-4-61.

என் அருமைமகள்
அன்பரசிக்கு;

பனுகொடையில், மேல்மாடி தவிர வேறுஎங்குமே போக முடியாது தடுத்துவைத்து, நான்காவது நாள் ஆகிவிட்டது.

சென்ற மூன்று மடல்களேயும் படித்தவர்கள், ஆவலுடன் மறுகடிதங்களேயும் எதிர்பார்க்கவே செய்வர்; நீகூட அப்பாவின் மடலே கையில் எடுத்துக்கொண்டு, 'அப்பா அப்பா' என்று ஒலிப்பதுபோலக் கேட்கின்றதே! சென்றமடலில் மல்லாகம் வழக்கறிஞர் நடராசா வருகையால், யாழ்ப்பாணப் புதினங்களே, ஆட்சியாளரின் அடக்குமுறைப் பாணங்களேக் கேட்டோம். மக்களாட்சி எனப் பேசும் — ஜனநாயகம் எனக் கூறும் — சிறிமா அரசின் அட்டுழியங்களேயெல்லாம் கதை கதையாக நடராசா அவர்கள் கூறினுர்கள்.

நடராசா அவர்களேக் கைதுசெய்தமை ஒன்றே போதுமே அரசின் அட்டுழியத்தை உணர்த்த; நாலு ஐந்து பொலிஸ் ஜீப் நடராசா அவர்களின் இல்லத்தை சூழ்ந்தனவாம். மல்லாகம் சந்தியிலிருந்து ஒரே பொலிஸ் கும்பலாம். சிறையென்றதும் ஒளியும்தன்மை தமிழரசுக்கட்சியிடம் கிடையாதே! பின்பு எதற்காக இத்தனே ஆர்ப்பாட்டங்களோ! நடராசா அவர்களேக் கைதுசெய்து, காங்கேசன்துறை வாடி வீட்டிற்குக் கொண்டுபோனுர்களாம். நடராசாவை சூழ இருந்த பொலிஸாரும், பொலிஸ் அதிபரும் நழுவ — இராணுவத்தினர் சூழ்ந்தனராம். P. M. G. (பி. எம். ஜி)......ம்! தமிழரசுப் பி. எம். ஜி. எனக் கூறி இடிக்க ஆரம்பித்தனராம்.

சத்தியாக்கிரகத்தின் கடைசி நாட்களில் 'தமிழரசுத் தபாற் சேவையை ஆரம்பித்தோம் அல்லவா? அச்சேவைக்கு போஸ்ற்

மாஸ்ரர் ஜெனரல்' ஆக நடராசா அவர்களே கடமை செய்தார். அதனுல் பி. எம். ஜி. என்று கூறிக் கூறிக் இடித்தார்கள்; அடித்தார்கள்; குத்தினுர்கள்.

பாதுகாப்பு செய்யப்படவேண்டிய கைதி, அவசரகாலத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட கைதி...... ஈழநாட்டின் துரைத்தனத்தில், பொலிஸாரால் தண்டிக்கப்படவேண்டிய காட்டுமிராண்டித்தனம்!

கொடுமைகள் நீதிமுன் தலைசாய்க்கும். வீறுபேசிய அரசுகள் மண்ணேடு மண்ணுகிப் புதைக்கப்பட்டவை எத்தனை! எத்தனை! ஆட்சிஅதிகார மமதையில் பாதை நழுவியோர் சரிந்து விழுந்த சரிதைகள் ஆயிரம்! ஆயிரம்! நீதி சாவதில்லை. கொடுமை நிலைப்பதில்லை. எதிர்காலம் இவற்றுக்கெல்லாம் இறுக்கும் பதிலை எங்கள் கண்களால் காணமுடியும்.

அடியையும், இடியையும், குத்தையும் புன்முறுவலுடன் நடராசா அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இலட்சியவாதியின் உள்ளத்து வெடிப்பு......ஆட்சியை வெடிக்கச்செய்யும். நீதியே நீயே கேள்!

நேற்று, உங்கே — அதாவது யாழ்ப்பாணம் பூராவும் ரிக்கற் இல்லாது மக்கள் பிரயாணஞ் செய்கின்றனராம். பொலிஸ்தானங்கள் நிறைய, அவர்களை அடைத்துள்ளனராம். சுன்னுகம் குறிப்பிடக்கூடிய சிறப்புடன் இப் போராட்டத்தில் ஈடுபடுகின்றதாம். ஒத்துழையாமை இயக்கத்தில் இதுவும் ஒரு வழியாகும். அடி, உதை, குண்டு, சிறை, அவசரகால நிலை..... என எத்தனையோ அச்சமூட்டும் சாதனைகள் ஆட்சி புரிந்துமென்ன...... மக்கள் எழுச்சிகொண்டால்; நாட்டுப்பற்றுடன் புரட்சிசெய்ய ஆரம்பித்தால்...... அரசு தூளாகும். இது வரலாறு காட்டும் பேருண்மை!

நேற்றுத்தான் உன் அம்மாவிற்கு ஒருமடல் எழுதிக் கொடுத்தேன், இரகசியப் பொலிஸ் பகுதி எப்போது சேர்ப்பிக்குமோ தெரியாது. இன்று நல்லூர்ப்பிரதிநிதி ஈ. எம். வி. நாகநாதன் அவர்கள் கைதாகி எம்முடன் வந்து சேர்ந்தார்.

சிவசிதம்பரம் காயப்பட்டாலும், சுகமேயிருக்கும் செய்தி, நாகநாதன்மூலம் உறுதியாகியது. நாகநாதன் அவர்களைப் பார்த்து இத்தனைநாட்களும் எங்கே இருந்தீர்கள் எனக் கேட்டேன். அவர் ஒரு அருமையான — கேட்க ஆச்சரிய மடையக்கூடிய சம்பவத்தைக் கூறினுர். அச்சம்பவத்தை நீயும் அறியத்தானே வேண்டும்.

அரசியல் போராட்டங்களின்போது, எத்தனையோ தலைவர்கள் தலைமறைவாக இருந்து, ஆட்சியை அசைத்திருக்கின்றனர் அல்லவா? அப்படித்தான் நாகநாதனும் செய்பவினைத் தாரோ என எண்ணுகிருயோ.

இல்லை! அவசரகாலநிலை ஏற்படுத்தியபிறகு பாராளுமன்றம் கூடி, அவசரகாலநிலை ஏற்படுத்தப்பட்டமையைச் சபைக்குத் தெரிவிக்கவேண்டியதும், வாதிக்கவேண்டியதும் கடமையாகும். அப்பாராளுமன்றத்தில் பங்குகொள்ளவேண்டுமென நாகநாதன் விரும்பினுர். கைதாகமுன்பு, பாராளுமன்றத்தில் முழு உண்மைகளையும் கூற ஒரு வாய்ப்பைப் பெற முனைந்தார்.

நாகநாதன் அவர்களும், சிவசிதம்பரம் அவர்களும் மாறு வேடம் போட்டனர். நாகநாதன் ஒரு பாதிரியாக மாறினுர். வழுக்கைத் தலையும், அவரது தோற்றமும் பொருத்தமாக அமைந்ததாம். சிவசிதம்பரம் ஒரு சாதாரண தொழிலாளி போல உருமாறினுராம். சனங்கள் குறைந்த கோண்டாவில் புகையிரத ஸ்தானத்தில் புகைவண்டி எடுத்து கொழும்பு சென்று, நேரே பாராளுமன்றத்தில் நுழைந்துவிடத் திட்டம். பாராளுமன்றத்துள் வைத்து ஒரு பிரதிநிதியைக் கைதுசெய்ய மாட்டார்களாம். கோண்டாவில் ஸ்தானத்தில் இருந்த யாருமே இவர்களைப் புரிந்துகொள்ளவில்லையாம். நாகநாதன் அவர்களும் அடிக்கடி தனது வாயின் நாடிப்பகுதியை ஆட்டி ஆட்டி வயதுசென்ற பாதிரிபோல நடந்துகொண்டாராம்.

"புகைவண்டி ஓடாது; ஊரடங்குச் சட்டமல்லவா?" என்ருராம் ஸ்ரேசன் அதிபர். உடனே சிறு சிறு வீதிவழியே

மோட்டார் வண்டிமூலம் பிரயாணத்தை ஆரம்பித்தனராம். பூநகரி ஊடாக மன்னார்ப்பாதையடைந்து, புத்தளம் வழியாக கொழும்பை அடையஎண்ணிப் புறப்பட்டனராம். பூநகரிக்கப் புறம் எங்குமே காவல். இராணுவ நடமாட்டம், எனவே பாராளுமன்றம் போகும் எண்ணம் தடைப்பட்டது. இரண்டு மூன்று நாட்கள் தங்கி, மிக முக்கியமான கட்சித்தொண்டுகளை செய்துகொண்டனராம். பின்பு நல்லூரில் அவரின் சொந்த வாசஸ்தலத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டாராம்.

இன்று எங்கள் தடுப்புக்காவலைச், சுற்றிக் கம்பிவேலி சுருள்சுருளாக அடைக்கின்றார்கள். ஐயகோ...... எத்துணை பாதுகாப்பு ......—ம்ம்! செய்யட்டும். இன்று பொலிஸார் முழுப்பேரும் மாற்றப்பட்டுள்ளனர். பொலிஸ்மூலம் எதையாவது கைதிகள் செய்துவிடுவரென்ற அச்சமோ என்னமோ தெரியவில்லை. பார்த்த பொலிஸ்முகங்களை இன்று காணவில்லை. இத்தனை பொலிசாரிலும் தமிழ்ப் பொலிஸ்முகம் ஒன்றையும் சந்திக்கமுடியவில்லை.

இன்று பருத்தித்துறைப் பிரதிநிதியவர்கள் தாலாட்டொன்று பாடினார். உன்தம்பி அன்பழகனுக்குப் பாட உதவும், வீரம் செறிந்த தாலாட்டு. இத்தாலாட்டுக்களைத்தான் பழைய தாய்மார் பாடினர். பிஞ்சு உள்ளங்களிலேயே வீரத்தை விதைத்தனர். அதனால் அன்றையத் தமிழன் வீரமகனாய், விறல் கண்டான். அந்தநிலை எமது நாட்டுக்கு இன்று அவசியந் தேவை. கோழை வேண்டாம். வீரரே இன்று தேவை!

அப்படியான வீரமடந்தையாக, பண்பும் வீரமும், தன்மானமும் உள்ள பெண்ணாக, உன்னை வளர்க்கவே விரும்புகின்றேன். அதேபோன்று ஈழநாட்டுக் குழந்தைகளும் வீரர்களாகவே வளரட்டும்.

பெண்களும் அரசியலில் பங்குகொள்ளலாமா? எனக் கேட்போரும் உளர். சத்தியாக்கிரகத்தை உற்சாகம் குன்றாது நடத்தியவர்களில் பெண்களுக்கும் அரிய பங்கு உண்டல்லவா?

இதோ எங்களுடன் தடுப்புக்காவலில் உள்ள மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள். ஈழத்துச் சரித்திரத்தில், தடுப்புக்காவலில் — அரசியல் காரணமாக — வைக்கப்பட்ட முதல் பெண் மங்கையர்க்கரசி என்றே எண்ணுகின்றேன். பெண்மையும் மென்மையும் கொண்ட ஒரு பெண் — நாட்டுக்காக, தமது இரு சின்னஞ்சிறு குழந்தைகளை விட்டு...... அதுவும் பெண்பிரதமர் உள்ள நாட்டில்...... இங்கிலையா?

ம்! தடுப்புக்காவலில் உள்ளோரையெல்லாம் உனக்கு எழுதவுள்ளேனே. அப்போது மங்கையர்க்கரசிபற்றியும் எழுதுவோமே —

உன் அப்பா சுகமே உள்ளார், உன் அன்பு வதனத்தைக் கற்பனைசெய்து, அதில் லயித்து...... அன்பரசி என என் மூச்சுப்புறப்பட வாழ்கின்றேன். காலமே ஓடு...... மற்றவை பின்பு—.

அன்பு அப்பா;
**புதுமைலோலன்**

# தடுப்புக்காவலில் நாம் - 5

**தடுப்புக் காவல் நிலையம்,**
பனுகொடை,
ஹோமகம.
**22-4-1961**

**என் அருமை மகள்**
**அன்பரசிக்கு,**

இன்று உனக்கு மிக முக்கிய சம்பவமொன்றை அறியத் தரவேண்டியுள்ளது. தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்களும் அவரது பாரியாரும் எங்களது தடுப்புக்காவல் குடும்பத்தில் இருந்தனரல்லவா?

செல்வநாயகம் அவர்கள் உடல்நிலையைக் கண்ட யாவரும், ஐயகோ! இந்நிலையிலுமா தடுப்புக்காவல் என்று வேதனையுடன் பெருமூச்சுக்களை வார்த்தையாக்குவர்! அவரது தினக் கடமைகளுக்கு உதவியாகப் பாரியாரும் வந்திருந்தார். என்றாலும் கூடக் கைதிக்கு நோயுடலுக்கு ஏற்ற உணவுவகைகளோ மருந்து வகைகளோ கிடைக்குமா? அதனால் வரவர மோசமான உடல் மெலிவையடைந்தார் தமிழரசுத் தந்தை. தடுப்புக்காவல் முகாமைத் தினமும் பார்வையிட்டவரும், இராணுவப்பகுதியில் கடமையாற்றும் டாக்டர் அரசினருக்கு அறிவித்திருக்க வேண்டும்.

செல்வாவின் சுகம் ஈழத்தமிழரின் சுகம் போன்றதல்லவா? எங்களுக்குக் காவல் தலைவராக இருந்த பொலிஸ் அதிபர் செல்வநாயகம் அவர்களிடம் வந்தார். உங்களை வீட்டுக்காவலில் வைக்குமாறு டெலிபோனில் அறிவித்துள்ளனர். உங்களது உடம்புக்கு இவ்விடம் பொருத்தமாயில்லையென டக்டர் கூறியுள்ளார். எப்போது போகப்போகிறீர்கள் எனப் பொலிஸ் அதிபர் கேட்டார். செல்வாவின் உடல் நோஞ்சான். உள்ளம் உருக்கு இரும்பாச்சே. அவரது வாயில் சிலவேளைகளில் ஏற்படுமே அந்தப் புன்முறுவல்....

நான் இங்கேயே இருக்கப்போகிறேன்; அதுவேன் எனக்கு மட்டும் வேறுவிதி என்றார் செல்வா அவர்கள். அரசியல் போராட்டங்களில் கைதியாகச்சென்ற பல தலைவர்கள் சுகயீனம் என்று கூறி வைத்தியசாலைகளில் தங்கிக் காலத்தையோட்டும் விந்தைகளையெல்லாம் அரசியல் உலகில் கண்டிருக்கிறேன்; கேட்டிருக்கிறேன். ஆனால் நமது தலைவருள்ளும் புறமும் ஒரே எண்ணத்தையே நிலையாகவும் உறுதியாகவும் கொண்டவர். தமிழரசுக்கட்சியின் ஆரம்பம்தொட்டு இன்றுவரை நேர்மை என்பதே அவரது அரசியல் ஆயுதம்.

"அரசியல் போக்கிரிகளின் புகலிடம்" என்றோர் மொழி உண்டல்லவா? ஆண்டாண்டாக நாம் சந்தித்த தலைவர்களும் இம்மொழியை உறுதிப்படுத்தினர். உண்மை என்பதற்கு சாட்சியாயமைந்தனர். ஆனல் செல்வநாயகம் அவர்களது வாழ்வையும் அரசியலையும் பார்க்கும்போது இவ்வார்த்தை அர்த்தமற்றுப் போகின்றது. அரசியலில் நேர்மை என்றும் மதிப்புப் பெறும்; வளரும் என்றல்லவா செல்வாவைவைத்துப் பார்க்கும்போது கூறவேண்டியுள்ளது. எதிரிகளும் மதிப்பளிக்கக்கூடிய, யாவரும் கண்ணியப்படுத்தக்கூடிய ஈழத்துத் தலைவர் யார்?

அன்பு, அறிவு, மனச்சாட்சி மக்களுக்கான தலைமை இத்தனையும் சேர்ந்த கூட்டுத்தான் செல்வநாயகம் அவர்கள். ஈழத்தமிழ் பேசுமினத்தின் எதிர்காலத்தை செல்வா அவர்களிடம் ஒப்புதலுடன் மக்கள் மனமுவந்து கொடுத்துவிட்டனரே. இந்த இடத்தில் உனக்கு இதையும் எழுதவேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் எங்கள் தந்தைக்கு உள்ள மதிப்பைக்காட்ட மேற்குறிப்பிட்ட பத்திரிகைச் செய்தியே போதுமானது.

சிங்கள மத்தியில்கூட மதிப்புக்கும் மாண்புக்கும் நிறைவாகிவிட்ட செல்வா அவர்களைப்பற்றி தமிழர் மத்தியில் கட்சி பேதம் காரணமாகத் தூஷிக்கும் சிலரையும், சில தான்தோன்றிப் பத்திரிகைகளையும் காண ஆச்சரியமே உண்டாகின்றது.

பொன்னம்பலம், இராமநாதனுக்குப் பிற்பாடு தமிழ்பேசும் மக்கள் மத்தியில் உதித்த விடிவெள்ளியாகிய செல்வநாயகம்

அவர்களை தூஷிப்பதற்காகவே பேனுபிடித்த தமிழ் பத்திரிகாசிரி யர்களை நாமறிவோம். வழியெதுவும் காட்டாது எல்லாம் பிழை பிழையென; — அதாவது சிங்கள மக்கள் மத்தியில்கூட நமது தலைவருக்கு அபரிமிதமான மதிப்பு இருக்கின்றதென்பதை நீயுணர வேண்டும். தேர்தலில் செல்வாவின் வெற்றிகேட்டு பட்டாசு வெடித்து 'செல்வநாயகம் மாத்தையா ஜெயவேவா' எனக் கோஷமிட்ட சிங்களச் சகோதரர் ஆயிரக்கணக்கில் உண்டு.

சிலநாட்களுக்குமுன்பு சிங்களப் பத்திரிகையாகிய தினமின என்ற பத்திரிகை செல்வநாயகம்பற்றி எழுதியது. அப்பத்திரி கையிலிருந்தவற்றில் சில வரிகளைப் படித்துப்பார், உண்மை பட்டெனப் புரியும்.

— இன்று தமிழ்பேசும் மக்களின் ஏகத்தலைவராக விளங்கு பவர் சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர் களே. சமஷ்டிக்கட்சியார் அவரை இலங்கையின் காந்தியார் என்பர். காந்தியல்ல ஜின்னு என்பர் சிலர். நிமிஷத்துக்கு ஒன்று இரண்டு அடிவேகத்தில் நடந்து அங்கிங்கு பார்க்காது நடுநடுங்கி ஆசனத்தில் அமர்வதற்கே இரண்டுமூன்று நிமிடங் களைச் செலவிடும் அறுபத்துமூன்று வயதுடைய தமிழ்த் தலை வர், பேசுவதுகூட எவருக்கும் கேட்குமோ கேட்காதோ என்ற நிலையில் தானிருக்கும். அப்பேச்சை யாரும் தடைசெய்வது கிடையாது. தமிழர் சம்பந்தப்பட்ட விடயங்களில் செல்வா என்ன சொல்வாரோ என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு சிறு எறும் புக்கும் துன்பம் உண்டாவதைக் காணச் சகிக்காத மனப்பான்மை உடையவர். பொறுமைக்கும் நேர்மைக்கும் உறுதிக்கும் உறை விடமாய் உள்ளவர். அரசியல் தூரசிருஷ்டி அபாரமாக இவரிட முண்டு. சந்தனமரக்காட்டிலே வளரநேரிட்ட ஒரு நச்சுமரமும் தன் தன்மை இழந்து சந்தனமணம் கமழ்வதுபோல பதவி மோகம் அதிகாரவேட்கை காரணமாக கட்சியில் நுழைந்தோர் கூட தமிழரசுத்தந்தை செல்வநாயகத்தின் கூட்டுறவால் தியாக சீலர்களாகிவிடுகிருர்கள் —

அரசியல் எழுதும், 'தமிழன்' பத்திரிகையையும் நாமறி வோம். கண்ணியமோ கட்டுப்பாடோ கடமையுணர்வோ அர

சியல் நாகரிகமோ தெரியாதவர்களின் பேனு எழுதவா செய்யும்? திட்டுவதில் மகிழும், ஆனுல் உண்மை மாசு அடைவது கிடையாதே! தமிழ்பேசும் மக்கள் பொய்மையை என்றுமே ஆதரிப்பது கிடையாது. ஆர்ப்பாட்டமூலம் மக்களைக் கவர்ந்து, பதவி என்ற மங்கையில் மயங்கி, அரசியல் விபச்சாரிகளாகி — அதன்மூலம் தமிழ்பேசுமினத்தை விற்றுவிட்ட தலைவர்களைத் தூக்கி எறிந்த மக்கள், தராசு போன்றவர்கள்; நடுநிலையைத் தெரிந்துகொண்டவர்கள்; அதனுல் தமிழ்பேசுமினத்தின் தியாகச் செம்மலை பலம் வாய்ந்த தமிழரசு இயக்கமூலம் வலுக்கொடுத்துவிட்டார்கள். ஈழத் தமிழ்பேசுமினம் செல்வாவின்பின்னே ஏறு நடைபோடுகின்றது.

நாடு பெரும் கொந்தளிப்பில் சிக்கியது. தமிழர் வீடுகளில் கல்லெறி, துப்பாக்கிவேட்டு, தடியடி என்பவற்றுல் இம்சிக்கப்பட்டனர். இராணுவம் வெறியாட்டம் ஆடியது. வேண்டாத நிகழ்ச்சிகள், கேட்கமுடியாத வேதனைநிகழ்ச்சிகள் நடந்தன.

**“சிறைக்கதவுகளைத் திற! அவை எமக்குப் பூஞ்சோலை! நாடுகாக்கும் பட்டாளத்தை உன் துவக்குவீரர் என்னதான் செய்வார் பார்ப்போம்” — எனத் தலைவர் மயிர்க்கூச்செறியக் குரல்கொடுத்தார். மூக்கின்மீது விரல்வைத்து ஆச்சரியப்படக் கூடிய — ஈழச்சரித்திரமே காணுத போராட்டத்தைத் தீரமுடனும் உறுதியுடனும் நடாத்தினுர்.**

அரசினரின் மனதில் வெறுப்புணர்ச்சி, கிளர்ச்சியை அடக்க கொடுமையும் சித்திரவதையும் .. அதனுல் தமிழ்பேசுமினம் புடமிட்ட தங்கமாக மாறிற்று! வேதனையிலும் கொடுமையிலும் வியர்வையிலும், இரத்தத்திலும் நாடு போராடியது — ஏன்? ஒரு கொள்கையை அடிப்படையாக வைத்துப் பணியாற்றும்போது, நாளாக அக்கொள்கை மக்கள் மத்தியில் எத்தனை தூரம் பதிந்துவிடுகிறது, வெற்றிக்காக தியாகம் செய்யும் மனப்பான்மை எத்தனை தூரம் விரிவடைகிறது; பரவுகிறது. எல்லாரையும் உறுதி நெஞ்சினர் ஆக்குகிறது; இந்நிலை வெற்றிக்கு வித்தாகும் ... இதையாக்கிவிட்ட தலைவர் யார்?

இத்தலைவருக்கு இன்றுள்ள செல்வாக்கும் அதனை ஈட்டிய அவர் ஆற்றியுள்ள அரும்பெரும் பணியும் அபாரம். எதற்கும் அஞ்சாத, நேர்மைக்கு மட்டுமே அஞ்சும் சுபாவம் கொண்ட அவரைத் தமிழினம் தமது உயிருடன் சேர்த்துக்கொண்டதேன்? அன்புவழியிருந்தது? தியாகவழி இருந்தது, எதையும் தாங்கும் இதயம் இருந்தது; மக்களுக்காக வாழும் பான்மை நிறைய இருந்தது — அதனாலே ஒரே தலைவராக மாறினார் செல்வநாயகம் அவர்கள்.

அன்பு! அந்தத் தியாகியாகிய தந்தை செல்வாவுடன் நாம் வாழும் தடுப்புக்காவல் நிலையம் பெருமைப்படும் இடமாகவல்லவா அமையும். அவருக்கேற்ற திருமதி, கொள்கையின் மாறாத உருவம்! அவரின் பாரியாராக அமைந்தமையையும் கண்டோம்.

செல்வா அவர்களின் பாரியார் தமது கணவனின் குணநலன்களைக் கூறும்போது கேட்கவேண்டும். நேற்றுமாலை நானும் திருமதி செல்வநாயகம் அவர்களும் பேசிக்கொண்டிருந்தோம். செல்வா அவர்களது இளமைக்கால வாழ்வு; கொள்கையில் உறுதியான இளமை வாழ்வு; படிப்புக்காலம், என்பவற்றைக் கேட்டேன். ஒரு தலைவருக்குரிய குணநலன்கள் இளமையிலேயே அவரிடம் நிறைய இருந்திருக்கிறதென்பதை உணரமுடிந்தது. அவைபற்றி இன்னொர்நாளைக்கு எழுதுகின்றேன்.

வீட்டுக்காவலில் வைக்க உத்தரவு செல்வா அவர்களுக்கு சட்டரீதியாக வந்தது. உரிய பத்திரத்தைப் படித்தபின்பு, புறப்படத்தானே வேண்டும். செல்வநாயகம் அவர்களும் திருமதி செல்வநாயகம் அவர்களும் தனித்தனிவந்து விடைபெற்றனர். செல்வாவின் கண்களிலே துயரக்கோடு கட்டியிருந்தது —

வாழிய செந்தமிழ் என்ற பாரதியார் பாட்டை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பாடினார். திராவிடப் பொன்னாடு என்ற கண்ணதாசனின் பாடலை மட்டக்களப்புப் பிரதிநிதி இராசதுரை அவர்கள் பாடினார்கள், இவற்றைக்கேட்ட செல்வா உருகியேவிட்டார். அவ்வமயம் தந்தையின் கன்னம்வழியே கண்ணீர் வாய்க்கால்கட்டி ஓடிற்று. எங்களையறியாமலே எங்கள்

கண்களும் கலங்கின...... பொலிஸ் பாதுகாவலுடன் அவரது வீட்டுக்கு, வீட்டில் தடுத்துவைக்க அழைத்துச் செல்லப்பட்டார். உள்ளத்தில் குடியேறிவிட்ட ஒப்பற்ற தலைவர் பிரியாமல் பிரிந்து... மெலிந்த கரங்களை அசைத்து... போய்விட்டார்.

இன்று வவுனியாவைச் சேர்ந்த கைலாயபிள்ளை கைதாகி, வந்தார். இவர் யான் தங்கும் அறையிலேயே தங்கி வருகின்றார். இவர்மூலம் யாழ்ப்பாணம், வவனியா நிலைகளைக் கேட்டு அறிந்தோம்.

இன்று கட்டைகளை அடுக்கி விளையாடும் ட்ருவ் போட் (Drapt Board) தந்தனர். சிலர் அவ்விளையாட்டில் மூழ்கினர். செல்வாவின் பிரிவினுல் அவர்பற்றிப் பேசிப்பேசி நேரமெல்லாம் கழித்தோம். அன்பு! தமிழன் உயர்வடையும் காலம் ஒன்றிருந்தால், உரிமையடையும் காலம் ஒன்றிருந்தால், அது செல்வநாயகம் காலமென்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையை தமிழுலகு வைக்கலாம். செல்வா வாழும்போது நமக்கேன் அச்சம். மகளே! நிமிர்ந்து ஒளிபெற்ற கண்ணினராய் நாம் வாழ செல்வா நீடூழி வாழட்டும்!

அன்பு அப்பா.

புதுமைலோலன்

தடுப்புக்காவலில் நாம் 6

தடுப்புக்காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம;
*23-4-1961*

என் அருமைமகள் அன்பரசிக்கு,

இப்போது அந்தியின் அந்திநேரம்; அதாவது பகலும் இரவும் யுத்தம் புரியும் பொழுது, இரவு வெற்றி பெற்று விடுவான்போல் இருட்டுகிறது. எனினும் இருட்டுக்கு மட்டுமா இவ்வுலகு சாஸ்வதமாகும்? இன்னும் சில மணித்தியாலங்கள் ஓடிவிட்டால் திரும்பவும் பகல் வரவே செய்வான். இக்காட்சியை என் அறையின் யன்னலூடாகப் பார்த்தபடி மடல்வரைய ஆரம்பிக்கின்றேன்,

"பகல் போனால் இருட்டு, இருள் போனால் பகல்—அதேபோல ஈழத்தமிழ் பேசும் மக்கள் இன்று இருட்டில் இருக்கிறார்கள். சுதந்திரம் என்ற ஒளி ஞாயிறு வரும்வரையும் இருட்டில் இருக்கவேண்டி அமைந்துவிட்டது. இருள் தானே என்பதால் வெறிபிடித்த திருடர் கூட்டம் தமிழ்பேசும் இனத்தின் மடியிலேயே கைபோட்டு உரிமைகளைப் பிடுங்கிவிட்டார்கள். சொந்தச் சகோதரரான மலைநாட்டுத் தமிழரின் உரிமையையும் எங்கள் குடி உரிமையையும் பிடுங்கிய திருடர் கூட்டம் எமது விழியிலே கன்னக்கோல் கொண்டு குத்திவிட்டார்கள். அந்த விழிதான்......தமிழ் மொழி உரிமையை இழந்து தனித்தன்மையில் பங்கம் ஏற்பட்டு விழியில் இரத்தம் ஒட—தமிழர் இருளிலே போகும் போது, இந்த இடருக்குக் காரணர் யார் எனவும், எண்ணத்தானே செய்வர். ஒளி காட்டுகின்றோம். வழிதெரிகின்றது என மெழுகு திரி போன்ற உருகுமொழியுடன் அழைத்தது ஒரு கூட்டம். அக்கூட்டத்தில் தமிழ்ச்சாதி தமிழ்ச்சாதி என அலறும் வீரதீர சூரர் ஆகிய ஒரு நியாயவாதி இருந்தார். உருட்டும் விழியையும் வரட்டுக்கொள் கையையும் காட்டி மக்களின் உள்ளத்தைப் புரட்டினர்,

உரிமை ஒளியைக் காண இவர் பின்னால் தமிழர் கூட்டம் சென்றது,

இந்து மதத்தின் பாதுகாவலர் நானே என மத வகுப்பு வாதத்தை வளர்த்து, சன்மார்க்கம் என்பது குறுகிய மதக் கொள்கை என்பதை மெய்ப்பித்து, தமது கல்லூரி மாணவியரை காலத்துக்குக் காலம் மந்திரிகள் பிரதானிகள் முன்பு குலுங்கவிட்டு, தலைப்பாகைக்குள் தன் னலத்தைச் சுருட்டி வைத்து, ஐக்கியம் ஐக்கியம் எனப் பேசிக்கொண்டு இதோ வழி என வேறோர் மெழுகுவர்த்தி ஒளியுடன் புறப்பட்டார் ஒருவர். அவர் பின்னும் ஒருசில தமிழர் கூட்டம் இருள் அகலுமா என்று ஆவலுடன் பின்தொடர்ந்தனர்.

கொள்கை என்ன கொள்கை, சண்டமாருதம் எனப் பாராளுமன்றத்தில் முழங்கும் தனிக்காட்டு இராசா நானே, என்னிடம் ஒலிவர் அரசியல் கற்றார், சோல்பரி என்னுடைய மச்சான். டி. எஸ். சேனநாயக்கா என்னைக் கலந்து யோசித்துவிட்டே கக்கூசுக்குக்கூடப் போவார் யான்தானே அரசாங்கத்தை நடாத்தியவர் என்று தன் வீரதீரத்தை மட்டுமே கொள்கை எனவும் தானே தலைவ ராயும் செயலாளராயும் அங்கத்தவராயுங் கொண்ட பல புதுக் கட்சிகளை ஏற்படுத்திய பாட்டனாரையும் நம்பிய வவுனியா மக்கள் இருள் அகல அவர்பின் தொடர்ந்தனர். அவர் கையிலிருந்ததும் மெழுகுவர்த்தி ஒளியே.

இருள், இருள். இருள்! ஒளி கிடைக்குமா என ஏங்கிய தமிழ் பேசுமினம் தமிழ்த்தலைவர்கள் எனக் கூறிக்கொண்ட வர்களைப் பின்பற்றி ஏறுநடை போட்டது. ஒளியை விழி நோகப் பார்க்க ஆசைப்பட்டது தமிழ் பேசுமினம். ஆனால் ...

ஐயகோ! சாபத்தீடு, கொடுமை, துரோகம் காக்கை வன்னியன் திரும்பவும் பிறந்தான். யூதாஸ் கரியாத் திரும்பவும் பிறந்தான். எட்டப்பன் திரும்பவும் பிறந் தான், அதனாலே ஒளிதேடி இருளிலே புறப்பட்டுப்போன

செந்தமிழர் கூட்டத்தை இருட்குகையிலே தள்ளி பதவி என்ற வலையினுள் படாடோப வாழ்வு வாழத் தமிழர் கூட்டம்போயே போய்விட்டது.

இருளிலிருந்த மக்கள்-இருட்குகையிலே அதாவது இன்னும் இருளிலே தள்ளிவிட்ட தலைவர்கள் மந்திரிகளாக வெற்றிப்பவனி வந்தனர்.

உரிமைகளை இழந்து தன் மதிப்பையே இழக்குமளவு கொடுமையை தமிழ் பேசுமினம் அனுபவித்தது, மெழுகு வர்த்தி ஒளிஉருகி உருகி மறைந்துவிடும்.இந்தத் தற்காலிக ஒளியை நம்பிப் பின் தொடட்டுப்போன தமிழ் மறவர் கூட்டம் ஏமாற்றம் தந்த பாடத்தில் மனமாற்றம் அடைந்தனர்.

தன்கையே தனக்குதவி. எங்கள் பலம் ஒன்ருனல், தமிழ் பேசுமினம் ஒரே அமைப்பு வடிவுபெற்ருல், நேர்மையும் கண்ணியமும் கொண்ட தலைவரின் கீழ் அணி திரண்டால் கொள்கையும் தியாகமும் கொண்ட இயக்கத்தில் அன்புப் போர் செய்தால்......வெற்றி வெற்றி எனக் குரல் கொடுத்தனர். அந் வெற்றி மக்கள் வெற்றியாகும், அதற்கு மக்களின் ஒன்றுபட்ட பலமும் தியாக உணர்வும் தேவை; அந்த சக்தியை ஒன்றுசேர்க்க மக்களின் அபில ஆசைகளையும் மதிக்க தோற்றிய விடிவெள்ளி அதோ! அதோ! இது உருகும் மெழுகு வர்த்தி ஒளியல்ல! பகல் என்ற விடுதலை கிட்டும் நேரத்தை அறிவிக்கும் விடிவெள்ளி, அந்த விடி வெள்ளியையே தமிழரசுத் தந்தை என அழைத்தனர்,

நம்பிக்கை ஒளி பரவியது, இருட்குகையை விட்டு ஈழத்தமிழர் புறப்பட்டனர். படாடோபம் சூழ சருகைக் கரையுடன் அலங்கார பவனி வந்த உருட்டிப்புரட்டி வாழும் தலைவர் கூட்டத்தின் மெழுகுவர்த்தி ஒளி விடி வெள்ளிமுன் ஒளி இழந்தது. கடைசியில் மெழுகுவர்த்தி உருகி, உருகி அவர்கள் சலுகையை எரிக்க முனைந்தது, அதனுலே தீயினுல் ஏற்பட்ட வடுவுடன் அரசியலைவிட்டு ஓடினுர்கள்! ஓடினுர்கள்; ஓடியேவிட்டார்கள், எனினும்

ஆசை அறுவதில்லை, பதவி ஆசை ஒரு வேசை, எனவே இடைக்கிடை அறிக்கைமட்டும் விடுவதிலும், மதங்காட்டும் மக்கள் கூட்டத்தைப் பிரிக்கும் சூழ்ச்சிக்கு பாய் விரிப்பதிலும், கிராமச்சங்கத் தேர்தலில் மண்கவ்வுதலிலும் தமது ஆசைகளைக் காட்டிவருவதுடன், விடிவெள்ளியை மறைக்கப் பகீரதப் பிரயத்தனமும் செய்கின்றனர் கள், விடிவெள்ளி தோற்றினால் இருள் வரவே வராது; நிச்சயமாக பகல் உண்டாகவே செய்யும்,

அந்தப் பகல் காண விடிவெள்ளியின் ஒளியுடன் புறப்பட்டுவிட்ட கூட்டத்தில், ஒரு சிறு பகுதிதானே இத்தடுப்புக்காவலிலும் உள்ளனர். அரசி! பொழுதுசாயும் இந்த நேரம் எனக்கு மேற்கூறியதுபோன்று, தமிழ்பேசும் இனத்தின் நிலையை இருளுடன் ஒட்டிப் பார்க்கும்போது தோற்றியது,

அதோ மேகத்திரள்கள் பஞ்சுபோல வெண் மேகங்கள் பல உருவங்களைத் தந்து ஓடுகின்றன. அவ்வுருவங்களைப் பார்க்க உன்போல அசைவது போன்றும்; என் தோளிலே நான்கைதாகும் நாள் நீ தூங்கியது போன்றும் தெரிகின்றதே! உன்னைக் காண்கின்றேன் மகளே, மேகத்தின் உருவங்களில், அதோ சந்திரன். இந்தச் சந்திரன் தானே நீயும் இருக்கும் இல்லத்திலும் தோற்றுவான். அச் சந்திரனுக்கு எல்லாம் தெரியுமே! அவனாவது உன் அப்பா மேன்மாடியிலே இருந்து உன் பாசத்தை எண்ணும் நினைவுகளைக் கொண்டு வந்து சொல்வானா? மனிதரால் முடியாததை காலஓட்டம் செய்யுமாமே, காலமே ஓடுக.

இன்று தொடக்கம் தடுப்புக்காவலிலுள்ள கத்தோலிக்க நண்பர்களுக்காக குரு ஒருவர் வந்தார். இனி ஒவ்வொரு ஞாயிறும் வருவாராம். கத்தோலிக்க நண்பர்கள் ஒரு மூலை அறையை

தமது தொழுகை இடமாக அமைத்துக்கொண்டுள்ளனர். மன்னார்ப் பிரதிநிதி திரு அழகக்கோன் அவர்கள் தமிழ்பேசுமினத்தின் விடுதலைக்காக வேண்டும் ஆராதனை நெஞ்சை உருக்கியது.

இன்று கோப்பாய் பிரதிநிதி பாலசுந்தரம் அவர்கள், பரமேஸ்வராக் கல்லூரி முன்னாள் உப அதிபர் தி. இராஜசேகரம் அவர்கள், யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் அழகையா அவர்கள், சட்டக்கல்லூரி மாணவன் அன்ரனி அவர்கள், தமிழரசுக்கட்சி செயலாளர் வ. நவரத்தினம் அவர்கள், பருத்தித்துறையைச் சேர்ந்த நியாயவாதி நவரெத்தினம் அவர்கள் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு ஒன்றாக வந்து சேர்ந்தனர். எங்கள் தடுப்புக்காவல் குடும்பம் வளருகிறது. எங்கள் குடும்பம்இப்போதுபெரிது. யாழ்ப்பாண நிலை எப்படி எனக் கேட்டோம்.

இராணுவக் கொடுமை, மக்கள் கூப்பன் அரிசியைப் பெறக்கூட மனமில்லாது உள்ள நிலை, சீட்டு இல்லாது பஸ்பிரயாணம், என்பவற்றையெல்லாம் கூறினர். இரவானதும் இராணுவம் மனிதராக இருப்பதில்லையாம். வெளிச்சம் தெரியும் வீட்டில் புகுந்து தொல்லை கொடுப்பராம். அதுவும் பருவப்பெண்கள் உள்ள தனி வீட்டில் புகுந்து தொல்லை கொடுப்பதில் சமர்த்தராம். ஜீப் வந்து நிற்குமாம், பின்பு வேலி எரியுமாம். அதுவும் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டவர்களது இல்லங்களை அறிந்து வேண்டுமென்றே துன்புறுத்துகின்றன

ராம். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் காட்டாட்சியாகிய இராணுவ ஆட்சியைக் கேட்கக் கேட்க மனம் வெந்தது. மனிதத்தன்மை குறைந்தவர்கள்தான் இராணுவத்தில் சேர்வாரோ எனக் கூடஐயப்பட வேண்டியுள்ளதே.

பொதுமக்களைப் பாதுகாக்க இராணுவமா? மக்களை அடிக்க அச்சுறுத்த இராணுவமா? மற்ற நாடுகளில் எதிர்ப்படைகளுடன் போராடவே இராணுவம் இருக்கின்றனர். எங்கள் ஈழத் தமிழ்நாட்டில் தமிழரைத் துன்புறுத்தவே இராணுவமிருக்கின்றனர். ஆச்சரியமான ஈழ ஆட்சி!

இம்முறை யாழ்ப்பாணத்தில் மட்டுமே—திட்டமிட்டு இராணுவக் கொடுமை நடைபெற்றுள்ளது. ஏன் சத்தியாக்கிரக கடைசிநாளன்று நாமெல்லாம் கைதான அன்று—யாழ்ப்பாணத்தில் மட்டுமே அடி, உதை, இடி கண்ணீர்ப்புகை ஆகிய கொடுமைகள் நிகழ்ந்தன. மற்ற இடங்களில் அமைதியாகவே சத்தியாக்கிரகிகளை அப்புறப்படுத்தியுள்ளனர். ஆமாம்! வேண்டுமென்றே அதிகாரபீடம் இப்படிச் செய்திருக்கக்கூடும். ஆனல் இதனல் ஆட்சிக்கு வெற்றியோ வலுவோ ஏற்படுமா? மக்களின் உள்ளத்திண்மையை இன்னும் கூட்டவே உதவும். மக்களின் எழுச்சி முன்பு, துப்பாக்கி தூசாகும்; கொடுமைகள் தகரும் என்பது வரலாற்று உண்மை.

மகளே! தமிழ் பேசும் மக்கள் ஈழநாட்டின் சிறுபான்மை இனமாக இருக்கலாம். ஆனல்

இன்று ஈழநாட்டின் ஆட்சியை அசைக்கின்றார்கள். அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தாது, இன்றைய ஆட்சியினரால் ஆட்சிச் சக்கரத்தை உருட்ட முடியாத நிலை. ஆகவே, பைந்தமிழ் வீரரின் அறப்போராட்டம் சாமான்யமானதல்ல. மகளே, சாமான்யமானதல்ல. எனவே நாம் தடுப்புக் காவலிலிருக்கும் ஒவ்வொரு நிமிடமும்கூட ஆட்சிக்கு அதிக செலவையும், அமைதியின்மையையும் உலகில் கொடூர ஆட்சி என்ற படப்பிடிப்பையும் மெய்ப்பிப்பதுடன், தமிழனின் திடநெஞ்சையும் உணர்த்தவே செய்கின்றோம். தியாகமென்று சொல்லாவிட்டாலும், இன்றைய ஈழத்தமிழனின் கடமையை நாம் செய்கின்றோம். நாட்டுக்காக உழைக்கும் பேறு பெற்றவர்களாகிவிட்டோம். அப்படியானவர்களுள் என் அப்பாவும் ஒருவராகிவிட்டார் என, நீ பெருமைப்படுவதில் நியாய மிருக்கின்றதல்லவா?

ஆகவே உன் அப்பாவைப் பிரிந்தாலும், உன் அப்பா கொலை செய்தோ களவு செய்தோ சிறையடையவில்லை—நாட்டுக்காக, பைந்தமிழ் உரிமைக்காகச் சென்றுள்ளார், என எண்ணிப் பிரிவுத்துன்பத்தை ஆற்றுவாயாக.

தந்தையின் ஸ்தானத்திலும் தாயின் ஸ்தானத்திலுமிருந்து உன் அம்மா வேண்டியன செய்வார். எங்கே பாலொழுகச் சிரிக்கும் அந்த அன்புச் சிரிப்பு—சிரியடி அன்பு!

உனது அப்பா,
புதுமைலோலன்

தடுப்புக் காவலில் நாம் 7

தடுப்புக் காவல் நிலையம்,
பனகொடை,
ஹோமகம,
24-4-1961.

என் அருமை மகள் அன்பரசிக்கு,

இன்று எங்கள் உடுப்புகள் சலவை செய்து தரும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. நாமே எமது உடுப்பில் நாம் தங்கியுள்ள அறை இலக்கத்தையிட்டு, அறை வாயிலில் இட்டுவிட்டால் சலவை செய்யப்போகும்.

சாப்பிடுவதும், உறங்குவதும், பேசுவதும் எவ்வளவு நேரம் செய்யமுடியும்? உடலுக்கு எந்தவிதப் பயிற்சியும் கிடையாதே. அதனாலின்று மாலை சிலர் மேன்மாடியின் ஒரு நுனியிலிருந்து மறு நுனிவரை நடந்துபோவதும் வருவது மாயிருந்தனர். சிலர் ஓடக்கூடச் செய்தனர். உண்பது மட்டும் உடல்வளர்ச்சிக்கோ சுகத்திற்கோ போதுமா? எத்தனை மணித்தியாலங்கள்—இல்லை, நாட்கள்—மேன்மா டியே சாஸ்வதம் என்று இருக்க முடியும்? அதனால் சிலர் நோய்வாய்ப்படவே செய்கின்றனர். இராணுவப்பகுதி டாக்டர் ஒருவர் பகல் பத்துமணியளவில் வந்து நோயுள் ளோரைப் பார்வையிடுவரென முன்பு எழுதினேன் அல் லவா? இப்போது டாக்டருக்கு வேலைகூட. சீரணிக்காது கஷ்டமுறுபவர், பல்வியாதியினால் கஷ்டமடைபவர்,...... இப்படியாகப் பலவித நோய்களும் கொண்டு கஷ்டப்படு வதைப் பார்க்க வேதனையாகவே உள்ளது.

இவ்வருத்தங்களுக்கெல்லாம் காரணம் என்ன? சில ருக்கு இங்கே கொடுக்கப்படும் உணவு ஒத்துக்கொள் ளாமை ஒரு காரணம், வெய்யில் படாத உடலாக, வேலை யெதுவுமற்ற உடலாக சோம்பியிருப்பது இன்னோர் கார ணம்; இங்குள்ள தண்ணீர் மிகத் தடிப்பானது. ஏதோ ஒரு உலோகக் கலவை கொண்ட நீர்போலுள்ளது, சில

நேரம் குழாய்மூலம் வரும் நீரைப் பார்த்தால் மஞ்சள் நிற மாகவே உள்ளது. தண்ணீரும் வருத்தம் உண்டாவதற்கு ஒரு காரணமாயிருக்கலாம். இவற்றையெல்லாம் விட உள் ளத்தில் என்ன என்ன வேதனைகளோ!!

தடுப்புக்காவலில் உள்ள சிலர் வறுமையென்னும் கோரப் பிடியுள் சிக்கியவர்கள். அவர்களது மனைவி மக் கள் என்ன செய்கிறார்களோ என அவர்கள் எண்ணத் தானே செய்வர்? அன்றன்று உழைத்துச் சீவியம் நடத் தும் தன்மை கொண்டவர்கள்.........உதவி அதிகம் இல்லாதவர்கள்........ அவர்களிங்கே சிந்தனை வயப்பட்டுத் தானேயிருப்பர்.

இதே நிலையில் கவலையெதுவுமற்று கூத்தும் கும்மா ளமுமாக—தடுப்புக் காவல் வாழ்வில் மகிழ்வுகண்டு திரி பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தடுப்புக்காவல் நிலையத்தில் ஒரு சமூகமே இருக்கின்றது. பலவகைப்பட்ட போக்குக் கொண்டவர்களையும் காண்கின்றேன். இங்கே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களுமுள்ளனர். சத்தி யாக்கிரகத்தைமட்டும் ஆதரித்தவர்களும் உள்ளனர்.

என் மகளாகிய உனக்கு நான் எதையும் மறைப்பேனா? முடியுமா?

தமிழரசு இயக்கத்தில் நீங்காத பற்றுக்கொண்ட இலட்சியவாதிகளையும் காண்கின்றேன். ஏதாவது தேர்த லில் அபேட்சகர் வாக்கு சேகரிக்க இந்தத் தடுப்புக்காவல் தியாகிப் பட்டம் தராதா என்ற போலிகளையும் காண் கின்றேன். பலருடனும் கதைக்கின்றேன். கலந்துரையாடு கின்றேன். அவர்களுடைய பேச்சே அவர்களை உணர்த் துகிறது.

"பானையை வாங்கும்போது சுண்டிப் பார்க்கின்றோம், சுண் டும்போது ஏற்படும் ஒலி நாதம்கொண்டு நல்ல பானையா ஓட்டைப் பானையா என அறியலாமல்லவா? அதேபோன்று ஒவ்வொருவ ரது நாக்கும் அவர்களை உணர்த்தப் போதுமானது. நாக்குத் தரும் வார்த்தைகள் அவர்களது தன்மையைப் பட்டெனத் தரப் போதுமானது."

மகளே! ஒன்றை மறந்துவிடக்கூடாது; சில தலைவர்களை விடச் சாதாரண தொண்டர்களிடம் இலட்சியப் பற்றை அதிகம் காணமுடிகிறது, யான் எண்ணுகின்றேன். சில தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஆகாதுவிட்டால், சத்தியாக்கிரக இயக்கத்தின்பக்கம் கூடத் தலைவைத்துப் படுத்திருக்கமாட்டார்கள். எம். பி. என்ற எழுத்துக்கள்மட்டுமே அறப்போர் பக்கம் அவர்களை அழைத்துவந்திருக்கவேண்டும் ;...... இல்லை இழுத்துவந்திருக்கவேண்டும்.

நாட்டுப் பற்று, மொழிப் பற்று, தியாக எண்ணம் நிறையக்கொண்ட தலைவர்களில்லாமல் இல்லை; ஆனால் போலிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஒரு சமூகத்தில் பலவகைப்பட்ட எண்ண இயல்புகள் கொண்ட மக்கள் இருப்பரல்லவா? அதேபோன்று எமது தடுப்புக்காவல் முகாமில் இருக்கத்தான் செய்வர்; அது இயல்புதானே, ஏன்? ஒரு அரசியல் கட்சியிலும்கூட இப்படிப் பலவகைப்பட்ட தன்மைகள் கொண்டவர்களைச் சந்திக்கலாம். இப்படியான பலவகைப் போக்குக்கொண்டவர்களை எல்லாம், ஒரே குடும்பமாக்குவதே கொள்கை. அக்கொள்கையில் வைத்த அசையாத நம்பிக்கையே கட்சிப்பற்று. அப்பற்றுக் காரணமாகத் தன்னல மறுப்புச்செய்பவனே ஒரு நல்ல பாதையால் செல்லும் அறப்போர் வீரனாவான்.

தடுப்புக்காவலில் உள்ளவர்கள் யாவரும் ஓரளவில் தியாகமே செய்கின்றனர். இதை யான் மறுக்கவில்லை. ஆனால் இத் தடுப்புக் காவலை தமது தன்னல மறுப்பாக, தொண்டாக கருதாவிட்டால், அத் தியாகம் மாசடைகின்றது வலுவற்றதாகின்றது. தூய்மை இழந்தவை தியாகமாவதில்லை!

இணைப்பாட்சியே ஈழத்தின் துயர்துடைக்குமென நம்பும் தமிழரசுக் கட்சியினரும் இங்கிருக்கின்றனர். தமிழ் மொழியுரிமையே தேவை; அது கிடைத்தால் போதுமானது. அதற்காக அறப்போர்க்களம் வந்தவர்களும் இருக்கின்றார்கள். அதாவது தமிழரசுக் கட்சியின் கொள்

கைகளை ஏற்காது, மொழிக்காகமட்டுமே போராடி வந்தவர்கள் அவர்கள். இப்படி இருவகைப்பட்ட எண்ணங்கொண்ட தோழர்களுடன், உலாவுவதால் சிந்தனை இன்னும் விரிகின்றது. பல புது வினக்கள் விடைதேடி அலைகின்றன.

எது எப்படியானாலும் எமது கன்னித் தமிழ் மொழியை உரிய இடத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்பதில் எல்லோரும் ஒன்றுபடுகின்றோம்.

இந்த நிலை எமது தமிழ்பேசும் மக்களிடையிலும் உள்ள நிலைதானே!

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இலட்சியத்தை முன் வைத்து நடைபோடும் தமிழரசுக் கட்சி, தாண்டி வந்த மேடு பள்ளங்கள் .. அது சாதித்துள்ள காரியங்களை, எண்ணும்போது உருண்டோடி வருகின்றது ஆனந்த வெள்ளம்!

இன எழுச்சிகொண்ட கட்சிகள், விடுதலை எண்ணங்கொண்ட தூதுவர்களை உறுப்பினராகக் கொண்டவையாக இருக்கவேண்டும். புதிய புதிய தியாகிகள் பலரைப் படைக்கும் வன்மை இக் கட்சிக்கே உண்டு. அதே நேரத்தில் நமது இலட்சியத்தை வெறுக்கும் மாற்றார், மனமருட்சி கொண்டு, ஓடாது நமது பாசறை நாடி வரக்கூடியதாக கட்சி பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும்.

இந்த மாபெரும் பணியில் தமிழரசுக்கட்சி தன்னாலான அளவிற்கும் மேலாகப் பணியாற்றி இருப்பதை கட்சி காணும் புதுமுகங்கள்மூலம் காணமுடிகின்றது. அந்த இலட்சியப் பற்றுக்கொண்ட பலரின் கூட்டே நமக்கு இன்பம்! பணி, பலன் தருகிறது என்பதே நமக்கு பெருமை! தமிழரசு இயக்கத்தின் இலட்சிய செம்மல்கள் ஆயிரம் ஆயிரமாக அணி திரண்ட மாட்சியை அறப்போர்க்காலம் உணர்த்திற்று! வேறு இலட்சியம் கொண்டவர்களும் தமிழ் எனக் குரலிட்டு இதே அறப்போர் வீரருடன் கைகோர்த்து ஏறுநடைபோட்ட காட்சியையும், அறப்போர் உணர்த்

திற்று. இலட்சியப் பாதையில் மாற்றுரும் கூடும் கட்சியை வேறு எக்கட்சியும் நடாத்திக்காட்ட முடியாது; நடாத்திக் காட்டியதும் கிடையாதே!

நாம் தமிழ் பேசும் இனம் என்ற உணர்வுடன் சிங்கள மக்களின் மனம் மாறுமளவிற்கு அறப்போர் வீரராக மாறும் தன்மையே எமது இயக்கக் குறிக்கோளாகும்; இந்த நன்னோக்கமே எம்மை வளர்த்தது. எது வரினும் அஞ்சோம், துஞ்சோம், கோழையாகோம் என்ற மனப் பண்புடன் இயக்கத்தை இலட்சிய வீரரின் கூடாரமாக்கி, அதன்மூலம் இன்றைய வகுப்புவாத ஆட்சியை அசைப்பவர்கள் யாவர்? ஆட்சிபீடம் அடக்குமுறைப்பாணம் இல்லாது, ஆளமுடியாத சூழ்நிலையை உண்டாக்கியவர்கள் எவர்கள்.

கத்தி, கோடரி, குண்டு, ஆட்சிப்பலம் ஏதுமே அற்ற... இயக்கம் வைத்திருப்பது ஒன்றே ஒன்று; அதுவே அறவழி, அதன் மறுபெயரே சத்தியவழி. அவ்வழியில் உதவுவதே அகிம்சை. எதையும் தாங்கும் வன்மை உண்டாக்க எங்களிடம் இருப்பது தன்னலமறுப்புமட்டுமே. அறத்தின்முன் இமயமலைகூட பணியுமாமே! அகிம்சையின்முன் சூரியன் உதிக்கும் பிரதேசமெங்கும் கட்டியாண்ட வெள்ளையர் கூடப் பணிந்தனரே; ஆகவே ஆண்டு பல சென்றாலும் இலட்சியமே எம்மை உயர்வு காணும் பாதைக்கு இட்டுச் செல்லமுடியும் என்பதை மிக அதிகமாக நம்புகின்றவன் நான். எல்லோரும் இந்நிலையில் ஆகவேண்டு மென்றே ஆசைப்படுகின்றேன். மகளே; ஆசைப்படுகின்றேன்.

ஈழத்து அரசியலில் யான் மேற் குறிப்பிட்டதுபோல இரண்டுவகை மக்களை அதிகம் சந்திக்கலாம்.

ஒன்று: இணைப்பாட்சிமூலம் பிரச்சினை தீரும் என்ற தமிழரசு இயக்கத்தினர்.

இரண்டு:– இணைப்பாட்சி வேண்டாம், தமிழ் உரிமை கிட்டினால் போதும் என்பவர்கள்.

இந்த இருவகையினரைவிட இன்னோர் செந்நிறக்கூடம் - குறைந்த மக்கள் ஆதரவுகொண்ட கூட்டம் ஒன்றும் உள்ளது. அக்கூட்டத்தினுள்ளும் இரண்டு பிரிவினர். மொழியும் வேண்டாம், விழியும் வேண்டாம், சோறுமட்டுமே வேண்டும் என்று கூறும் சோற்றுத் துருத்திகள் இவர்கள். இவர்களும் தமிழ்மொழி பேசும் நம்மவரே, தாயை மறந்த தனயர்கள்; பரம்பரையை விற்கும் கொடுமையாளர்கள். ... ....

மகளே! தமிழ் உரிமை கிடைத்துவிட்டால் நமதின்னல் தீருமென தமிழரசுக்கட்சி நம்பவில்லை; என்றும் நம்பியதும் கிடையாது. ஏனெனில் தமிழ்மொழி உரிமையுடன் அவ்வுரிமையை என்றும் எந்த ஆட்சி வரினும் காப்பாற்றமுடிந்த வலிமை எம் கையிலே இருக்கவேண்டும். அதற்காகவே நாம் எல்லாம் நிறைந்த பலபிரச்சினைகள் தீரக்கூடிய சமஷ்டி ஒன்றை-இணைப்பாட்சியைக் கோருகின்றோம்.

கொஞ்சம் எண்ணிப்பார்! இப்போதுள்ள ஆட்சி தமிழ்மொழி உரிமை தந்துவிட்டதாக வைப்போம். சில காலம் ஓட வேறு ஓர் ஆட்சி இவ்வுரிமையைப் பறிக்காது என்பதற்கு என்ன அத்தாட்சி உண்டு. நிலையான பாதுகாப்புக் கொண்ட, என்றுமே மாற்றமுடியாத ஆட்சி மாற்றமே எமக்குத் தேவை. தமிழரசுக்கட்சி அதிகதூரம் பார்க்கின்றது; பின் விளைவதையும் முன்னேயே தீர்க்கமுடன் எண்ணுகின்றது. மற்றவர்கள் கண்ணுக்கெட்டிய தூரம்மட்டும்பார்க்கிறார்கள். இதுவே வேறுபாடு.

இந்த இருபகுதியினரும் மொழிப் பற்றுக் கொண்டவர்கள்தானெனினும் என்றுமே நீக்க முடியாத-தகர்க்கமுடியாத - தன்மை கொண்ட உரிமையை அடைவதை-விடயத் தெளிவு, ஏற்பட்டால் யாரும் மறுக்கமாட்டார்கள்.

அதனாலேயே, தமிழரசு இயக்கத்தில் பற்றுக்கொண்டோர், நாளொரு மேனியாகச் சேர்ந்தனர்; சேர்கின்றனர்.

அன்பு! எங்கள் இயக்கம் இலட்சியவாதிகள் கொண்ட பாசறை. இப்பாசறையிலிருந்து பலரும், மொழியுரிமைமட்டும் கோரும் சிலரும் தடுப்புக் காவல் குடும்பமாகியுள்ளோம். எனினும் இலட்சியம் எல்லோரையும் இணைக்குமென்றே நம்புகின்றேன்.

இலட்சியம் வலிமை கூடியது மகளே! வலிமை கூடியது.

பின்பு மீதி—

அன்புத் தந்தை,
புதுமைலோலன்.

தடுப்புக் காவலில் நாம் 8

தடுப்புக்காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமகம;
25-4-61.

என் அருமை மகள் அன்பரசிக்கு;

எப்படி? யாபேரும் நலமா? இங்கே யாபேரும் நலமே இருக்கிறார்கள்; சிறகிழந்த பறவைகள் போல. சிறகிழந்த பறவை சுதந்திரமாகப் பறக்க முடியாதல்லவா? அதேபோன்று எம்மையும் சிறகிழந்த பறவையாக்கி—ஜனநாயக ஆட்சியைக் கேலிப் பொருளாக்கி, சிறிமா அம்மையார் மகிழ்கிறார். வாழ்க சிறிமா அம்மையார்! அவர்தம் உதவிக் கரங்களாகிய வகுப்புவாத மந்திரிகள் வாழ்க! கொடுமை புரிவதில் மகிழ்வுகாணும் மந்திரிகளை உனது அப்பா வாழ்த்துகிறாரே என ஆச்சரியப்படுகின்றாயா? அன்பு மகளே! கொடுமையாளரையும் வாழ்த்தும், மனப்பண்பை அளிக்கக்கூடிய, மனப்பான்மையைச் சென்ற சத்தியாக்கிரகப் போராட்டம் தந்துவிட்டது. கொடுமை இழைப்பவர்களை நாம் பார்த்து மகிழவோ அஞ்சவோ என்ன இருக்கிறது?

கோடரியை உனக்குத் தெரியுமல்லவா? கோடரியின் கைப்பிடியாயுள்ள தடி மரத்தினால் ஆனதல்லவா? இந்த மரத்தினால் செய்யப்பட்ட கைப்பிடிகொண்ட கோடரி, தனக்கு ஒரு வலிமைகொண்ட—இரும்பினால் செய்த— வெட்

டும் நண்பனையும் உதவியாகக்கொண்டு தன் இன மாகிய மரத்தையே வெட்டித் தீர்க்கிறதே! அதாவது மரத்தின் தடியே மரத்தை வெட்ட உதவி! இதேபோல் ஓர் இனம் செய்யும் கொடுமை, அவ்வினம் அழியச் செய்யப்படும் ஆரம்பம் ஒழிய வேறல்ல. அமைதியாக எண்ணிப் பார்த்தால் இந்த உண்மை புரியும். அவசரப்பட்டு, முன்காணும் நிலையைமட்டும் வைத்து எண்ணினால் இந்த உண்மை நன்கு விளங்கவே விளங்காது.

கொடுமை செய்தோர் மகிழ்வாக வாழ்ந்ததாக வரலாறே கிடையாது.

ஈழத்து ஆட்சியைக் கொஞ்சம் எண்ணிப் பார்! சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் ஒருசேரச் சேர்ந்து, பெற்ற சுதந்திரத்தின் பிற்பாடு—பெரும்பான்மை என்ற காரணத்தைமட்டும் கொண்டு—தமிழ்பேசுமினத்தை ஒழித்துக் கட்டும் வேலையில் சில தலைவர்களும் அரசியல் கட்சிகளும் முனைந்தனர் அல்லவா?

கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழரது பிரதேசத்தை, குடியேற்றம் மூலம் அபகரித்து, தமிழ்ப் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கு வராது செய்ய, அடிப்படை போடப்பட்ட முதற் பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா எங்கே? குதிரை அவருக்கு எமனாகிற்று? கொக்குவிலில் தமிழுக்குச் சம உரிமை—களனியில் சிங்களம் மட்டும் பிரேரணை என இருநாக்குக் கொண்டிருந்த கொத்தலாவலை எங்கே? வனவாசம் செய்பவராகிவிட்டாரே அரசியலைப் பொறுத்தமட்டில்,

சிங்களம்மட்டும் சட்டத்தை—வேலி யடைத்து, காலிமுகத்தில் வீரத்தமிழ் இரத்தத் தைத் தெளித்து—சடபுட எனக் கொண்டுவந் ததுமட்டுமல்லாது, செல்வநாயகம், பண்டார நாயக்கா ஒப்பந்தத்தை மனவிருப்புடன் எழு திக் கைச்சாத்திட்டு..........பின்பு மஞ்சள் காவி கள் சிலரது பயமுறுத்தலுக்காக அஞ்சிக் கிழித் தெறிந்துவிட்ட பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா எங்கே? அறம் கூற்றமாகி விட்டது மகளே!

"தொண்டமான் பெரிய முதலாளியாச்சே. அவராவது போராட்டத்தை நடத்துவதாவது. ஏழைப் பாட்டாளி மக்களுக்காக அவரிதுவரை செய்தது வெளிநாட்டுப் பிரயாணமும், யானைப் பவனியும்தானே. எம். பி. பதவிக்காக — உதவி கோர தமிழரசுக் கட்சியின் தோழன் போலத் திரிகின்ருர்''—என்றெல்லாம் என்னிடம் பலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

இன்றைய வாஞெலியைக் கேட்டதும் தொண்டமானைப் பற்றிப் பலரும் கூறுவது தப்பு என உணரத் தொடங்கினேன். தோட்டத் தொழிலாளரின் வேலைநிறுத்தத்தை நடாத்துவ தற்கு அசாத்திய துணிவுடன் மிகச் சிறந்த உழைப்பும் தேவை. அத்துடன் பணமும்தேவை அபரிமிதமாக. இந்நிலையில், ஈழத் தமிழருக்குத் தோள் கொடுக்கத் துணிந்த தொழிலாளர் காங் கிரஸ் வாழ்த்துக்குரியது.

''தொண்டமானை அரசாங்கம் வளைத்துவிட்டால்.........'' என ஒருவர் இப்போது சாப்பிடும் மேசையில் கூறினார்.

எல்லாவற்றையும் எண்ணித்தானே ஆரம்பித்திருப்பார் என யான் எண்ணினேன்;—பார்ப்போம்!

வானொலியின் செய்தி நேரத்தில் காதை வானொலிப் பக்கம் செலுத்தியபடி இருந்தோம். தோட்டத் தொழிலாளரது வேலைநிறுத்தம்பற்றி என்ன கூறுவர், என எதிர்பார்த்தோம். உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு க. ஜெயக்கொடி அவர்கள் சென்ற ஞாயிறு உண்ணாவிரதமிருந்து மாலை முடித்தார்கள். அதனது பலனிது என அவரைப் பார்த்து மகிழ்வாகக் கூறினோம்.

நாளை விடியட்டும் வானொலி என்ன செய்தி தரும்? அச்செய்தியை எதிர்பார்க்கிறோம்.

இன்றிரவு பேய் பேய் என்று பேசி திருமதி அமிர்தலிங்கம் அவர்களை அச்சப்படுத்த முயன்றனர் சிலர். சாப்பிட்டு முடிய ஒருசிறு கேலிவேண்டாமா? ஆனால் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் மனைவியல்லவா? பேய் பூதத்தை விடப் பெரிய மனிதப் பேய்களைக் கச்சேரியடியில் காக்கி யுருவில் சந்தித்தும், அஞ்சாத மங்கையர்க்கரசி இதற்கெல்லாமா அச்சமடைவார்! எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்ததுதான் மிச்சம். அச் சிரிப்பில், பேய் வந்திருப்பினும்— பனைகொடைப் பேய்—தொடை நடுங்கி ஓடியல்லவா இருக்கும்.

அதுபோக மலைநாட்டுத் தமிழர்பற்றி எழுதினேன் அல்லவா? ஈழத்து ஆட்சியை கிடுகிடுக்கச் செய்யக்கூடிய மாபெரும் சக்தி நம் இரத்தமாகிய மலைநாட்டுத் தோழரிடம் உண்டே! தொண்டமானுக்குச் ஜே!—அசீசுக்குச் ஜே......! என்று கூவவேண்டும்போல் உள்ளதே! மலைநாட்டுத் தமிழரது பிரச்சினையை ஆரம்பமாகக் கொண்டே, இலங்கைத் தமிழரசுக்கட்சி ஜனனமடைந்தது. தமிழரசுக்கட்சி விடாது போராடி வந்தது. நன்றிக் கடனை மலைநாட்டுத் தமிழ்வீரர் காட்ட ஓர் அரிய வாய்ப்புக் கிட்டிவிட்டது.

ஏழ்மையில் உழன்றாலும், அட்டைக் கடியுடன் மழையிலும் குளிரிலும் வேதனை கொண்டாலும், கள்ளத் தோணியென கேலியுரை கேட்டாலும்......ஈழத்து அத்திவாரம் அவர்கள்? எழில் கொஞ்சும் இலங்கையில் வளம் தரும் முதல்வன் யார்? தமிழரசுக் கட்சியின் பரந்த கண்ணோட்டமே மலைநாட்டுத் தமிழரையும் — இனமுழக்கமிட செய்கின்றது.

சத்தியாக்கிரகத்தின்போது தொண்டமான் அவர்களும் அசீஸ் அவர்களும் வந்தார்கள். அவசியம் நேரும்போது கைகொடுப்போம் என்றார்கள். சொல்லைக் காப்பாற்றிவிட்டார்கள். அறப்போரின் அடுத்த கட்டம்.........ஆரம்பமாகி விட்டது; ஆரம்பமாகிவிட்டது.

தானாடாவிட்டாலும் தசை ஆடும் என்பார்களே! தேன் தமிழை வாழ்வின் உயிராகக் கொண்ட தமிழன், எங்கிருப்பினும் ஒன்றுவான்.

இவற்றையெல்லாம் நான் எழுதக்கூடியதாக இன்றைய வானொலிச் செய்தி ஆக்கியது. அது என்னப்பா மகிழ்வூட்டும் செய்தி என்கிறாயா? விடுதலை கிடைத்துவிட்டது என எண்ணுகிறாயா? விடுதலைகூட இத்தனை மகிழ்வை ஊட்டாது மகளே!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஜன நாயகக் காங்கிரசும் வேலை நிறுத்தத்தை ஆரம் பித்துவிட்டனர் என்ற செய்தியே என்னை மகிழ் வில் திளைக்கச் செய்தது. வானொலி இந்தச் செய் தியைச் சொன்னதும் தடுப்புக்காவல் குடும்பத் தவராகிய நாங்கள் யாபேரும், புதுமுறுக்குப் பெற்றோம். வவுனியாப் பிரதிநிதி திரு. தா. சிவ சிதம்பரம் அவர்களும், மட்டக்களப்புப் பிரதி நிதி. திரு செ. இராசதுரை அவர்களும் பாரதி யும் 'விடுதலை விடுதலை' என்ற பாட்டை அல்லவா பாட ஆரம்பித்துவிட்டனர். எமக்கு விடுதலை என்றல்ல — எம்மினத்திற்கே விடுதலை என மகிழ்ந்து.

எமது சொந்தசகோதரராகிய மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்கள் வேலைநிறுத்தத்தை ஒரு கிழமை செய்தாலே இலங்கைவருமானம் படுத்து விடுமே. பொருளாதாரத்தில் சரியான வீழ்ச்சி யல்லவா ஏற்பட்டுவிடும்.

சத்தியாக்கிரகம் தொடர்கிறது என்பதை அல்லவா இந்நிகழ்ச்சியும் காட்டுகிறது மகளே! சத்தியாக்கிரக ஞாபகமல்லவா திரும்பவும் ஓடி ஓடி வருகிறது சத்தியாக்கிரகத்தின்போது நமது பிரதமர் அவர்கள் யாரோ எழுதிக் கொடுத்

தையை—தமது அறிக்கையாக தமிழ்பேசும் மக்களுக்கு வெளியிட்டாரே. சந்தி சந்தியாக அவ்வறிக்கையை அள்ளி அள்ளிப் பொலிசார் கொடுத்தார்களே. அதிலே தமிழ்பேசும் மக்களைப் பார்த்து கோபமுடன் 'அடக்குவேன்' என்றாரே. அப்போது தமிழரசுத் தந்தை ஒரு அறிக்கைவிட்டார். அதை திரும்பவும் எண்ணிப் பார்.

இதோ அவ்வறிக்கை—"1959ம் வருடத்தில் அந்தத் துக்கமான தினத்தில், கொலையாளி கைத் துப்பாக்கியில் இருந்து குண்டுகள் பாய்ந்தபோது பிரதமரின் காலஞ்சென்ற கணவர் எவ்விதச் சக்தி அற்ற நிலையில் இருந்தாரோ, அதே நிலையில்தான் பிரதமமந்திரியின் ஆயுதம் தரித்த கொலையாளிகள் எங்கள்முன் துப்பாக்கியை நீட்டும்போது, நாங்களும் நிராதரவற்றவர்களாக சக்தியிழந்து நிற்போம் என்பதை அறிவோம்".

சாத்வீகத்தின், தியாக உணர்வின், தர்மத்தின் வாக்கியங்கள் இவை. இதன் பின்புமா பிரதமர் சிறிமா அம்மையார் அவர்கள் கொடுமை செய்ய வழிசெய்தார்......அதோ முன்னைய பிரதமர்கள் சென்ற பாதை.........! பரிதாபம்—பரிதாபம்.

சுதந்திரம் பெற்ற பிற்பாடு ஈழத்து ஆட்சி இன்னும் பூரணமாக ஐந்து ஆண்டுகள் ஆண்டதில்லையே! குழப்பம்—குழப்பம்—குழப்பம்.

ஏன்? அறம் கூற்றமாகின்றது—தர்மம் அதர்மத்தை விட்டுவைப்பதில்லை. கொடுமையாளர் கொடுமையாலேயே ஓட்டப்படுகின்றனர். ஈழத்து ஆட்சியில் எங்கள் கண்களினால் கண்ட சம்ப

வங்களேத்தான் மேலே எழுதியுள்ளேன். இந்தச் சம்பவங்களாவது நல்ல படிப்பினையை இன்றைய ஆட்சி பீடத்திற்குக் கொடுக்குமென எதிர்பார்த்தேன். பதவியும் படாடோபமும் கண்களை மறைக்கின்றன. அதனுல் நடந்த பாடங்கள்கூட அவர்களைத் திருத்தமுடியவில்லை.

பண்டாரநாயக்கா கொலைசெய்யப்பட்டு, புதுத் தேர்தல் நடந்து, அதில் ஐக்கியதேசியக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் ஆட்சியைச் சமைக்க முடியாத நிலையில் இருந்தபோது —அதாவது தமிழரசுக் கட்சியின் ஆதரவு இல்லாவிட்டால் ஆட்சி நடத்த முடியாதென்ற நிலை வந்தபோது தந்தை செல்வநாயகத்தின் வீடு தேடிவந்து, தோழமை பேசிய பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா....தமிழருக்குத் தீங்கு செய்ய மாட்டோம் — பண்டாரநாயக்காவின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவோம். என்றெல்லாம் உறுதி உரைகள் தந்த மந்திரிகள்......தமிழ்பேசுமினத்தின் துன்பத்திலே நீச்சலடிக்கின்றனர். வேடிக்கையான மனிதர்கள்! மனச்சாட்சியை விற்றுவிட்ட மந்தைக் கூட்டம் ஈழத்து மந்திரிகள்! பேஷ்! பேஷ்!........மகளே! தமிழ்பேசுமினம் ஏமாற்றப்பட்டதுபோல் தெரியினும், உண்மை மடியவில்லை. அறம் நம்பக்கம். நியாயம் எங்கள் பக்கம்.

உலகில் கொடுமை இழைத்தவர்கள் இன்று எங்கே? இந்த ஆட்சி எத்தனை நாட்களுக்கென்று பார்த்துவிடுவோமே!

இலங்கைத் தமிழ்பேசுமினத்தின் ஒத்துழைப்பையும் பெற்று, ஆட்சிக்கு வந்த இந்தமக்

கள் முன்னணி ஆட்சிபீடம்..... நன்றி மறந்து அதே தமிழ்பேசுமினத்தை துப்பாக்கி முன்பு ஆளும் கொடுமை இன்று! ஆனால்...... ஆனால்...... இதே துப்பாக்கிகள் தமிழ்பேசுமினத்தை ஒரு போதும் அழிக்க முடியாது. நிச்சயமாகச் சொல்கிறேன் மகளே! இதே துப்பாக்கிகள் திசைமாறும்......காலம் காட்டும்.

எமது மக்களிடம் துப்பாக்கி கிடையாது, குண்டு கிடையாது. ஈழத்துப் பொலீசார் உபயோகிக்கும் கல்கூட கிடையாது. எம்மிடம் இருப்பது துணிவு. அத்துணிவு சாத்துவீகமாகிப் பர்ணமிக்கிறது. துப்பாக்கி முன்பு நெஞ்சை நிமிர்த்திக் காட்டும் வன்மை உண்டு. குண்டாந்தடி முரியுமளவு வன்மை நிறைய உண்டு. எம்மை நாய் கடிக்கும்போது—நாம் நாயைத் திரும்பக் கடிப்பது கிடையாதே! நாம் மனிதர்கள். கொடுமையில் பவிசு காணக் கூசும் நாகரீக மக்கள்— ஆமாம்! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து மூத்த குடியினர் நாம்.

மகளே இரவு வெகுநேரமாகிவிட்டது. பன்னிரண்டு மணிவரை இருக்கலாம். அதென்ன காலடி ஓசை......?மேல்மாடி விறுந்தையால் போவதும் வருவதுமாக யார்?......என் அறையைத் திறந்தேன். மன்னார்ப் பிரதிநிதி அழகக்கோன் அவர்கள் நடந்துதிரிகிறார்.

நித்திரையில்லையோ?— யான் கேட்டேன், அழகக்கோன் அவர்களை.

உறக்கம் வரவில்லையாம் உல்லாச நடை போடுகிறாராம்.

எனக்கு நித்திரை கண்ணைச் சுற்றுகிறது. மீதி நாளை எழுதுவேன்.

உன் தந்தை,
புதுமைலோலன்.

தடுப்புக் காவலில் நாம் 9

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமாகம,
24-4-1961.

பாச மகளே!

நேற்றைய மடலில் மலைநாட்டுத் தமிழரின் வேலைநிறுத்தம் சில இடங்களில் ஆரம்பித்து விட்டதாக, வானொலி மூலம் அறிந்து மகிழ்வு கொண்டேன் என எழுதியிருந்தேன் அல்லவா? இன்று காலை அவ்வேலை நிறுத்தத்தை முறியடிப் பதற்காக பிரதமரின் அறிக்கையைக் கேட் டோம். சர்வாதிகாரநாட்டில் நடைபெறுவது போன்று, அதிகார போதையுடன் தீட்டப் பட்ட அடக்குமுறை அறிக்கையைக் கேட் டோம். இப்படியான அறிக்கையைவிட பண் பான அறிக்கையை நாம் எப்படி எதிர்பார்க்க லாம்? இந்நிலையில் மலைநாட்டுத் தமிழர் போ ராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார்களா என்ற சந்தேகம் ஏற்படவே செய்கின்றது. மக் களைப் பொறுத்தவரையில் சந்தேகமில்லை ஆனால் தலைவர்கள்......அரசாங்கத்தின் மாயவலை யில் வீழ்த்தப்பட்டால்......எந்த வலை விரித்தா லும் விழாத தன்மை கொண்ட தமிழரசுத் தலை வர்களா அவர்கள்? – இல்லையே! என்ன?

மத்தியானச் செய்தியில் வேலைநிறுத்தம் நிற் பாட்டப்பட்டு, அமைதியுடன் தொழிலாளர் வேலைக்குத் திரும்பிவிட்டதையும் வானொலி கூறிற்று. ஆச்சரியப்பட்டோம். தொண்டமா

ளைப் பற்றிய மக்கள் அபிப்பிராயம் சரியானது தான் என்பதையே என்றால் உணர முடிந்தது. அரசாங்கத்திற்கும் நல்ல பிள்ளையாய், தொழிலாளருக்கும் நல்ல பிள்ளையாய் நடக்கப் பார்க்கும் தலைவர் தொண்டமான் என்பதை அவர் வந்த பாதை மெய்ப்பித்தது. அதை இன்னும் வேலை நிறுத்தம் தொடங்கி நிறுத்தப்பட்டமை ஊர்ஜிதம் ஆக்கிவிட்டது.

ஏழைத் தொழிலாளியின் வாழ்வுடன் விளையாடும் இந்தத் தலைவர்களின் சுய உருவம் தெரியப்போகும் காலம் தூரத்திலில்லை. பட்டம், பதவி, தலைமை தொடர்ந்து இருப்பதற்காக தொழிலாளர்களின் வாழ்வு பம்பரம் ஆக்கப் படுகின்றது! ஐயகோ! மலைநாட்டுத் தமிழா! உன்நிலையை எண்ணி வேதனையே அடைய முடியும். பாமரத் தொழிலாளியின் வாழ்வுடன் விளையாடும் முதலாளித் தலைவர்களே! முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் தொழிற்சங்கம் இயங்குகின்றதே! நீங்கள் செய்த சேவை என்ன? கூற முடியுமா? உங்களுக்கேன் ஒரு சங்கம்? உருப்படியாகச் செய்த ஒன்றையாவது மலைநாட்டுத் தலைவர்களால் கூறமுடியுமா—முடியவே முடியாது.

யானைப் பவனி, உலக பவனி, ஒலிபரப்பியில் அழகாகப் பேசுவது, பாராளுமன்றத்தில் ஆட்சி பீடத்திற்கு வால்பிடிப்பது ...இதைத் தவிர மலைநாட்டுத் தலைவர்கள் செய்தது யாது?

காலம் மாறும். மலைநாட்டுத் தமிழன் விழிக்கும் காலம் தூரத்திலில்லை. தமிழரசுக்கட்சி

மேடையில் உறுதியாகப் பலமுறை பேசிய தொண்டமான் எங்கே? அஸீஸ் எங்கே? வெள்ளையன் எங்கே?.......நீங்கள் மேடையில் அழகாகக் கூறியவற்றை இலங்கைத் தமிழர் மறக்கவில்லை; மறக்கவும் மாட்டார்கள். மலைநாட்டுத் தமிழரை ஏமாற்றியது போதாதென்று இலங்கைத் தமிழர்களையும் ஏமாற்ற முனைகின்றீர்கள்? வேலை நிறுத்தம் தொடங்கியிருக்கக்கூடாது. தொடங்கிவிட்டு இடையில் வேடமிடுவதா கொள்கை? வெட்கம்! வெட்கம்! தூ! தூ!

மகளே! மலைநாட்டுத்தமிழர் தலைவர்களின் உண்மையுருவம் தோல் உரிக்கப்பட்டுக் காட்ட' இவ்வேலை நிறுத்தம் போதுமானது. இந்தத் தலைமையை நாங்களினிமேல் நம்புவது பேதமை என்பதை உணர்த்திவிட்டார்கள். விசைமாறு சொல்லடுக்காகப் பேசும் கரிகாலன் இன்று கைதாகி வந்தார். அவரும் எனதறையிலேயே தங்குகின்றார். கரிகாலன்மூலம் யாழ்ப்பாணத்தின் இராணுவ ஆட்சியையும், கொடுமையையும் கேட்டோம்.

இன்று காலை பத்துமணி முதல் மத்திய இடத்தில் கூடினோம். அறப்போர் முன்னணி அரியநாயகம் அவர்கள் பேசினார்கள். பாரதத்திலுள்ள சில பாத்திரங்களைப் புதுமுறையில் புதுக் கண்ணோட்டமுடன் ஆராய்ந்து பேசினார்.

துரியோதனன் என்றால் கொடியவன், என்றே எமது மக்கள் நினைப்பர். அப்படியாகவே இப்பாத்திரத்தை நாம் படித்துள்ளோம்.

அர்ஜுனன், திரௌபதை என்றதும் உயர் ஸ்தானம் கொடுத்தே எண்ணுவோம். இந்த நிலையைப் பிழையென உணர்த்தி, பல மேற்கோள்களுடன் பேசினார். திரௌபதை ஓர் விபச்சாரியே என்று பல புது ஆலோசனைகளுடன் பேசினார். ஐவரை மணந்தாள். கன்னனிடம் ஆசை கொண்டிருந்தாள். அக்காரணமே மாம்பழம் ஒட்டும் போது கூறப்பட்டது......இப்படியான பல மேற்கோள்களை எடுத்துக்கூறிப் புதுச் சிந்தனையை உண்டாக்கினார் அரியநாயகம் அவர்கள்.

இவரது வாதத்தில் சேர்ந்தும் எதிர்த்தும் திருவாளர்கள் செ. இராசதுரை அவர்கள், அ. அமிர்தலிங்கம், மு. இராசமாணிக்கம், வி. ஏ. கந்தையா, வி. தர்மலிங்கம், பூபாலரத்தினம், தா. சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொண்டனர். இப் பேச்சுமூலம் மூன்று மணித்தியாலங்கள் புது இலக்கிய சிந்தனையுடன் கழிந்தன.

பழைய இதிகாசங்களில் கூறப்படுபவை யாவும் உண்மைதானு? – என்ற வினவை இன்றைய வளர்ந்துவரும் சமூகம் கேட்கவே செய்கின்றது. காலத்துடன் ஒட்டி சிந்திக்க வேண்டும். இலக்கியம் இக்காலத்தின் கண்ணுடியாகும். காலத்தின் நிலை எழுத்தாளரை ஆக்கிரமிக்கவே செய்யும். கால எண்ணத்துடன் பார்க்காது, இன்றையக் காலக் கண்ணேட்டமுடன் பார்த்தால் அநேகமானவை பிழையாகவே தோற்றும். பிழை மட்டுமல்ல நம்பமுடியாத தன்மை நிறைந்தே காணப்படும், எனினும் எதிலும் கற்பனை மெரு

கும் உண்டு என்பதையும் மறக்கக்கூடாது— மகளே! நீ வளர்ந்து இவற்றையெல்லாம் படிப்பாய், சிந்திப்பாய்! அன்பு! உங்கள் யாபேரையும் பிரிந்து பத்துநாட்கள் கடந்து விட்டன. என்ன ஆச்சரியம்! 240 மணித்தியாலங்களல்லவா ஓடிவிட்டன. உன் மழலைமொழி கேட்கின்றது......அ—ப்—பா என நீ கூப்பிடும் ஒலிகூட இதயத்தில் தட்டுகின்றது மகளே! பாசப் பிரிவு கொடியது என்பதை அனுபவத்தில் உணர்கின்றேன். எங்கே சிரி! ம்!

உன் தந்தை,
புதுமைலோலன்.

தடுப்புக்காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
2-5-61.

என் அருமை மகள் அன்பரசிக்கு;

இன்று வேதனைக்குள் ஒரு குதூகலம். உன்னை, உன் அம்மாவை, உன் தம்பியை, உன் அப்பாச்சியை, உன் அம்மம்மாவை......எல்லோரது சுகமும் கூறியபடி கடிதத் தூதுவன் ஒருவனை உன் அம்மா அனுப்பியிருந்தார். உன் அம்மா நாலு நாட்களுக்கு முன் தபாலிலிட்ட மடல், இரகசியப் பொலிஸ் பகுதியினரின் பரிசீலனைக்குப் பிற்பாடு என்கரமடைந்தது.

எனக்கு மடல் வரைந்ததுபோலவே வேறு சிலருக்கும் அவர்களது இல்லத்திலிருந்து மடல்கள் வந்திருந்தன. மூலைக்கு மூலை நின்றபடி கடிதங்களைப் படித்து மகிழ்ந்துகொண்டிருந்தோம்... பிரிவு வேதனையும், அதனிடையில் மடல் கண்ட மகிழ்வும் ... இப்படியாகக் காணப்பட்டனர்.

உன் அருமை அம்மா விவாகப் பதிவுசெய்த பின்பு எழுதிய முதல் மடல் என் நினைவுத் திரையில் அழித்தெழுதாச் சித்திரமாகியுள்ளது. அன்புப் பிணைப்புப் பேசும் மடல் அது. அம்மடலை விட, இன்று என்கரமடைந்த மடல், மகிழ்வை யள்ளியள்ளித் தந்தது.

"உங்கள் செல்வங்கள் அன்பரசியும் அன்

பழகனும் நலமே, மகிழ்வே உள்ளார்கள், ஆகா யக் கப்பலின் சத்தம் தினமும் கேட்டதும், அப்பா ஆ... அப்பா ஆஆ என அன்பரசி கையை உயர்த்திக்காட்டிக் கத்துகிருள். நீங்கள் கை தாகி ஆகாய விமானத்தில் கொண்டு சென் றதை யான் கூறியபிற்பாடு தினமும் இதைச் செய்கின்ருள். உங்கள் புகைப்படத்தைப் பார்த்து 'அப்பா ஆ' என்று கூப்பிடுகிருள். பாவம்! மகளின் அன்பையும் பாச உணர்வை யும், பிஞ்சு உள்ளம் தன் அப்பாவைப் பிரிந் துள்ளமையையும் எண்ணக் கண்ணீர் வழியத் தான் செய்கிறது. என்ருலும், 'மணி! எல்லாம் நன்மைக்கே! இந்தத் தடுப்புக் காவல் நாட்டுக் குச் செய்யும் கடமை. எதையும் தாங்கும் இத யம் வேண்டும்'.—என நீங்கள் வரைந்த முதல் மடலின் உபதேசமே கொஞ்சம் ஆறுதல் தரு கின்றது. உங்கள் மடலைப் பலமுறை படித் தேன், படிக்கின்றேன். மடல் வந்த பிற்பாடு உங்களது நிலைமை, சேமம் என்பன கேட்டு அமைதியடைந்தேன். நீங்கள் கைதான பிற் பாடு இங்கே (யாழ்ப்பாணத்தில்) பலவிதமாகப் பேசிக்கொண்டனர். எங்கே உள்ளீர்கள்-சிறை சாலையிலா வேறுநாட்டிலா? என்றெல்லாம் எண் ணக்கூடியதாகம் பேசிக்கொண்டார்கள். சாப் படும் நேரமெல்லாம்; உங்கள் உணவு எப்ப டியோ என்று எண்ணக் கவலையாயுள்ளது. ஆகவே அடுத்த மடலில் உணவைப்பற்றி விபர மாக எழுதுங்கள். உங்கள் மணி, உங்கள் உறு தியில் சிறிதாவது கொண்டவளாகத்தானே

இருப்பாள். உங்களிடம் படித்த பாடத்தில் மூதன்மையானது பண்புடைமையும் உறுதியும் தானே! ஆகவே நாடுவாழ, எதிர்காலம் சுபீட்சம்காண, உங்கள் பங்கும் செயலாகிறது என எண்ணி — அப்படிப்பட்ட ஒருவரின் மனைவி என்றும் எண்ணி பெருமையடைகிறேன் நாங்கள் மூவரும் உங்கள் எண்ணம் சூழ வாழ்கின்றோம்''

இப்படியாக உன் அம்மாவின்மடல் அமைந்திருந்தது. ஒரு ஆசிரியை அல்லவா? தமிழைக் கற்றவளல்லவா? அந்தப்பண்பு எழுத்தாகி, என்னை மகிழ்வில் ஊஞ்சலாட்ட உதவிற்று. யான் இங்கிருந்தாலும் உனக்கோ தம்பிக்கோ வாழ்வளிக்க உன் அம்மாவால் முடியுமே! ஏதோ மாதாமாதம் ஆசிரியையானமையால் சம்பளம் வருமே இதனுல் பொருளாதார நிலை என்னை வருத்தவில்லை.

பிரிவுக்கொடுமை என்ற அக்கினியை உன் அம்மாவின் மடல் என்ற ஐஸ் கட்டி குளிரவைக்கிறது; ஒரு கடிதத்திற்கு உள்ள பலத்தை இன்று நன்கு உணர்ந்தேன்.

கணவனுக்கு விதவிதமான உணவுகொடுத்து மகிழ்வது மனைவியரின் ஆவலாகும். அதனுலேயே, இங்குள்ள உணவைப்பற்றிக் கேட்டுள்ளார். ஆகவே இன்று உன் அம்மாவிற்கு விபரமாக எழுதவேண்டும்.

உன் அம்மாவுக்கு எழுதிய மடலில் எல்லாம் விரிவாக-இரகசியப் பொலிஸ் பகுதி பார்வையிட்டு அங்கீகரிக்கக்கூடியதாக அரசியலை விடுத்து எழுதவுள்ளேன். தடுப்புக்காவலின் உணவு நிலையைப்பற்றி யான் உனக்கு விரிவாக எழுதவில்லையல்லவா?

இப்போது எமது உணவு அறை எமது மேல்மாடிக்கு கீழாகும். காலை, மத்தியானம், இரவு ஆகிய நேரங்களில் உணவுக்கு மணி அடித்ததும் கீழிறங்கிச் சாப்பிட முடியும். அச்சாப்பிடடத்தைச் சுத்தவரவும் துவக்குத் தாங்கிய பொலிசார் காவல் புரிவர்.

சில நாட்கள் மட்டுமே எமக்குத் தேவையான உணவு, கொழும்பு கிறீன்லன்ட் ஹோட்டலிலிருந்து 'வான்' வழி கொண்டுவந்தனர். இப்போதெல்லாம், எமது மேல்மாடிக்குக்கீழே சமயலறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமயலுக்கும் சாப்பாடு பரிமாறவும், வெலிக்கடை சிறையிலிருந்து இளங்கைதிகள் பத்துப்பேர் வரை வந்துள்ளனர். அவர்களில் பெரும் பான்மையோர் சிங்களப் பையன்கள், இரண்டு மூன்று பேர் தமிழ்ப் பையன்கள்; இத்தமிழ்ப் பையன்கள் சமைப்பதையோ, உணவு பரிமாறுவதையோ யான் காணவில்லை. இவர்கள் தினமும் மலகூடம சுத்திகரிக்கும் தொழில் செய்கின்றனர்.

அதிகாலையில்—அதாவது காலை ஆறு மணியளவில் நாங்கள் படுத்திருக்கும் இடத்திற்குக் காப்பி வரும். இது அதிகாலைக் (Bed Coffee) கோப்பியாகும்.

கோப்பி வரவே நித்திரையும் கலையும். நித்திரையால் எழுந்ததும் மத்திய அறைசென்று கொஞ்சம் எண்ணெய் எடுத்துத் தலையில் வைத்வாரிக்கொண்டு, பல் துலக்கி ஸ்நானம் செய்து முடிக்க ஏழு மணியாகிவிடும். இடைநேரங்களி

லும் ஸ்நானம் செய்வர். இந்த இடைநேரத்தில் சிலர் யோகாப்பியாசம்கூட செய்வர். என் அறைக்கு அடுத்த அறையிலேயே சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தங்கி வரும் அறை. அவ்வறையில் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தான் தேகாப்பியாசம் செய்வதுடன், வேறு சிலருக்கும் பழக்குகின்ருர். மன்னூர் கைலாய பிள்ளை, பருத்தித்துறைப் பிரதிநிதி துரைரத்தினம் ஆகியோர் யோகப்பியாசம் செய்துவருகிருர்கள். இதனிடையில் காலை ஆராதனைக்கு மணி அடிக்கும். எங்கே நின்ருலும் அவ்விடத்தில் நின்றபடி இரண்டு நிமிட ஆராதனை முடிக்கப்படும்.

காலை 7-30 மணிவரையில் மணியடித்ததும் காலைச்சாப்பாட்டுக்காக கீழே, இறங்கிச் சாப்பாட்டு மண்டபத்தை நாடுவோம்.

பாண், வெண்ணெய், பருப்பு, சம்பல் என்பவற்றுடன் விரும்பியோருக்கு இவ்விரண்டு முட்டைகளும் தரப்படும். முட்டையைப் பொரித்தோ அவித்தோ அரை அவியலாகவோ பெறலாம். சிலவேளைகளில்மட்டும் இடியப்பமும் தரப்படும். இவற்றுடன் வாழைப்பழமோ அன்ஞசிப்பழத்துண்டோ தரப்படும். காலைச் சாப்பாடு முடிந்ததா? பத்து மணியளவில் இரண்டு மூன்று நாட்களாக அரியநாயகம் அவர்களுடைய புதிய ஆராய்ச்சி நிரம்பிய பேச்சுக்களும் சம்வாதங்களும் நடக்கின்றன.

மூன்று நாட்களுக்கு முன்பு, பாரதத்தின் கதாபாத்திரங்களைப்பற்றிய புதிய ஆராய்ச்சி

சூடு பிடித்தது. அரியநாயகம் அவர்களுக்குப் பதில் கொடுக்கும் முகமாக வவுனியாப் பிரதிநிதியும் பருத்தித்துறைப் பிரதிநிதியும் பேசிய பிற்பாடு வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பேசி முடித்தார். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பேசிய பேச்சில் தெய்வத்தன்மையைச் சேர்த்துப் பார்க்கும்போதுமட்டும் வலுவடைவதைக் காணமுடியும்.

எனவே அரியநாயகம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கருத்தையும் நினைவுறுத்தி தெய்வத் தன்மையை நீக்கிவிட்டுப் பார்த்தால் என நான் பேசத் தொடங்கினேன். கோபம் வதனத்தில் கோடிட அமிர்தலிங்கம் அவர்கள் திரும்பவும் கூறியதையே கூற ஆரம்பித்தார். வாதப்பிரதிவாதத்தின்போது எதிர்வாதத்தையும் பலவகைப்பட்ட கருத்துக்களையும் தனக்கு ஏற்புடைத்தாகாத கருத்துக்களையும் கூடக் கேட்டேயாகவேண்டும். அதைவிடுத்து ஒருபோதும் தனது நியாயமே நியாயமானது,அதையே யாபேரும் வரவேற்கவேண்டுமென எண்ணலாமா! அப்படி அமிர்தலிங்கம் எண்ணக் கூடியவரல்ல எனினும், ஆத்திரமுடன் ஏன் பதற்றமடைந்து பேசவேண்டும்? ஆச்சரியப்பட்டேன்! நாமெல்லாம் என்ன மகாத்மாக்களா? சாமான்ய மனிதர்கள்தானே? அதன் பிற்பாடு இந்த வாதப்பிரதிவாதத்தின்போது—ஒரு நூல் வாசிப்பு நல்ல பொழுதாகும் என்று தீர்மானித்தேன். அன்றைக்குப் பின்பு சிலர் இப்பேச்சுக்களில் கலந்துகொள்ளாதே விட்டுவிட்டனர்.

அரியநாயகம் அவர்களது பேச்சு முடிய, சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பகவத் கீதை பற்றிப் பேசிவருவதாகவும் கூறினர். பின்பு கதிரவேற்பிள்ளை அவர்களும் பேசிவருவ தாகக் கூறினர்.

இப்பேச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பத்துமணியளவில் தோடம்பழம் கரைத்த நீர் கொண்டுவந்து தருவர்.

பன்னிரண்டரை அல்லது ஒரு மணியளவில் மத்தியான உணவுக்கு மணியடிக்கும். சோறு மூன்று காய்கறிகள் வரை, மீன் என்பன தரப் படும். இடைக்கிடை இறைச்சியும் தரப்படும். மரக்கறி உணவுமட்டும் சாப்பிடுவோர் பிறி தான மேசையில் சாப்பிடுவர், அவர்களுக்கு தயிரும் கொடுப்பர். வெள்ளிக்கிழமைகளில் எல்லோருக்கும் அதிகமாக மரக்கறிகளே. உணவு சம்பந்தப்பட்ட மட்டில் தேவையான வற்றை உரியவர்களிடம் தெரிவித்து ஆவன செய்வதில் அடிக்கடி ஊர்காவற்றுறைப் பிரதிநிதி கந்தை யா அவர்கள் ஈடுபடுவர்.

மத்தியானச் சாப்பாடு முடிந்ததா?

கொஞ்சநேரம் ஓய்வு, நான் கொஞ்சநேரம் தூக்கம் போடுவேன். பின்பு வாசிப்பு அல்லது ‘ட்ருவ்போட்’ விளையாட்டு, இப்போது கரம் போட் இரண்டும் தந்துள்ளனர். ‘கரம்போட’ விளையாட்டு எனக்குப் பிடித்தமான விளையாட் டாகும். இவ்விளையாட்டில் அதிக தேர்வு

உண்டு. ஆகவே நால்வர் கூடியோ அல்லது இருவர் கூடியோ விளையாடுவோம். மாலையா யதும் தேநீருக்கு மணி அடிக்கும். பிஸ்கற்றுடன் தேநீர் அல்லது பாணுடன் தேநீர் கிடைக்கும். பின்பு கரமோ, ட்ருவ்ற்ரேகடதாசிக்கூட்டமோ கலந்துரையாடலோ நேரத்தைக் கழியச் செய் யும.

இரவு ஆகும். சிலர் எழுதுவர், சிலர் படிம் பர், சிலர் கரம்போன்றவை விளையாடுவர். சிலர் வானொலி கேட்பர். சிலர் கதைத்து ஓடு தகரச் சிரிப்பர்.

மணியடித்ததும் இரவுச் சாப்பாடு. சோறு சாப்பிட விரும்புவோர் சோறு சாப்பிடலாம். மற்றையோருக்குப் பாண், வெண்ணெய், ஜாம், பழம் என்பன கிடைக்கும். பாணுக்குரிய உருசி வகைகளும் கிடைக்கும். சில வேளைகளில் இடி யப்பம், தோசை, சப்பாத்தி என்பன மாறிக் கிடைக்கும்.

பின்பு இரவு பத்து மணியளவில் பால் கொ டுப்பர். பாலாக இருக்காது. அதன் உருசியை ஒரு முறை சுவைத்தோர், பின்பு சுவைக்க விரும்பமாட்டார்.

நல்ல உணவாச்சே, சீவசத்துள்ள உணவுகள் கொடுக்கின்றனரே என எண்ணத் தோன்றும். சிங்களப் பையன்கள் சமைப்பதனல் தமிழ்ச் சமையலாகச் சமையல் அமையாது சிங்களச்

சமையலாகவே அமையும். மீன் குழம்பு, தேங்காய்ப்பால் இல்லாது சமைப்பது, சிங்கள மக்களின் வழமை. அதேபோல சமைத்தால் எப்படியமையும்? ஆக்குகின்ற தன்மையினுலே உருசிகெட்டுவிடுகின்றது. அதைவிட சோம்பலாக மேன்மாடியே கதியென்று இருந்துவிட்டுச் சாப்பிடுவதனுல்,—வேலைசெய்துவிட்டுச் சாப்பிடும் மகிழ்வைக் காணமுடிவதில்லை.

உன் அம்மா, என் அம்மா சமைத்த உணவுகளை சுவைத்த எமக்கு, இவ்வுணவுகள் உருசியை எப்படித் தரமுடியும்?

கூட்டிலே கிளியை அடைத்துவிட்டுப்பாலும் பழமும் பழரசமும் கொடுத்தால்......கிளி மகிழவா செய்யும்?

அரசாங்கம் காரணம் கூறமுடியாது, அவசர காலநிலையின்கீழ் கைதாக்கி வைத்துள்ளனர். உணவு கொடுக்கவேண்டியது கடமைதானே! வீட்டிலே சாப்பிடும் சம்பலும் சோறும், இத்தனை உணவுகளுடன் சமமாகுமா?

சுதந்திரம் என்ற அரிய இடத்தை நோக்கிப் பிரயாணம் செய்யும் எம்மை-கிளியை அடைத்து, உணவு கொடுப்பதுபோல—தடுத்து வைத்து ஆட்சிபீடம் மகிழ்கின்றனர். சுதந்திர உரிமைப் போராட்டத்தைத் தடுப்புக் காவலோ, சிறை முகாமோ, துப்பாக்கிச்சூடோ தடுத்ததாக வரலாறே கிடையாதே! தடுக்க தடுக்க முன்னேற்

றத் துணிவு தருவது சுதந்திரப் போராட்டம். என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம், என்று மடியும் எங்கள் சுதந்திர மோகம் என்ற உணர்வுடன், 'செய் அல்லது செத்துமடி' என்றகொள்கையுடன் ஏறுநடை போட்டவர்கள், நினைத்ததைச் செய்தனர். காணத் துடித்ததை தமது வாழ்நாளிலேயே கண்டும் விட்டனர். சர்வாதிகாரிகள்கூட, மக்கள் எழுச்சிமுன்பு மார்புகாட்ட முடியாது ஓடி ஒளித்தனர் என்றே வரலாறு கூறுகின்றது. சேரனையும் சோழனையும் பாண்டியனையும், அவர் தம் வீரத்தினையும் கேட்ட, கற்ற, தமிழ் மக்கள் தமது காலத்தில் வந்த இழப்பை நீக்க, ஒரு சிறிது தியாகத்தையாவது ஏன் செய்யக் கூடாது. உரிமைப் போராட்டத்தில் நாமிழப்பது எமது வாழ்வைமட்டுமேயாகலாம். ஆனால் சுதந்திர உரிமை கிடைக்குமே! எங்கள் சந்ததி அந்தச் சுதந்திர பூமியில் உரிமை மாநிலத்தில் வாழுமே! அதற்காக நாமும் ஓரளவு தன்னலமறுப்பினைச் செய்கின்றோம் மகளே! பலமுறை சிறை சென்ற மகாத்மா, ஜவகர்லால்நேரு ஆகிய தலைவர்கள் தமது வாழ்வின் சுகத்தை யிழந்திருக்கலாம் ஆனால், நாட்டின் சுகத்தினை, மாநிலத்தின் உரிமையினை பெறவழி கொடுத்தனரே! என்றுவது மடியப்போகும் நாம், எமது வாழ்நாளில் உரிமை காணுதுவிட்டால்,........உரிமைப் போராட்ட அங்குரார்ப்பணத்தைச் செய்தோம் என

-நாளைய சந்ததி எம்மை வாழ்த்த உழைத்தோம் என மகிழலாம். எதற்கும் ஒரு தொடக்கம் உண்டு. அத் தொடக்கம் நியாயவழிக்காகத் தொடர்ந்தால், முடிபு சரியானதாகவே அமை யும்; அமையமுடியும். இத்தத்துவங்களை நான் கூறவில்லை. பலநாட்டுவரலாறுகள் சாற்றும் உண் மைகள், மகளே உண்மைகள். எனவே அச்சம் விட்டு, சுயநலம் விட்டு, நாட்டுப்பற்றும் மொழிப் பற்றும் கொண்டு உழைப்போம், ஓயாது உழைப் போம்;......உரிமை பெறும்வரை உழைப்போம். உன் அப்பாவும் அதற்காக உழைக்க ஆயத்த மென மகிழ்வாயாக.

அன்பு! 27-4-61ல் மட்டக்களப்பு வழக்கறி ஞர் சாம் தம்பிமுத்துவும், 28-4-61ல் வவுனி யாவில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட ஆசிரியர் வின்சென்றும் கைதாகி எமது தடுப்புக்காவலில் வந்து சேர்ந்தனர். 1-5-61 ல் சாவகச்சேரி வழக்கறிஞர் ஆசீர்வாதம் அவர்களும் வந்தார்கைதாகி.—29-4-61 வெசாக் தினமல்லவா? எமக்குப் பால்புக்கை எனக் கூறும் 'கிரிபத்' உணவை காலை உணவாகத் தந்தனர்.

நேற்று நானும் பருத்தித்துறைப் பிரதிநிதி துரைரத்தினமும், உடுவில் பிரதிநிதி தர்மலிங் கமும், வவுனியா கைலாயபிள்ளையும். கரிகால

னும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், ஒரு பிரச்சினை உண்டாகியது. தமிழ்பேசும் மக்கள் மத்தியிலும் உள்ள பிரச்சினையே அது. அதனை நாளை வரைவேன். உன் அம்மாவை தினமும் கடிதம் எழுதச் சொல்! எங்கே........டாட்டா!

அன்புத்தந்தை,

புதுமைலோலன்.

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
5-5-1961.

என் வாத்சல்லிய உருவமே!
மகளே!

சென்ற மடலில், யானும், கரிகாலனும், உடுவில் எம். பி. தர்மலிங்கமும், பருத்தித்துறை எம். பி. துரை ரெத்தினமும், வவுனியா உதவிக் கிராமச் சங்கத் தலைவர் சுப்பிரமணியமும், வவுனியாவைச் சேர்ந்த கைலாய பிள்ளையும் ஒரு பிரச்சினை பற்றிக் கலந்துரையாடினேம் என எழுதினேன் அல்லவா?

இந்தப் பிரச்சினை பற்றி நாட்டிலும் பலர் மத்தியில் பேசப்பட்டதுண்டு.

ஈழநாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த பிற்பாடு, தமிழ் பேசும் மக்களின் நிலை கீழ் இறங்க ஆரம்பித்தது. நாளொருமேனியாகக் கீழிறங்கி இறங்கி, அனாதரவாய், ஆதரவற்றதாகத் தமிழ் பேசுமினம் மாறிற்று. எப் பக்கம் பார்த்தாலும் அநீதி கோலோச்சியது. அராஜகம் தலை விரித்தாடியது. இந் நிலையில் இனமுழக்கம் இட்டபடி தமிழ் பேசுமினமக்கள் மத்தியில், அபாரமான ஆதரவுடன் தமிழ்க் காங்கிரஸ் கட்சி குரலெழுப்பியது. பாராளுமன்றம் சென்றதும் அவர்களது குரல் கம்மியது. எழுச்சி, இனமுழக்கம், உரிமை என்பவற்றையெல்லாம் விற்று, ஒரே ஒரு மந்திரிப் பதவி பரிசாகப் பெறப்பட்டது.

அதனுல் வீழ்ந்துகொண்டிருந்த தமிழ் பேசுமினம் ஆதரவாய் அமைந்திருந்த கொடியையும், இழந்தது. அதனுல் தமிழ் பேசுமினம் சொன்னபடி நடக்க முடியாத இனம் என்ற பெயரைப் பெற்றது. இலட்சியம் ஊசலாடியது.

இந்நிலையில் தமிழ் பேசுமின மக்கள் மத்தியில் புது முறுக்குடன் இலங்கைத் தமிழினம் எழுச்சி கொள்ள, சுதந்திர தாகம் மிளிர — தமிழரசுக் கட்சி — உதயமாகியது. ஆரம்பத்தில் வெறுப்புடன் — எதிர்ப்புடன் — தமிழரசுக் கட்சியையும் மக்கள் பார்த்தார்கள். தமிழ்க் காங்கிரஸ் கட்சியிடம் படித்த பாடம் வேறெப்படிப் பார்க்கச் செய்யும்?

தமிழரசுக் கட்சியிடம் மாருத, அசைக்க முடியாத கொள்கை இருந்தது; நேர்மை நிறைய இருந்தது. கடமை உணர்ச்சி அபரிமிதமாக இருந்தது. ஒப்பற்ற தலைமை இருந்தது.

அதனுல் தமிழரசுக் கட்சி வளர்ந்தது; வளர்ந்தது; வளர்ச்சியின் எல்லையை அடைந்தது. வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழரோ...... ஈழத்தில் எங்கும் வாழும் தமிழரோ...... அத்தனைபேரும் ஒரு கொடியின் கீழ்...... தாயின் மணிக்கொடியாம் மூவர்ணக் கொடியின் கீழ்...... ஒன்றுபட்டனர்.

மக்களின் சார்பிலே அபரிமிதமான வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றம் சென்ற பிரதிநிதிகள், தமிழ் பேசுமினத்தின் பிரச்சினையை ஆணித்தரமாகப் பாராளுமன்றத்தில் பேசினர். 1949-ம் ஆண்டு தொடக்கம் பேசப்பட்டது. அமரர் வன்னியசிங்கம் அவர்கள், உணர்ச்சியுடன் ஆற்றிய உரைகள் எத்தனை?

இத்தனை ஆண்டு காலமும் பாராளுமன்றத்தில் எங்களது குரலைச் சரியாகத் தமிழரசுக் கட்சி உபயோகித்தது. உலக நாடுகள் அறியப் பாராளுமன்றப் புத்தகத்தில் (ஹன்சாட்) பதிவு பெற்றது ஒழியப் பலன் என்ன?

தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது அராஜரீகத்தை, என் பதை ஓரளவில் மட்டுமே ஒப்புக்கொள்ள முடியும். ஆனால், பேசிய அளவுக்குப் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த அளவுக்குப் பலன் உண்டானதா? ஆகவே, தமிழ் பேசும் மக்கள் ஏன் பாராளுமன்றத்தைப் பகிஷ் கரிக்கக்கூடாது......? இது நாங்கள் கலந்துரையாடிய பிரச்சனையாகும்.

சென்ற தேர்தலின்போது கூட மக்கள் பல இடங் களில் இந்த வினவைக் கேட்கவே செய்தனர்!

பாராளுமன்றத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாணங் களிலிருந்து ஒரு பிரதிநிதிகூடப் போகாதுவிட்டால்...... உரிமை கிட்டும்வரை தமிழன் ஈழத்தில் தகுந்த அந் தஸ்துடன் மிளிரும்வரை...... பிரதிநிதித்துவமின்றிப் பாராளுமன்றக் கதிரைகள் இருப்பின் சிறப்பென்றே யானும் கருதினேன்; கருதுகின்றேன். பாராளுமன்றத் தில் பேசிவிடுவதால் இன்று என்ன பலன் உண்டு? இதை உடுவில் பிரதிநிதி தர்மலிங்கம் கூட ஒப்புக்கொண்டார். தேர்தல் வரும்போதெல்லாம் ஒருவரும் அபேட்சகராக முன்வராது, கட்டுப்பணம் கட்டாது ஏகமனதாகப் பகிஷ்கரிக்கலாம், அல்லது பாராளுமன்றம் போவது, எங்கள் கொள்கையை முன் வைத்து ராஜிநாமாச் செய் வது, திரும்பவும் தேர்தல் வரும்; பாராளுமன்றம் போவது, ராஜிநாமாப் புரிவது. இப்படியும் செய்ய லாம் எனப் பேசப்பட்டது.

ஆனல் தேர்தலில் யாரும் அபேட்சகராகாவிட்டால் நன்றே! வேறு கட்சிகளும் தயாராக வேண்டுமே! மற்றக் கட்சிகளுடன் ஒப்பந்தம் பேசி அப்படிச் செய்ய லாமெனினும், கம்யூனிஸ்ட் கட்சியோ, சமஜமாஜக் கட்சியோ தயாராவாரா? அவர்களது சிங்களத் தலைமை ஒப்புக்கொள்ளாதே! எல்லோரும் ஒப்புக் கொண்டா லும், அல்பிறட் துரையப்பா போன்ற கொள்கை அற்ற வர்கள் அபேட்சகராகாது விடுவாரா?

கொள்கையற்றுப் பாராளுமன்றத்தில் ஆட்சிபீடத்திற்கு வால் பிடிப்போர், சொந்த வாழ்விற்காகப் பந்தம் பிடிப்போர், பாராளுமன்றம் சென்று தமிழ் பேசுமினத்திற்கு மாசு புரிவதிலும் பார்க்கக் கொள்கையாளர் போவது தானே சிறப்புடையது. இதுவும் சிந்திக்க வேண்டியதே. முழுத் தமிழ் பேசுமினமும் இதற்குத் தயாராளுல், இதைவிடச் சிறந்த போராட்டம் கிடையவே கிடையாது. உலக அரங்கில் பெரியதோர் இடத்தை ஈழத்தமிழினம் பெறமுடியும். ஒன்றுபட்ட தன்மை, பொதுநல எண்ணமுடன் எல்லாரிடமும் இருக்குமாளுல், பாராளுமன்றப் பகிஷ்கரிப்புப் போன்ற போராட்டம் மிகச் சிறப்புடையது. முழுத் தமிழ்பேசும் மக்களும் பங்குபற்றும் போரட்டமாகவும் அமையும். பல இன்னல்கள் வரலாம் - சாதாரண சலுகைகள் தடைப்படலாம். ஆளுல் அரியதொரு போராட்டத்தை நடத்தியபடியே இருக்கலாம். தமிழ்பேசுமினத்தின் ஒற்றுமையை பிரச்சாரமுகத்தால், ஏற்படுத்தி யாரையுமே பாராளுமன்றம் செல்லாது தடுத்தால் என்ன என்றுகூடப் பேசிஞேம்.

பாராளுமன்றம் போவது - பின் உடனடியாக ராஜிநாமாச் செய்வது இதுவும் நல்லதொரு போராட்டமே எனினும், ஈழத்துத் தேர்தலில் முழு மக்களும் வாக்குகளைச் சரியாக உபயோகிக்கும் பான்மையும் தேவை. அப்படி இருப்பின் அபேட்சகர்கள் வீணுகப் பணம் செலவு செய்ய வழி ஏற்பட முடியாது. இதற்கும் தமிழ் பேசுமினத்தின் ஒற்றுமையே அவசியம். மக்களின் சக்தி ஒன்றுபட்டால், மேற் குறிப்பிட்ட போராட்டங்களைச் செய்வது சுலபமும், பலன் கூடியதுமாகும். அதற்குத் தலைமை தேடி அலையும் பண்பற்ற படித்த கூட்டம் விடுமா ?

இவற்றையெல்லாம் தமிழ்பேசும்மக்கள் சிந்திக்க வேண்டும். புனராலோசனை செய்யவேண்டும்! இப்படி நாங்கள் முடிவு காணமுடியாத இப்பிரச்சனையைப் பற்றிக் காரசாரமாகக் கலந்துரை செய்தோம்.

இன்று ஆனி மாதம் ஐந்தாம் திகதியல்லவா? ஈழத்துத் தமிழ்பேசுமினத்தைப் பொறுத்தவரை இன்றைய தினம், போராட்ட ஆரம்ப நாளல்லவா? உரிமை கோரி முதன் முதல் தமிழ்பேசுமினம் சாத்துவிக வழியில் இரத்தம் சொரிந்த நாளல்லவா?

1956-ம் ஆண்டு ஆனி மாதம் ஐந்தாம் திகதி சிங்கள மக்கள் தங்கள் முகத்தில் கரி பூசிக்கொண்ட தினம்! தமிழ்பேசுமினம் எழுச்சியின் முதல் பாடத்தை நடைமுறையில் காட்டிய தினம்! அன்றைய பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா அவர்கள் இரும்பு வேலி போட்டு, பாராளுமன்றத்தில் "சிங்களம் மட்டும்" மசோதாவை நிறைவேற்றிய தினம். இம் மசோதா நிறைவேறுமென்பது தெரிந்ததே! பெரும்பான்மை வாக்குகள் சாதகமாயிப்பதனுல் நிறைவேறத் தானே செய்யும்!

ஆனுல் இதனைத் தமிழ்பேசுமினம் எதிர்க்கின்ருர்கள் என்பதை உணர்த்திய தினம் ஆனி ஐந்து.

அன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி காலிமுகக் கடற்கரையை நாடிக் கொழும்பு சேர்ந்தது. தொண்டர்களும், பாராளுமன்றப் பிரதிநிதிகளும் பம்பலப் பிட்டிக் கோயிலில் கூடினேம்.

"சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துக் கொடு"; "தமிழும் ஆட்சிபீடம் ஏற வேண்டும்"; "சகோதர மொழியை அழிப்பதில் சிங்களம் வாழுமா?" "நாம் கேட்பது மனித நீதி"; "பல மொழி பேசுகின்ற மக்கள் கொண்ட பிரதேசங்களைப் பார்"; "அறப்போர் வெற்றியைத் தரும்"; "இரத்தம் சொரிந்தும் மொழி காப்போம்"; "நமது மொழி எமது விழி"......... இப்படியான சுலோகங்களை அட்டையிலே, தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிக் கழுத்திலும் போட்டுக் கொண்டு, அமரராகிவிட்ட வன்னியசிங்கம், தந்தை செல்வநாயகம் ஆகியோர் முன் செல்ல நாங்கள் தொடர்ந்து சென்ருேம். காலிமுகம்

.........உதய ஞாயிறு உதயமாகி இரண்டு மணித்தியாலங்கள்வரை கழிந்துவிட்டன. காலிமுகப் பசும் புற்றரையை நாடினேம். அன்பு நெஞ்சம் நிறைய, அறம் கண்களிலே சொரிய ஊர்வலம் வருகிறது. எதிரே ஆயத்தப்படுத்தப்பட்ட இன்னேர் ஊர்வலம்.............. உயர்ந்த மூங்கில்தடியில் சிங்கக் கொடி பறக்க இன்னேர் ஊர்வலம் வருகிறது.

இதைவிடச் சிங்கள மக்கள் எங்களைச் சூழ ஒன்று படுகிருர்கள். சிங்கக் கொடியுடன் வந்த ஊர்வலம்...... சிங்கள மக்களின் தார்மீக உணர்ச்சியைக் கொன்றது. புத்தரின் அஹிம்சையைச் சமாதிக்கு அனுப்பியது.

என்ன ஆச்சரியம்? தமது நாட்டுக் கொடியின் புனிதம் தெரியாத அவர்கள்............. கொடி சுற்றிவந்த மூங்கிலை முறித்தார்கள். அந்த ஊர்வலத்தில் வந்தோருக்கு மூங்கில் தடியே ஆயுதமாகியது.

சிங்கக்கொடியை அவர்களே முறித்தனர். எதிர்காலம் முறியப்போகும் கொடி என்பதை......... அவர்களறியாதே செய்தனர்.

பின்பு.........?

?...........?

சறக்.........டடக்.........மூங்கில் தடிகளின் நுனிகள் தமிழ்பேசும் மக்களின் உடம்பில் எழுப்பிய ஓசை அடி .........உதை.........எச்சில் துப்பல்...........எங்கள் அறப் போர் வீரர் நிமிர்ந்து உட்கார்ந்தபடி—தமிழ் வாழ்க!— எனக் குரல் கொடுக்கின்றனர்.

அடி ஓயவில்லை. வன்னியசிங்கம் அவர்களின் சட்டை (நாஷனல்) கிழிக்கப்படுகின்றது. அவரை உருட்டி உருட்டி அடிக்கிருர்கள்; மிதிக்கிருர்கள். வன்னியரின் அருகே நாம். நான் அவர் வதனத்தைப் பார்த்தேன்.

என்றுமே காணாத பூரிப்புடன் காணப்பட்ட திடஉள்ளம் கண்டேன்.

என் அருகே மல்லாகம் வழக்கறிஞர் நடராசாவும், கொடிகாமம் ஸ்ரீ முருகனும் உட்கார்ந்திருந்தனர்.

சுற்றிச் சுற்றி அடித்துவந்த காடையர் கூட்டம், நடராசாவின் வெண் மண்டையில் சளார் பளார் என அடித்தார்கள். நடராசா அவர்களது சட்டைப் பையிலே வைத்திருந்த கண்ணாடியை, கூட்டுடன் எடுத்து, தாம் திருடர் கூட்டம் என மெய்ப்படுத்தினார்கள் காடையர் கூட்டம்.

பின்பு.........

ஸ்ரீ முருகனை உதைத்து வீழ்த்துகிறார்கள். அடி, அடி!

பக்கத்தேயிருந்த என் முதுகிலே பலமான உதை...... பின்பு அடி......... யாரோ இருவர் இழுத்தனர். இழுத்து இழுத்து அடிக்கிறார்கள். எமது வன்மை, திடம். நோவை ஏற்கவே செய்தது.

காலிமுகப் பசும் புற்றரையிலே தமிழ் இரத்தம்— — இரத்தக்குறி — பதித்து விட்டோம். தியாக இரத்தம் சொரியப்பட்டது.

சிங்கள மகன் ஒருவன் கொக்குவில் அப்பையாச் சாமியாரின் பனை ஓலையால் செய்து போடப்பட்டிருந்த தொப்பியை எடுத்தான். அதனுள் எம் முன்னேயே தனது சிறுநீரைச் சேர்த்தான். பின்பு நிர்வாணமானான். .........அந்நிலையில், எங்களிடையில் சிறு நீரைத் தெளித்த படி நடனமாட ஆரம்பித்தான். ஐயகோ! சிங்கள இனமே! உனது பண்புடமை கண்டோம்............உன் உள்ளம் வளராமை கண்டோம்...........!

காலிமுகம் நிறையச் சிங்களவர் கூட்டம்......நாங்கள் இரத்தம் ஒழுக ஒழுக எழுந்தோம். இன்னும் முன்னே

றினோம்.........பாராளுமன்றக் கட்டிட மேன்மாடியில், ஆட்சிச் சக்கரத்தை உருட்டும் பண்பாளர்.........பதினு யிரக் கணக்கான சிங்கள மக்கள் மத்தியில் நானூறு தொண்டர்கள் நாம். ஆகாயம் கறுத்தது. மழை...... மழை...... அத்துடன் சிங்களமக்கள் எறியும் கல்மழை, கற்கள் ஒரு பனங்காயளவு இருக்கும். வட்டுக்கோட் டைப் பிரதிநிதி அமிர்தலிங்கம் தலையில் ஒரு கல் பலத்த காயத்தை வருவித்தது. இன்னும் பல தொண்டர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற டாக்டர் நாகநாதன் அவர் கள் பலத்த தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார். பொலீ சார் இத்தனையும் நடந்த பிற்பாடு வந்தனர்.........!

மாலை பாராளுமன்றத்துள் அமிர்தலிங்கம், கட்டிய காயத்துடன் சென்று வீர உரையாற்றினர். உங்கள் கட்சியின் அலங்கோலத்தைப் பாருங்கள் எனச் சவால் விட்டார்.

இந்நிலையில் கேலி பேசியவர்களும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கத்தான் செய்தனர். என்ன செய்வோம் தமிழனின் சாபக்கேடு.........!

அன்று நாம் சத்தியாக்கிரகத்தைக் காலிமுகத்தில் ஆரம்பித்து வைத்தமையால், உலகத்தில் நல்ல அபிப் பிராயத்தைத் தேடினோம்.

உலகின் எல்லாப் பத்திரிகைகளும் எமது கோரிக்கை நியாயமானதெனவும், எமது முதல் போராட்டம் காந்தியடி களே மெச்சத்தக்க போராட்டமெனவும் எழுதின.

உலக அரங்கில் ஈழத் தமிழினத்தின் பிரச்சினையை உணர்த்த முடிந்தது பாராட்டத்தக்கதல்லவா?

அன்று போராட்டத்தை நாம் தொடங்காது விட் டால், ஈழத்தில் தமிழ்மொழி பேசுகின்ற ஓர் இனம் இருப்பதையே உலகு அறியச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக் காதே.

அது மட்டுமா, ஈழத்தின் வரலாற்றில்... ஈழத்துத் தமிழினம் சிங்களத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அறவழியில் எதிர்த்தார்கள் என்ற வசனத்தைச் சேர்த்தோமே! இன்றல்ல, நூறு ஆண்டு கழியினும்....... நாளையசந்ததி இவ்வரலாற்றைப் படித்து, எம்மை வாழ்த்தி, ஏறுநடை போட வழி அமைத்தோம்.

மகளே! நீ கூட சரித்திரம் படிக்கும்போது........ உன் தந்தையின் காலத்துத் தமிழர் விட்டுக்கொடுக்கவில்லை என்பதைப் படித்துப் பெருமை அடையப்போகிறாய். ஆனி ஐந்து வரும்போதெல்லாம்........... எமது போராட்ட அங்குரார்ப்பணத்தை மறக்கமுடியுமா? ஆனி ஐந்து கோழையையும் வீரனாக்கும் தினம்.

இன்று நாங்கள் — வடக்குக் கிழக்கு மாகாணம் எங்கும் தமிழர்கள், தமது சட்டையில் அணியும் கறுப்பு அடையாளத்தை — நாமும் அணிந்தோம்; பலர் பிரார்த்தனை செய்தனர்.

இப்போது சட்டக் கல்லூரி மாணவரும், யாழ்ப்பாணக் குருநகரைச் சேர்ந்தவருமான அன்ரனி அவர்கள் சாப்பாட்டு ஒழுங்குகளைக் கவனித்து வருகிறார்.

இன்று முல்லைத்தீவு பட்டின சபைத் தலைவர் அவர்கள் கைதாகி எமது குடும்பத்துடன் வந்து சேர்ந்துள்ளார்.

சரி........ பின்பு மீதி எழுதுவேன்.

உன் அன்புத் தந்தை,

புதுமைலோலன்

## தடுப்புக் காவலில் நாம் 12

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
17-5-1961.

என் இரத்தப்படைப்பே!
மகளே!

இன்று கைது செய்யப்பட்டு ஒருமாதம் கழிகின்றது. சென்றமாதம் பதினேழாம் திகதிதானே யாழ்ப்பாணம் கச்சேரி வாயிலிலே ஆண் பெண் தொண்டர்களின் இரத்தம் ஓடிய நாள். சத்தியாக்கிரகம் என்ற புனிதத்தை உணர முடியாத இராணுவம், அட்டூழியம் செய்த தினம். வடக்குக் கிழக்கு மாகாணமெங்கும் அராஜகம் தலைவிரித்தாடிய நாள் சென்ற பதினேழுதானே!

யான் கைதான காட்சியை, கச்சேரி வாயிலில் நாம்; பின்பு இங்கே கொண்டு வரப்பட்டமை என்பவற்றை எண்ணுகின்றேன் எண்ணுகின்றேன்! அடக்கு முறையே! உனது காலம் நீடித்ததல்ல...... உன் தாண்டவம் எந்த நாட்டிலும் வெற்றி கண்டதில்லை. நிச்சயம் தோல்வியே காணும்...... இன்று வடக்கு, கிழக்கு மாகாணமெங்கும் ஹர்த்தால் எனக் கேள்விப்பட்டோம். உண்ணுவிரதம் அனுஷ்டிக்கின்றோம். சிலர் உண்ணுவிரதத்துடன் மௌன விரதத்தையும் அனுஷ்டிக்கின்றனர். பகலில் இளநீர் மட்டுமே குடிப்பதாக ஒழுங்கு செய்துள்ளோம். பலர் பிரார்த்தனை செய்தபடி உள்ளனர்...... இங்கே நாங்கள் உண்ணுவிரதம் அனுஷ்டிக்கும் அதே வேளையில் வடக்கு, கிழக்கு மாகாணமெங்கும் பூரண ஹர்த்தாலும் கோயில், தேவாலயங்கள், மசூதிகளில் விசேஷ பூசையும் நிகழுகின்றது. இராணுவத்தின் அட்டூழியம், தமிழ்பேசும்

இனத்தின் ஒன்றுபட்ட போராட்ட உள்ளத்தை எதுவும் செய்துவிடவில்லை...... என்பதை இன்றைய ஹர்த்தால் மெய்ப்பிக்கின்றதே. இந்தக் ஹர்த்தால் மிக அமைதியாக நடக்க வடக்கு, கிழக்கு மாகாணமெங்கும் ஓடி, ஓடி ஒழுங்கு செய்து வருகிறாராம், உடுப்பிட்டி சிவசிதம்பரம்; அவருக்குத் தமிழினம் நன்றி கூற வேண்டும். அவருக்குப் பக்க பலமாகத் தமிழரசுக் கட்சியின் செயல் வீரர்கள் இருக்கின்றார்களே ........ அதோ ஒரு கரம் பீற்றர் சோமசுந்தரம், அதோ மறுகரம் வித்துவான் கந்தையா, அதோ இன்னோர் கரம் கொக்குவில் அருணாசலம், அதோ சங்குவேலி அரசரத்தினம் ஆசிரியர்...... அதோ துன்னாலை செல்லையா... அதோ கைதடி செல்லத்துரை... அதோ ஆசிரியர் இ. க. தியாகராஜா... அதோ மாநகர உறுப்பினர் நா. த. செல்லத்துரை, அதோ கந்தர்மடம் அருள் கார்த்திகேசு, கல்வியங்காடு மணி, பழனி..... அதோ நல்லூர் செல்வி பாமசக்தி... அதோ இணுவில் முத்துலிங்கம், குமாரசாமி, பண்டிதர் இராசையா...... அதோ ஊர்காவற்துறை இம்மானுவல், அரங்கதாசன், அதோ வல்வெட்டித்துறை இராமச்சந்திரன், வண்ணார் பண்ணை சிதம்பர ஈஸ்வரன், குணராஜா, க. ஜீவகாருண்ணியம், சேகரம், இரும்புக்கடை மணியம், அம்பி, நாவேந்தன் எத்தனை எத்தனை வீரர்கள் எது வரினும் தயங்காத வீர திலகங்கள்..... இவர்களது பக்க பலம் இருக்குமட்டும் ஹர்த்தால் என்ன?..... எத்தனை போராட்டங்களையும் செய்யலாமே... நானறியாத, நான் பழகாத வீரச் செம்மல்கள் ஆயிரக்கணக்காக எமது பாசறையில் உண்டே! பின்பேன் தயக்கம் புறப்படட்டும் வீரர்படை.

ஆண்டு பல கடக்கலாம், உரிமை கிட்டும் வரை, எங்கள் போராட்டம் நடந்துகொண்டேயிருக்கும் என்பதை இன்றைய ஹர்த்தால் மெய்ப்பிக்கும். மகளே! தமிழன் உறுதியற்ற கோழையா? இல்லையே! சென்ற ஏழாந் திகதி திரும்பவும் பதினேழுபேர் யாழ்ப்பாணத்தில் கைது

செய்யப்பட்டுள்ளதாகக் கேள்விப்பட்டோம். அன்று எனக்கொரு தந்தி வந்தது, என் தந்தையின் அண்ணனுகிய எனது பெரியையாவுக்குக் கடுமையான சுகயீனமென்பதே அது. ஐயகோ! அவரது கடைசிக் காலமென்பதை உணர்கின்றேன். ஆனுல் வர முடியுமா? பேச முடியுமா? என்னுலான உதவி செய்ய முடியுமா? என்றுலும் போய்வர உத்தரவு கோரி உள்ளேன். நாங்கள் திங்கட்கிழமையும் வியாழக்கிழமையும் மட்டும் ஒவ்வொரு மடல் வரைய முடியும். சென்ற எட்டாந் திகதிதான் எங்கள் கால்கள் பூமியை மிதித்தன. மேன்மாடியில் வாழ்வு...... உணவுக்குமட்டும் கீழ்மாடி என இருந்தோமல்லவா? எட்டாந் திகதி தொடக்கம் ஒரு மணித்தியாலம் மாலையில் கட்டிடத்தின் கீழ் இறங்கி உலாவலாம். கைப்பந்தாட்டமாடலாம். 'ரெனி கொயிற்' ஆடலாம். மாலையில் தேநீர் அருந்தியதும் மணியடிக்கும். அப்போது மட்டும் இறங்கலாம். அப்போதெல்லாம் பொலீஸார் சூழவர ஐருராகக் காவல் புரிவர், சுழல் துப்பாக்கிகளுடன்.

நான் கைப்பந்தாட்டமாடினேன். பூமியில் கால் பட்டதாலோ என்னவோ ஏதோ ஒரு புது மகிழ்வுமிருந்தது. தமக்குத் தமக்கு விருப்பமான விளையாட்டுக்களிலும் ஈடுபட்டார்கள். இப்போது கீழே இறங்கும் அந்த ஒரு மணித்தியாலத்தையும் ஆவலுடன் எதிர் பார்க்கின்ருேம். எங்களுக்குள் பிரிந்து போட்டியாக விளையாடவும் ஒழுங்கு செய்துள்ளோம். சென்ற ஒன்பதாந் திகதி பெரியையா இயற்கை எய்திவிட்டதாகத் தந்தி கிடைத்தது. துயர உச்சியடைந்தேன். போக உத்தரவு கோரித் தந்தியடித்தேன்... மடல் வரைந்தேன். எதுவித பதிலுமில்லை. அவரது உடம்பைக் கூடக் காண முடியாதவனுகி விட்டேன்.

என் செய்வேன்! புதுப்படிப்பினைகள், புது வேதனைகள் என்னை அலைக்கழித்தன. எதையும் தாங்கும் இதயம் வேண்டுமே! இந்த ஒன்பதாந் திகதியே வானெலியும்

ஒரு செய்தியைத் தந்தது. மொழிப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அறிவித்தது. நல்லவேளை மொழிப்பிரச்சினை யென்று ஒன்று இருக்கின்றதென்றுவது ஒப்புக் கொள் கின்றனரே! இச் செய்தி எமக்கு மகிழ்வு தரவில்லை. இப்படி எத்தனையோ செய்திகளைக் கேட்டவர்கள் நாம். நடைமுறை உண்மைகள் எமக்குத் தெரியாதா என்ன? சென்ற பன்னிரண்டாந் திகதி ஓர் அறிவித்தல் கிடைத் தது. தொண்டமானும், அஸீசும் செல்வநாயகம் வீட் டில் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும், மொழிப்பிரச்சினை பற்றிக் கலந் துரையாடவும் என அறிவித்தல் வந்தது. சென்ற பன்னி ரண்டாந் திகதி மாலை எம். பி க்கள் பொலீஸ் காவலு டன் செல்வநாயகம் வீடு போய் வந்தனர். பேச்சு வார்த்தையில் மகிழ்வு தரக்கூடியதாக எச் செய்தியும் அமையவில்லை. ஆனால், தமிழரசுக் கட்சியின் குறைந்த பட்சக் கோரிக்கையை முன் வைத்துப் பேசியதாக அறிந் தோம். இப் பேச்சு வார்த்தைகளுக்கு முக்கிய காரணம், தென்னிந்தியாவில் தி. மு. க. நடாத்திய ஆர்ப்பாட்டங் களும் தீர்மானங்களுமே. தி. மு. க. தலைவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் ஆட்சி பீடத்தை அசைத்துள்ளன. சென்னை தொட்டு ஒவ்வொரு குக் கிராமங்ககளிலும் மாபெரும் ஊர்வலங்களும் கூட்டமும் போட்டு, இலங் கைப் பிரச்சினையை உலகறிய தி. மு. க. வழி சமைத்த னர். அறிஞர் அண்ணு, கலைஞர் கருணுநிதி, நாவலர் நெடுஞ்செழியன், நாஞ்சில் மனேகரன், சிந்தனைச் சிற்பி சிற்றரசு, என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து என் போரது அறைகூவல், ஈழத்து ஆட்சியைச் சிந்திக்க வைக் கிறது. இவர்களது சொற்பொழிவுகளைப் படிக்க ஆவல். ஆனல் இங்கிருந்து முடியாதே!

தென்னிந்தியாவில் சாதாரண மக்களின் நம்பிக்கை யின் சின்னம் தி. மு. க. கலை வளர்ச்சியோ, மொழி வளர்ச்சியோ, சமூக சீர்திருத்தமோ, சினிமாவோ, அர சியலோ புது முறுக்குடன் புதுமையுடன் அமைய வழி

சமைத்தவர்கள் தி. மு. க. — சாதாரண மக்களின் சக்தியின் மாண்பை, உயர்வை, செயல்படுத்துபவர்கள் தென்னகத்தில் தி. மு. க. மட்டுமே.

எங்கள் தமிழரசுக் கட்சியின் வயதும், தி. மு. க. வின் வயதும் கிட்டத்தட்ட ஒன்று. அவர்களது வளர்ச்சியையும் அபரிதமான செல்வாக்கையும் காணும்போது, அவர்களது பணியின் சிறப்பை உணரலாம். சுதந்திரம் பெற்ற கட்சி, காந்தி மகாத்மா வளர்த்த கட்சி, அடிமை விலங்கறுக்க அறப்போர் செய்த கட்சி — காங்கிரஸ்கட்சி— சுதந்திரத்திற்காக பாடுபட்ட ஒரு கட்சி. ஆட்சிபீடத்தைச் சமைப்பதால் நன்மை வருமென்பது நிச்சயமல்ல. அக்கட்சியின் பழம் பெருமைமட்டும் போதாது நாட்டில் சுபீட்சம் நிலவ...

ஆகவே காலப் போக்கும் வாழ்வுப் போக்கும், தி. மு. க. பக்கம் மக்களைக் கவர்ந்து இழுத்தன. அதற்கேற்ப தி. மு. க. வின் பணியும் அமைந்திருந்தது. தி. மு. க. தலைவர்களின் பிரமாண்டமான பிரசாரமும், யாராலும் தகர்க்கமுடியாத ஒப்பற்ற கொள்கைகளும், அவர்களை வானுயர வளர்த்தன. உதய சூரியன் காலிக்குமிடமெங்கும் அவர்கள் தம் பணியின் பெருமை பேசப்படுகின்றது.

அப்படிப்பட்ட தி. மு. க. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்காக மாபெரும் கூட்டம் கூட்டினர். பிரேரணைகள் நிறைவேற்றினர். இலங்கைத் தூதுவரிடம் நேரில் ஊர்வலமாகச் சென்று அப்பிரேரணைகளைத் தந்தனர். தூதுவர் மூலம் பிரதமர் சிறிமாவுக்கு அனுப்பினர். இவர்களின் அன்புரிமையை, தமிழரின் நேசத்தை, ஒட்டுறவைக் கண்ட ஈழத்து ஆட்சி கொஞ்சம் மிரளவே செய்தது. அதனாலேயே மொழிப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென வானொலி ஊதித்தீர்த்தது. எத்தனை முறை ''மொழிப்பிரச்சினையைத் தீர்ப்போம்'' எனக் கூறிவிட்டனர். கூற்றுக்கள் செயலா

னதா? இல்லையே! ஈழ ஆட்சி, சொன்னபடி எதையாவது செய்யும் திறன் படைத்ததா? நேர்மைத் திறமோ நெஞ்சுரமோ படைக்காத ஆட்சியிலா சொன்னது செய்யப்படும்? அப்படிச் செய்யப்பட்டால் இவர்களது வழமை என்ன ஆகும்?

ஆனுல்...

காலம் வழிகாட்டவே செய்யும். எதிர் காலம் முடிவு கிட்டவே செய்யும், ஓரினத்து உரிமையைப் பறித்து எந்த ஆட்சியும் அமைதியுடன் ஆள முடியாது. ஆண்டது கிடையாது. கொலை செய்யப்பட்ட பண்டாரநாயக்காவின் மரண அனுதாபத்தால் எவ்வளவு காலம் ஆட்சியை ஓட்டமுடியும்? சிங்கள மக்கள் உண்மைகளை உணரும் காலம் நிச்சயமாக வரும். அப்பொழுது இந்த ஆட்சி மேல் பாணம் திரும்பும். தன் வினை தன்னைச் சுடும்! மகளே! எதிர்காலம் இவற்றைச் சந்திப்போம் — நிச்சயமாக. ஆகவே நாங்கள் எங்கள் கடமையை நெறி, நிறை, அறவழியால் புறமுதுகு காட்டாது நடத்திஞல் போதுமானது. ஒரு தமிழன் இருக்கும் வரை உரிமைக் கோரிக்கை கேட்கப்பட்டபடியே இருக்குமென்பதை உணர்த்த வேண்டும். தியாக உள்ளம் நிறைய வேண்டும். இது இந்தக்கால கட்டத்தில் வாழும் தமிழனின் கடமை. கடமையைச் செய்வோம்! பணி செய்பவர் வீழ்வதில்லை. கடமை வீரர் நாடு காக்கும் பெரும் படையினராச்சே!

ஆறிலும் சாவு நூறிலும் சாவு...... தூங்கையிலே வாங்குகிற மூச்சு சுழிமாறிப் போனுலே போச்சு... வியாதி வந்து இறப்பதில்லையா? விபத்து வந்து மடிவது கிடையாதா? நாடுகாக்கும் பணியிலே மடிந்தோம் என்ருல் அதைவிடப் பேறு ஏது மகளே!

பழந்தமிழன் வீர மரணம் எய்தி மகிழ்ந்தான். புறமுதுகிடாது, மார்பைக் காட்டி வேல் ஏந்தி மடிந்த மறத் தமிழரின் வரலாறு வழிகாட்டட்டும். அவ்வீரர்

மடிந்ததும் வீரக்கல் நாட்டி மகிழ்ந்த மூதாதையர் நம்மவர். அவர் வழி வந்த நாம் தொடை நடுங்கிக் கொள்ளும் கோழைகளாவதா? சீ, வெட்கம்! வீரராவோம், எமது கல்லறைகள் வீரம் பேசட்டும். எமது கல்லறைகள் புதிய சமுதாயம் பூக்க உதவும் உணர்ச்சியை ஊட்டட்டும். சாவு கண்டு பயப்படாதவனே போராட்ட வீரன், அவனே நாடு காக்கும் படையில் சேர வேண்டியவன். இப்படித் தமிழ் வீரர் இருக்க வேண்டும். இன முழக்கம் கொட்ட வேண்டும். எழுச்சி முரசு அறைய வேண்டும். நிச்சயம் சுதந்திரபூமியைக் காணவேண்டில் இப்படியானவர்களாக நாங்கள் புறப்பட்டேயாக வேண்டும். எலிகள் புசிக்க எல்லாம் கொடுத்தே சிங்க ஏறுகள் தூங்கிடுமோ?

மகளே அன்பரசி! இவ்வாரம் ஒவ்வொருவரும் கையெழுத்துப் புத்தகம் (Autograph Book) வாங்கினர். ஒவ்வொருவரிடமும் கைச்சாத்தும், அவரது அறிவு மொழிகளும் பெற்றனர். நானும் ஒரு புத்தகம் வாங்கிப் பெற்றேன். அதுபற்றிய விபரங்களையும், எம்முடன் வாழ்வோர் பற்றிய பூரா விபரத்தையும் அடுத்தமடலில் வரைய எண்ணியுள்ளேன். உன் அம்மாவுக்கும், தம்பி அன்பழகனுக்கும் உன் அப்பாவின் சுக செய்திகளைக் கூற மறக்க மாட்டாய் தானே!

அன்புத் தந்தை,
புதுமைலோலன்.

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமகம,
18-5-1961.

எனது வாத்சல்லியமே! மகளே!

நேற்றைய மடலில், தடுப்புக் காவலில் உள்ளோரைப் பற்றியும், கையெழுத்துப் பெற்ற புத்தகம் பற்றியும் வரைவதாக எழுதினேனல்லவா? இன்று கூட ஒருவர் திருமலையில் இருந்து கைதாகி வந்தார். எல்லோருமாக எங்கள் தடுப்புக் காவல் குடும்பதில் எழுபத்திநான்கு பேர் ஆகிவிட்டோம்.

"உங்களை எப்படி மறப்பேன், நினைவுத் திரையில் அடிக்கடி தோன்றி அன்பையும், தொண்டையும் உணர்த்துவீர்கள். அதற்காக உங்கள் கைச்சாத்தை உதவுங்கள்" என எனது கையெழுத்துப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் எழுதினேன். அப் புத்தகத்தைத் தனித்தனி கொடுத்து அறிவு மொழிகளும், அன்பு மொழிகளும், அத்துடன் அவர்தம் கையொப்பங்களும பெற்றேன். இப்படியாக எல்லோரும் பெற்றனர்.

## துரைரத்தினம்

"பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு"... இப்படித் துரைரத்தினம் அவர்கள் எழுதிக் கைச்சாத்திட்டார்கள். கட்சியில் பல காலம் தொண்டாற்றும் இவ்வாசிரியர் ஒரு பட்டதாரி. அத்துடன் பருத்தித்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதி... கண்ணியம், ஒழுக்கம் நிறைந்தவரும், வயதில் இளைஞரும்

ஆகிய இவர் சிறந்த சொற்பொழிவாளரும் கூட. பொருளாதாரம் வளரப் பல வழிவகைகளையும் அடிக்கடி பாராளுமன்றத்தில் பேசி வருபவர். மற்றவர்களுக்கு இடைஞ்சல் கொடுக்காது வாழும் தன்மையும் எல்லோரையும் மதித்து நடக்கும் தன்மையும் நிறைய இவரிடம் காணப்படுவதை உணர்ந்தேன். எப்போதும் கல கலவென்று கல்லூரி மாணவர் போலப் பேசித் திரிந்தபடியே, மேன்மாடியெங்கும் சுற்றுவார். அடிக்கடி எம்முடன் வந்து பேசியபடியே இருப்பார். தடுப்புக் காவலில் யாரையும் மனம் நோகச்செய்யாது, வாழ்ந்து வருபவர்களுள் இவரும் ஒருவராவர். பருத்தித்துறை மக்கள் நல்ல ஒருவரைப் பிரதிநிதியாகப் பெற்றேமென மகிழலாம்.

## கதிரவேலுப்பிள்ளை

"பொறுத்தார் பூமியாழ்வார்" இப்படிக் கதிரவேலுப் பிள்ளை அவர்கள் எழுதிக் கைச்சாத்திட்டார்கள். பொறுமையான நடையும், அமைதியான போக்கும் நிரம்பிய இவர் ஒரு நியாயதுரந்தரர் என்பதை நான் எழுதவா வேண்டும்? யாழ்ப்பாணத் தொகுதியின் வருங்காலப் பிரதிநிதியல்லவா? எப்படியும், என்ன சொல்லியும் அரசியலில் புகலாம் என்ற பொன்னம்பலம் அவர்களையும், கொள்கை என்ன கொள்கை; பந்தம் பிடிப்பேன், பாதம் தாழ்த்துவேன், ஆட்சியாளருடன் வால் பிடிப்பேன் என்ற பெருங் கொள்கை போன்ற துரையப்பாவையும் அசைத்த, கணிசமான வாக்குகள் பெற்ற இவர் எப்போதும் ஒரே மாதிரியான அமைதியுடன் இருப்பதைக் காணலாம். அது மட்டுமல்லாது ஒரு பிரமச்சாரியும் கூட. இங்கே இவர் படிப்பதைத் தனது முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தார். அது மட்டுமல்லாது உமர்கையாம் பாடல்களைத் தமிழ்ப் பாடல்களாக அமைத்தார். இந்த அவரியற்றிய உமர்கையாம் பாடல்களை நூல் வடிவாக்குவேன், எனக் கூறிக்கொண்டார்; சமாதானப் பிரியர்; எலோரையும் ஒற்றுமையுடன் வாழ வழி கொள்ளும் அன்பர்; நல்லவர்.

## நடராசா

மல்லாகம் தந்த வழக்கறிஞர் சு. நடராசா அவர்கள் கைச்சாத்தை மட்டுமிட்டிருந்தார்கள். கட்சி தொடங்கிய நாள் தொடக்கம் மாருத கொள்கைப் பற்றும், பதவியிலாசையற்ற தன்மையும் கொண்டு திகழ்பவர் இவர். அவசரகாலம் பிரகடனப்படுத்தப்பட்ட அன்று இராணுவத்தினரால் மண்டை உடைய அடிபட்டவர். தமிழரசுத் தபால் கந்தோர் அதிபராகத் துணிவுடன் கடமையேற்றவர். ஒழுக்கமும், நேர்மையும், விட்டுக் கொடுக்கும் பண்புடைமையும் நிறையப் பெற்றவர். கட்சியின் உள் பூசல்களை நீக்கி சௌஜன்யம் மிளிரவேண்டும் என்பதில் நீங்காத பற்றுக் கொண்டவர். கொள்கையில் நிதானம் கொண்ட இவர், கட்சியின் கட்டுப்பாடுகளைத் தளராது கைக்கொள்பவர். தனது வருமானத்தையு மிழந்து, ஓடி ஓடிக் கட்சி வேலைகள் செய்பவர். ஒரு கட்சித் தொண்டர் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு உதாரண புருஷர் இவர். தடுப்புக் காவலில் எல்லாரும் மதிக்க வாழ்ந்த பெருமை இவருக்குமுண்டு.

## சின்னத்துரை

பலாலி பெற்றெடுத்த மாணிக்கம், முன்னுள் தபாற்கந்தோர் அதிபர். யார் தெரிகிறதா? திரு. சி. சின்னத்துரை அவர்கள். யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சி கந்தோரில் பொறுப்பாக இருந்து, எவ்வித ஊதியமும் இன்றி கடமையாற்றிய இவர், உள்ளம் தூய்மையானது. காரியாலயத்தில் சில போது தபாற்கந்தோர் அதிபர் போலப் படபடப்பாகப் பேசினுலும், பொறுப்புடன் கடமையாற்றும் தன்மை மிகக் கொண்டவர், முதியவர், முதுமையுடன் அஞ்சாது தடுப்புக் காவலில் இருக்கும் இவர், மாலையில் தபாலை ஆவலுடன் எதிர் பார்ப்பார். அவர் தம் காதலி; அதாவது மனைவி எழுதும் அந்தக் கடிதத்தில் அவர் காணும் மனத்திருப்தியை அவரது முகம் பேசாமல் பேசும். அன்பான மனைவியைக் கொண்டவர் என்பதை, அவர் தனது மனைவியின் மடலை

எதிர்பார்க்கும் ஆவல் மெய்ப்பிக்கின்றது. கட்சியின் கூட்டங்கள், மகாநாடுகள், ஏன் சத்தியாக்கிரகம் கூட சிறப்பாக அமையத் தன்னாலான தொண்டுகளைச் செய்த பெருமை என்றும் இவருக்குண்டு.

## இராஜசேகரன்

தெல்லிப்பளையில் வாழ்பவரும், யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி உப அதிபராயிருந்து ஓய்வு பெற்ற அடுத்த நாளே போராட்ட களமடைந்தவரும், தந்தை செல்வாவின் உறவினரும், பண்பின் சிகரமும் ஆகிய தி . தி. க. இராஜசேகரன் எம். ஏ. அவர்களும் கைச் சாத்திட்டார்கள். இவர் கைதாகி வந்த பிற்பாடு எங்களுக்கு மிக உதவியாக அமைந்தார். புத்தகம், கடதாசி, மற்றும் உபகரணப் பொருட்கள் என்பவற்றை வாங்கி எமக்குத் தேவைப்படும்போது உதவினார். எந்த நேரமானாலும் அவற்றை எமக்குத் தந்து உதவியமையும், ஒவ்வொருவர் தேவைகளையும் கேட்டுக் கேட்டு உதவுவதையும் பார்க்க அவர்மேல் நீங்காத பற்றும், மதிப்பும் யாருக்குமே ஏற்படும். இராஜசேகரன் அவர்களை இங்குள்ள யாவரும் மதித்தனர். கௌரவம் கொடுத்தனர். அதற்கு அவரிடமிருந்த ஒரே தன்மை பண்புடைமையே! வாழ்விலே யாரையும் வேதனையுறச் செய்யாது வாழ்ந்தவர் என்பதை அவர் வதனத்தில் உள்ள ஒளி உணர்த்தப் போதுமானது. பொறுமை, கட்டுப்பாட்டுடைமை, அன்புள்ளம், தொண்டுமனம் நிறைய நிறைய இவரிடம் கண்டேன். பரமேஸ்வராக் கல்லூரி நல்ல ஓர் ஆசிரியரைப் பெற்றிருந்தது. கொள்கையற்றதுகள் எல்லா மேடையிலும் ஏறும் வித்துவான்கள், ஒழுக்கமற்று சிறு பெண் பிள்ளைகளைக்கூட காம நோக்குடன் நோக்கும் வித்துவான், பண்டிதர், புலவர்கள் நிறைந்த கல்லூரிகளில், இராஜசேகரன் போன்ற உத்தமர்களும் இருப்பதால்தான் உலகம் சுழல முடிகின்றது. கண்ணியமுடன் நடக்கும் ஒரு நல்ல மனிதன். பெரியார் இராஜசேகரனுடன் பலமணி பேசியபடியே இருப்பேன்.

தன் படிப்பு, தன் இறந்தகாலக் கடமை என்பனவற்றைப் பேசும்போது கேட்கக் கேட்க நாமும் பெருமையடைய முடியும். சத்தியாக்கிரக காலத்தில் கூப்பனரிசி மூலம் போராட்டத்தைத் திசை திருப்ப, ஆட்சிபீடம் எண்ணியபொழுது, அரிசி கொடுப்பதற்கு வேறுவழி உண்டு என்றெல்லாம் தக்க நியாயமுடன் அறிக்கை மூலம் மக்களுக்குத் தெளிவு படுத்தியவர் இவர். அக் காரணமே இவரைத் தடுப்புக் காவலுக்கு அழைத்து வரச் செய்திருக்கலாம் என நம்புகின்றேன்.


## அழகய்யா

''உன்னை நீ அறி.'' இப்படியாக சோக்கிரட்டீசின் அறிவுரையுடன் யாழ்ப்பாண மாநகர உறுப்பினர் திரு. ஜே. எஸ். அழகய்யா அவர்கள் கைச்சாத்திட்டார்கள். இவர் ஓர் ஆசிரியர். பலமுறை ஏன்? — பரம்பரையாக மாநகர உறுப்பினராய் இருந்து, மேயராயும் இருந்து பல புதுத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்து மக்களிடையில் பரபரப்புடன் மிளிர்ந்த அல்பிரட் துரையப்பா அவர்களை மாநகர சபைத் தேர்தலில் தோல்வியென்ற மங்கையை மணவாட்டியாக்கி, மகிழ வழிசெய்த ஆசிரியர் இவர். உத்தம குணங்கள் கொண்ட கொள்கையாளர், மதப்பற்று மிக்கவர். இங்கிருக்கும்போதுகூட வட்டார மக்களின் தேவைகளைப் பற்றியே எண்ணுவதும், எழுதுவதுமாக இருந்த ஒப்பற்ற தொண்டர். ஜீ. ஜீ. பொன்னம்பலத்தால் தோற்கடிக்க முடியாத துரையப்பாவைத் தோற்கடித்த பெருமை, இவருக்கு என்றும் மறையாத ஒன்றாகும். தமிழரசுக் கட்சி எனக்கூறி உத்தியோகத்துக்காக மதமும் கொள்கையும் மாறும் சிலரை இவ் வட்டாரம் கண்டது. ஆனால், அவ் வட்டாரத்தில் தயக்கமற்ற கொள்கையுடன் மனிதனாக நடந்துகொண்ட அழகய்யா யாழ்ப்பாணம் நகர சபைக்கு ஒரு நல்ல அங்கத்தவராவர்.

## ஆசீர்வாதம்

சாவகச்சேரி பெற்ற வழக்கறிஞர் ஏ. ஆர். ஆசீர்வாதத்தை, தொழிற் சங்கங்கள் மறக்கமுடியாதே. அன்னூர் தொழிற்சங்கத் தொண்டு மூலம் ஈழத்தில் குறிப்பிடக்கூடிய பெருமை பெற்றவராவர். சென்ற வவுனியாத் தேர்தலின்போது தமிழரசுக் கட்சிக் கொள்கையை வவுனியாப் பகுதியில் ஆசிரியர் வின்சென்ற் அவர்களுடன் சேர்ந்து பட்டி தொட்டியெங்கும் பரப்பிய பெருமை இவருக்குண்டு. ஈழத் தமிழரின் போராட்ட வரலாற்றை, ஆங்கிலத்தில் எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இரவும், பகலும் எழுத்திலேயே கழித்து வருகின்றார்.

## நவரத்தினம்



'தமிழ் கற்றுத் தரத்திற்கு வந்த நண்ப, உனக்கு என் வாழ்த்துக்கள்" — இது புலோலி நியாய துரந்தரர் இ. நவரத்தினம் அவர்களது ஆசியுரை. இவ்வாசியுரையுடன் கைச்சாத்தையும் இட்டார் பருத்தித் துறைப் பகுதியில் தமிழரசு வளர உதவிய பெருமையாளரில் ஒருவர். இவர் அமைதியான போக்கும், ஆழ்ந்து எண்ணிப் பேசும் ஆற்றலும், கைவந்த ஒரு பெருமகன். 'ஆடத்' சிகரற்றை ஊதியபடியே சோதிட நூலாராய்ச்சியிலும், பல தமிழ் நூல்களைப் படிப்பதிலும் ஈடுபட்டபடியே உள்ளார். பெயரது எழுத்துக்களை எண்ணி அந்த எண்மூலம் சாத்திரம் கூறும் நூலொன்றை வைத்து எனக்குக் கூட என்னைப்பற்றி உரைத்தார், ஒரு நாள். ஈழ நாட்டாட்சியின் காட்டு ஆட்சியைப்பார்த்து பொருமும் இவரிடம் மனிதத் தன்மை மாருத இதயம் என்றுமிருப்பதைக் காண்கின்றேன். தனது அறையில் இருந்து, "அதோ அந்தக் கட்டிடம் ..... அதனமைப்பு,

அதோ தூரத்துமலை...... மேகப்படலம்... இந்தக் காட்சிகளைக் காணமுடியுமா? இங்கு வராதுவிட்டால் புதுமை'' என்கிறார் அடிக்கடி.

## துரைராசா



''1961-ல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது 13-4-61 தொடக்கம் பனுகொடை தடுப்புக் காவல் முகாமில் தமிழ் பேசுமினத்திற்காக ஒன்றுனோம்'' என எழுதிக் கைச்சாத்திட்டுத் தந்தார், யாழ்ப்பாண மாநகர பிதா துரைராசா அவர்கள். நல்லூர்த் தொகுதியில் இருந்து கைதாகி வந்தவர்கள் மூவர். ஒருவர் டாக்டர் நாகநாதன் அவர்கள், மற்றவர் மாநகர பிதா துரைராசா அவர்கள், அடுத்தவர் நான். எமது அயலவராகவும், எமது வட்டாரப் பிரதிநிதியாகவும் அமைந்ததுடன், யாழ்ப்பாண மாநகர பிதாவாகவும் வந்து சத்தியாக்கிரகத்தின்போது கச்சேரியடியைப் புனித தலமாக்கிய பெருமையில் துரைராசா அவர்களின் பங்கே அதிகம். வெளிச்சமா? தண்ணீரொழுங்கா? எல்லாவற்றையும் உடனுக்குடன் செய்தளித்ததுடன் அறப்போரிலும் ஈடுபட்டவர் துரைராசா அவர்கள். தமிழரசுக் கட்சியை ஆதரிக்கா விட்டாலும், போராட்டத்தின்போது தமிழனாக நடந்து கொண்டவரென்பதை நாடறியும். அதனால் தான் ஆட்சிபீடமும் கைது செய்தது. இடையில் ஏற்பட்ட மோட்டார் விபத்தினால் ஒரு கரமிழந்த இவர், தமது பாரியாரின் உதவியின்றி இங்கு வாழ்வது எத்தனை கடினம் என எண்ண எண்ண எமக்கெல்லாம் வேதனையே தந்தது. கருணையற்ற ஆட்சிபீடம் இவற்றையெல்லாம் எங்கே சிந்திக்கப் போகின்றது. அடிக்கடி மாஸ்ரர், வீட்டிலிருந்து கடிதம் வந்ததா? சுகமா? எனக் கேட்பார் என்னைப்பார்த்து.

அயலுறவல்லவா? அவரது நிலைகண்டு வேதனைப்பட்டவன் யான். அவரை விரைவில் விடுதலை செய்ய வேண்டும் எனப் பலரும் விரும்பினர். காரணம், அவரது உடல்நிலை அப்படி எண்ணச் செய்தது. சென்ற மாநகரத்தேர்தலில் எமது தமிழரசுக் கட்சியுடன் மோதிய அபேட்சகர் இவர். கொள்கை காரணமாக நான் கூட எதிர்த்தேன். கொள்கைக்காக எதிர்ப்பது தவறல்லவே. ஆனால், மனிதனில் மனிதன் பேதம் காண்பது என்னால் முடியாத ஒன்று. துரைராசா சத்தியாக்கிரகத்தின் போது நடந்துகொண்டமை தமிழ்பேசுமினத்தால் என்றும் மறக்கமுடியாதது.

## ஜெயக்கொடி

"ஆர்த்த சபையின் நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர், வார்த்தை பதினாயிரத்தொருவர்"... இப்படியாக ஆசி உரையும் எழுதிக் கைச்சாத்திட்டார் முன்னாள் நீதிபதி க. ஜெயக்கொடி அவர்கள். சென்ற தேர்தலின் போதே இவரது நட்பைப் பெற்றேன். தமிழரசுக்கட்சி அபேட்சகராக உடுப்பிட்டியில் போட்டியிட்டு, அற்ப வாக்குகளால் தோல்வியடைந்தவர். ஆனால், கட்சிப் பணியை விடாது செய்துவரும் நற்றொண்டர். இவர் இங்கே நூல்கள் வாசிப்பதும், சிந்திப்பதும், மௌன விரதம் வாரவாரம் அனுஷ்டிப்பதும், பண்புடன் எல்லாரும் மெச்ச நடப்பதையுமே காண்கின்றேன். நல்ல மனிதர்களில் ஒருவராகவே மதிக்கின்றேன். எதிர்க்கட்சிகள் சாட்டும் குற்றச் சாட்டுகள், இவருடன் பழகும் யாராலுமே ஏற்றுக்கொள்ள முடியாதவை. உடுப்பிட்டி மக்கள், கொள்கை உள்ள இவரை, அங்குமிங்கும் ஊசலாடாத ஒரே தன்மை கொண்ட இவரை, எதிர்காலத்தில் தமது பிரதிநிதியாக்கி மகிழ்வர்; சேவையின் உயர்வு பெறுவர் என்றே எதிர்பார்க்கிறேன். ஏனெனில், நல்லவர்கள் நாட்சென்றாவது மதிப்படைவார்கள். இவருடன் அரசியல் பேசிப் புதிய கருத்துக்களை அறிவதில் எனக்கு ஒரே ஆசை. அடிக்கடி இவரது அறை போய் பேசி வருகின்றேன்.

அன்பரசி! மற்றவர்களைப் பற்றி அடுத்த மடலில் எழுதுவேன். தமிழ்பேசும் மக்கள் சார்பில் தியாகம் புரியும் இவர்களை நீ மட்டுமல்ல, நாடே அறிய வேண்டும். ஈழத்து வரலாற்றில் தமிழரின் மாண்புக்குரிய நிகழ்ச்சிகளுக்கு உருக் கொடுத்தவர்களல்லவா?

பின்பு......

அன்புத் தந்தை,
புதுமைலோலன்

---

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
19-5-1961.

மகளே அன்பரசி!

சென்ற மடலில் கொள்கை வீரராகத் தடுப்புக் காவலில் ஒன்ருக வாழும் செம்மல்கள் சிலர் கைச்சாத் திட்டு எழுதிய அறிவுரைகளையும், அவர்களைப் பற்றியும் எழுதினேன். தொடர்ந்து மற்றையோர்களையும் அறிய விரும்புகின்ருயல்லவா ?

பொதுச் செயலாளர்

## வ. நவரத்தினம்

"வலம்புரி அடுப்பா மாமுத்தரிசி, சலஞ்சலனிறைய வேற்றிப் பவளஞ் செந்தீ மூட்டி சிறப்பியற் துடுப்பால் ஒப்பத்துளாவி, அடாதட்ட அமுதம்" — "இந்த அமுதமே தமிழ். இம் மொழியைப் பேணிக் காப்போமாக" — இப் படியாகப் பொதுச் செயலாளர் திரு. வ. நவரத்தினம் அவர்கள் தமிழின் தன்மையைப் பழைய இலக்கிய அடி கள் மூலம் எழுதிக் கைச்சாத்திட்டிருந்தார்கள். நடை பெற்று முடிந்த ஈழத் தமிழரின் அறப் போருக்கு ஜீவ நாடி போல அமைந்து உழைத்தவர் இவர். இங்கே அவருக்கு இருதய பெலவீனம் ஏற்பட்டு, கொழும்பில், அரசினர் வைத்திய சாலையில் காவலுடன் அனுமதிக்கப் பட்டார். சில நாட்களால் சுகமடைந்து வந்தார்.

"கட்சியின் மூளை" என்ற சிறப்புப் பெயரைப் பெற முடிந்த அளவு, கட்சியின் ஆரம்பகாலம் தொட்டு கடமை வீரராக, நேர்மையாளராக தொண்டைத் தயங்காது செய்து வருகின்றார். கட்சியில் பதவியை எதிர் பாராது கடமை செய்பவர்களுள் இவரும் ஒருவர். இவர் நினைத்திருந்தால் ஊர்காவற்றுறை பாராளுமன்றப் பிரதிநிதியாக இன்றிருக்க முடியும். ஆனால், அவர் விரும்புவது கட்சியின் கட்டுக் கோப்பு மூலம் தமிழ் பேசுமினத்தின் வளர்ச்சியையே. தன்னை விளம்பரஞ் செய்யாது அமைதியாகக் கட்சி வேலையும் செய்யும் சிறப்பைப் பல ஆண்டுகளாகக் கண்டு உணர்ந்து வருகின்றேன். 1958ல் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் கொழும்பில் இவரது வீடே உடைக்கப்பட்டு, அதிக நட்டத்தை அடைந்து, பொருளாதார நிலையில் தாழ்வடைந்திருந்த போதும், தொண்டில் - இலட்சியப் பிடிப்பில் மிகப் பற்றுடையவராகவே திகழ்கின்றவர். ஈழத்து மக்கள் மறக்க முடியாத எழுச்சிக்கு வித்தூன்றிய, இன முழக்க ஒலி எழுப்பிய, நல்ல தீர்மானத்தைத் தீட்டிய திருமலை மாநாட்டையும், யாத்திரையையும், ஒழுங்கு செய்ய முதன்முதல் உருக் கொடுத்தவர் இவரே! தமிழரசுக் கட்சிச் செயற்குழுக் கூட்டங்களில் தனக்குச் சரியெனப்பட்டதை நியாயபூர்வமாகப் பேசுமிவரிடம், தன் எண்ணத்திற்கு எதிரான எண்ணத்தை - ஏற்கின்ற, சரியானதைப் புரிந்து கொண்டு மௌனம் மூலம் சம்மதம் தருகின்ற தன்மையையும் கண்டுள்ளேன்.

## சிவசுந்தரம்

கைச்சாத்தை மட்டும் இட்டுத் தந்தார்கள் சிவசுந்தரம் அவர்கள். இவர் கிளிநொச்சிப் பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி. மனதிலே தூய்மை கொண்ட இவர் தன் தொகுதி வேலைகளைச் செய்வதில் சமர்த்தர். சில போது படபடவெனப் பேசுவதைப் பார்த்தால் இவர் ஒரு கோபக்காரரோ எனச் சிலர் எண்ணுவதுண்டு. ஆனால், அவரது உள்ளத்தை உணர்ந்தவர்கள், அவரது

நல்ல தன்மைகளை உணரவே செய்வர். தொகுதி மக்கள் உதவி கோரி வந்தால் வாக்குப் போய் விடுமே என்பதற்காக நியாய விரோதமானவற்றைக்கூடச் செய்து தருவதாக வாக்களித்து, ஏமாற்றும் சில பாராளுமன்ற உறுப்பினர் போன்றவரல்ல இவர். நியாயமானதையே உதவி செய்து பெற்றுக் கொடுப்பதாக வாக்களிப்பார், செய்து கொடுப்பார். நியாயமற்றதை முடியாது என முகத்திற்கு நேரேயே கூறிவிடுவார். இத் தன்மை சிறப்புடையதல்லவா? நடிப்பற்றதல்லவா? இப்படியான தன்மைகள் கொண்ட சிவசுந்தரம் அவர்கள் இங்கிருந்தபடி கட்டுக் கட்டாகக் கடிதங்கள் அனுப்பிக் கொண்டே இருப்பார். எல்லாக் கடிதங்களும் தொகுதி வேலைகளுக்காகவே அமைந்திருக்கும். இவர் உத்தியோகம் பார்த்தபோதும் இப்படி நடந்து கொண்டதாகவே பலரும் கூறக் கேட்டிருக்கிறேன். கடமையுணர்ச்சியுள்ள, அரசாங்க ஊழியராக உழைத்த பண்பாட்டையே இன்றும் காணமுடிகின்றது. ஈழத் தமிழர்கள் கைத்தொழில் மூலம் தமது பொருளாதார வளர்ச்சியை ஸ்திரப்படுத்த வேண்டும் என்ற தமிழரசுக் கட்சியின் கொள்கையை நடைமுறையில் செய்து வருகின்றார். இங்குகூட பல 'மவ்ளர்கள்' பின்னிவிட்டார். மவ்ளர் பின்னுவதற்குரிய உபகரணங்களை திருமதி. திருச்செல்வம் மூலம் பெற்று, ஓய்வற்றுப் பின்னியபடியே உள்ளார்.

## பாலசுந்தரம்

"இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்ற குறள் மொழியை எழுதிக் கைச்சாத்திட்டார்கள், பாலசுந்தரம் அவர்கள். சிறந்த சட்ட வல்லுனரும், அறிஞரும், கோப்பாய் பகுதி பராளுமன்றப் பிரதிநிதியுமாவார். யுக்தி பூர்வமான உள்ளம் கொண்ட இவரிடம், எழுத்தாற்றலும், பேச்சாற்றலும், நிறைய உண்டு. ஆங்கிலத்தில் எழுதும் வன்மையையே குறிப்பிடுகின்றேன். இங்கே அருமையாக ஆங்கிலத்தில்

நூல் எழுதி வருகின்றார். அந்நூலை இங்கிலாந்து தேசத்தில் பிரசுரித்து வெளியிட எண்ணியுள்ளார். மூதூர் இடைத்தேர்தலை அவசரகாலநிலையுடன் நடாத்த இருந்த ஆட்சி பீடத்திற்கு, நியாயம் காட்டி, சட்டம் காட்டி இங்கிருந்து மடல் வரைந்து, மூதூர் தேர்தலை நடாத்த முடியாது செய்த பணியில் சிறப்பான பணி இவரதே! இவரிடம் பாராளுமன்ற வாதிக்குரிய தன்மைகள் உள்ளன. ஆனால், கோபப்படுகின்றார் எனச் சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால், இங்கே தன்பாடும் தானுமாக எழுதுவதும், அடிக்கடி பெரிய நீண்ட மூக்குப் பொடிப் பட்டைையைத் திறந்து உறிஞ்சுவதுமாக உள்ளார். இங்கே வந்த பிற்பாடு மெலிந்து காணப்படுகின்றார். இவருடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தால் பல புதிய விடயங்களை அறிய முடியும். இலங்கைப் பராளுமன்றத்தில் இவருக்கு மதிப்பு அதிகம். இவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உறுதியும், உண்மையும் செறிந்த உரைகளை ஈழம் பாராட்டியது. இவர் இளமை தொட்டே அரசியலில் குளித்து வருபவர்.

## அமிர்தலிங்கம்

"செந்தமிழின் சுவையுணர்ந்த செல்வனே! தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"...... தமிழில் கொண்ட மாறுதபற்றை இப்படி எழுத்தாக்கிக் கைச்சாத்திட்டார், அமிர்தலிங்கம் அவர்கள். இவரைத் தெரியாதோரும் உண்டா? இவரது முழக்கம் கேட்காத குக்கிராமம் கிடையாதே. தமிழின் வன்மையை, அதன் இனிமையை, உணர்ச்சியூட்டும் நிறைவை அமிர்தலிங்கம் அவர்கள் பேசும்போது கேட்கலாம். கம்யூனிஷ்டுகளின் சிம்மசொப்பனமாக, போலி வேடமிடும் கம்யூட்சுகளை மேடைமேடையாகத் தகர்க்கும் பேச்சாளன், நாவலன் இவர், பட்டதாரியான இவர், ஓர் நியாயவாதியுமாவதுடன் வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் உள்ளார்.

இளமை தொட்டே செல்வநாயகம் வழியைப் பின் தொடருமிவரிடம், யான் யாரிலுமே காணுத பெருஞ் சிறப்பைக் கண்டேன். பேச்சிலோ எழுத்திலோ நடை முறையிலேயோ உள்ளும் புறமும் ஒரே தன்மையுடன் கட்சிக்கு அணுவத்தனையும் வழுச் செய்யாதவர் இவர், ஒழுக்கம் செறிந்தவர். ஏமாற்றுத் தந்திரம், குயுக்கிச் தன்மை கொஞ்சமும் அற்றவர். கட்சியாளர்களை மதித்து நடந்து வாலிபர்களின் அபரிமிதமான செல்வாக்கைப் பெற்றவர், இவரது அரசியல் எதிரிகளால், எத்தனையோ நினைக்கவே மனம் கூசும் நிகழ்ச்சிகளை எல்லாம், வேண் டாத பொய்ப்பிரசாரங்களை எல்லாம் கண்டும் அஞ்சாத அடலேறு, தமிழரசுக் கட்சியின் இன்றைய வளர்ச்சிக் குழைத்த சிறந்த பிரசாரர்களுள் ஒருவர். மேடைகளில் இவரது ஆணித்தரமான உரைகள் எத்தனையோ பேரைக் கட்சிக்கிழுத்து வந்து தொண்டராக்கிற்று. கனவிலும் நனவிலும் மூச்சிலும் தமிழரசுக் கட்சியாகவே எண்ணும், தொண்டாற்றும் இவர், கட்சியின் எந்தப் போராட்டங் களிலும் முன்நிற்பார். இரத்தமொழுக தன்னலமறுப்புச் செய்வார், உயிர் வெல்லமல்ல, உரிமையையே நான் கோருவது, அதற்காக மடியவும் ஆயத்தம் எனக் கூறி முன் செல்வார், சிறைச்சாலை, தடுப்புக்காவல், அப்பப்பா எத்தனை கொடுமைகளைப் பலமுறையும் — ஏன் ஆண்டுக் காண்டு அனுபவித்து வருகின்முர். இன்னும் எத்தனை கொடுமைகளை அனுபவிக்க உள்ளாரோ. தமிழில் மாருத பற்றும், பாச உணர்வும் கொண்ட இவர் இலக்கியத்தி லும் விருப்பமுடையவர். நானும் இவரும் பல மேடை களில் ஒன்ருகச் சொற்பெருக்காற்றியிருக்கின்ருேம். அவர் பேசிய பிற்பாடு இன்னும் எழுச்சியுடன் உணர்ச்சி உந்த லுடன் பேச என்னுல் முடியும். அத்தனை தூரம் தமிழை வேலாக்குவார்; தமிழை நிலவாக்குவார்; தமிழ் அமு தாக்குவார்; தமிழைக் கற்கண்டுச் சாருக்கி ஒடவிடுவார், கோழையும் தலைநிமிரப் பேசும் சொற்கொண்டல் ஆச்சே, தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த மாணிக்கம் இவர்.

## மங்கையற்கரசி

"அன்பின் அண்ணு! கனவும் நனவும் கன்னித் தமிழன் தொண்டாற்றும், வேறென்றறியாத நும் சேவை மேன்மேலும் வளர்க." எனத் தமது கணவரின் தமிழ்ப் பற்றுக்கும், தொண்டாற்றும் திறனுக்கும், வலக்கரமாக வாழ்விலும், அரசியல் வாழ்விலும் அமைந்துவிட்ட மங்கை யற்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் எழுதிக் கைச்திட்டார் கள். அமிர்தலிங்கத்திற்கேற்ற எழுச்சியும், உரிமை யுணர்ச்சியும், போராட்ட வீறும், மிளிரக் காணப்படும் இவரிடம் பேசும் ஆற்றல் உண்டு; பாடும் ஆற்றலுண்டு; பல்லாயிரக் கணக்கில் கூடி உள்ள மேடையிலே கணீரென மங்கையர்க்கரசி பாடும்போது எறும்புகூட ஊர்ந்து போகாதே, அவ் வெறும்பு அப்படியே கேட்டபடியே தாமதமாகிவிடும் கணவரின் பாதையிலே கைகோர்த்து ஜோடிப் புறுக்களாக, வஞ்சகமில்லாது, தமிழ் பேசும் இனத்திற்காக உழைத்துவரும் இவர்களை எப்படிப் புகழ் வது மகளே; புகழ்வது. நான் முன்பு எழுதியது போன்று ஈழத்தின் சரித்திரத்தில் நாட்டுக்காகப் போராடி, தடுப் புக் காவலில் இருக்கும் முதல் பெண்மணி இவராகவே இருப்பார். சத்தியாக்கிரக நாட்களில் வெயிலும் மழை யும் பாராது, உணவும் உறக்கமும் பாராது. 'கத்தி யின்றி இரத்தமின்றி யுத்தமொன்று நடக்குது' எனப் பாடியபடி அறப்போர் செய்த காட்சி இப்போதும் நிழலாடுகின்றது. ஒரு பெண் பிரதமரின் ஆட்சியில், வேறோர் பெண் தடுப்புக் காவலில் இருக்கவேண்டிய நிலை! இவரின் ஆற்றலால் அறப்போரில் பெரும் மங்கை யர் படையே சூழ்ந்து குழுமி அறப்போர் செய்ததே.

யாழ்ப்பாணத்தில் இவரைச் சூழ திருநெல்வேலி சிவபாக்கியம் கந்தையா, உரும்பராய் பொன்னம்மா, —கல்வியங்காடு ராஜாத்தி—நல்லூர் பாமசக்தி—அவர் தம் சகோதரி, தாயார்—அரியாலை மகேஸ்வரி—சாவகச் சேரி திருமதி ரகுபதி நவரெத்தினம் — திருமதி இராஜபூபதி அருணுசலம் — வல்வெட்டித்துறை திருமதி துரைரத்தினம்...... இன்னும் பெயர் தெரியாத எத்தனை

தையலர்கள்! கண் துஞ்சாது கடமையில் கண்பதித்து நாடுகாக்கும் பாடிவீடாக்கிக் கச்சேரியடியை அறப் போர்க் களமாக்கினர். எல்லாருக்கும் முன்னோடியாக விருந்த மங்கையர்க்கரசி, எங்களுடன் தடுப்புக் காவலில் ......பச்சிளம் குழந்தைகளை விட்டு, தாய்மை உணர்ச்சி வருத்த நாட்டுக்காகச் செய்யும் தியாகவல்லியாகி விட்டார். மங்கையர்க்கரசி தனது மகன் ஞாபகம் வந்தவுடன் — காண்டீபனின் எண்ணம் தாய்மையுள்ளத்தைத் தாக்கியவுடன்—ஆகாயத்தைப் பார்த்தபடியிருப்பதைப் பலமுறை காண்கிறேன். யானிங்கிருந்தபடி உன்னையும் அன்பழகனையும் எண்ணவில்லையா? வேதனை கொள்ள வில்லையா? இதைவிட எவ்வளவு துயரை மங்கையர்க் கரசி அனுபவிப்பார் என்பதை உணர முடிகிறது. ஏனெனில், தந்தையும் தாயும் தடுப்புக் காவலில் தவம். பிள்ளைகள் அம்மம்மாவுடன் மூளாயில்..... எண்ண எண்ண உள்ளம் விம்மவே செய்யும். அடிக்கடி தமது பிள்ளையைப்பற்றி என்னிடம் பேசுவார், பரிதாபமாகவிருக் கும். இங்கே எங்களுக்கெல்லாம் நல்ல சகோதரியாய மைந்து, காலையும் மாலையும் பாடிவருமிவரிடம், வஞ்சக மற்ற குழந்யையுள்ளம் நிறைய இருப்பதையும் இங்கே வந்தபிற்பாடு நன்கு கண்டேன். அதனால், குழந்தை அறியாமலே தன்னை அபாயத்துள் மாட்டிக்கொள்வதில்லையா? இப்படியான குழந்தை போன்ற இவரிடம் நாட்டுப்பற்று இருக்குமளவுக்கு இரக்கமும் நிறைய இருப்பதைக் காணமுடிகின்றது. அன்பரசி! ஈழத்துத் தமிழ்ப் பெண்கள் சமுதாயம் எதிர்காலம் துள்ளுநடை போட்டு போராட்டங்களடைய இவர் முன்னோடியாக அமைந்துவிட்டார். நாட்டு மக்களின் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்டார். மகளே! எழுத எழுத நீண்டுகொண்டே போகிறது...... மற்றவர்களை அடுத்த மடலில் படி. உன் தம்பி அன்பழகன் உடம்பு புரட்டுவானா?

அன்புத் தந்தை,

புதுமைலோலன்.

தடுப்புக் காவல் நிலேயம்,
பனுகொடை,
ஹோமகம,
20-5-1961.

எனது இரத்தப் படைப்பே!

மகளே!

இன்று சனிக்கிழமையல்லவா? எமது தடுப்புக் காவல் நிலேயம் கலகலப்பாக இருந்தது. ஒரு சிறு கலியாண வீட்டுச் சந்தடிபோல இருந்தது. என்னப்பா தடுப்புக் காவலில் கூட இப்படி நிகழுமா? என்று நீ கேட்பாய். ஆம் மகளே! இன்று தொடக்கம் தடுப்புக் காவலில் இருப்போரை உறவினர் வந்து சந்தித்துப் போகலாம். ஒன்றை விட்டு ஒரு சனிக்கிழமை உறவினர் வர உத்தரவாம். பலர் இன்று வந்தனர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலே, மன்னுர், வவுனியா, கொழும்பு முதலாமிடங்களிலிருந்தெல்லாம் வந்தார்கள். தடுப்புக்காவலில் உள்ள ஒருவரை ஐவர் சந்திக்கமுடியும். ஒருவர் ஒரு மணித்தியாலம் மட்டுமே பேசலாம். சி. ஐ. டி. பக்கமிருப்பர். கொழும்பிலுள்ள நண்பர்கள் என்னேயும் மற்றும் பலரையும் வந்து சந்தித்தனர். சந்திக்க விரும்பினுல் 74 × 5(370) பேர் சந்திக்க முடியுமே! சந்திப்பவர் இங்குள்ள பொலிஸ் அதிபரிடம் ஓர் விண்ணப்பம் எழுதிக் கொடுத்த பின்பே சந்திக்கலாம். யாரைச் சந்திப்பது? எவ்வித உறவு? சந்திப்பவர் முழுப்பெயர்? முகவரி?......... என்பவற்றை எழுதியளித்து, பொலிஸ் அதிபர் உத்தரவு கொடுத்தால் மட்டுமே, மேன்மாடிக்குச் சி. ஐ. டி. யுடன் வரலாம்; பேசலாம்.

உறவினரையும் நண்பர்களையும் பல நாட்களுக்குப் பின் சந்திப்பது எத்துணை மகிழ்வைத் தரும். மனைவி, மக்கள், அவர்கள் கொண்டுவரும் உணவு வகையறுக்கள், பழவகைகள், நூல்கள்...... அன்பின் மகத்துவத்தையே உணர்கிறோம். இன்று எங்களுக்கு ஒரு திருநாள் போல, முதலாவது திருவிழா எனப் பேசினோம். பல அரசியல் உண்மைகளை இன்று உணர்ந்தோம்; அறிந்தோம். எத்தனை எத்தனையோ சங்கதிகளைக் கேட்டறிந்தோம்.

அவற்றில் இரு சம்பவங்கள் எம்மை வேதனைப்படுத்தின. ஆட்சியாளரின் கொடுமையை உணர்த்தின.

சென்ற பதினேழாந் தேதி ஹர்த்தாலின்போது பத்து இளைஞர்கள் கொடுமையான முறையில் தாக்கப் பட்டனராம். ஹர்த்தாலின்போது பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு இவர்கள் துண்டுப் பிரசுரம் மூலம் கேட்டதாக பொலிசார் கைது செய்தனராம்.

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள நமது தமிழரசுக் கட்சி அலுவலகத்திற்கு அருகே யுள்ள, கூட்டுறவுப் பரிசோதகர் வீட்டில் இவர்கள் இருந்தனராம். துண்டுப்பிரசுரத்தை இவர்கள் விநியோகம் செய்திருக்கலாம், செய்யாமலிருக்கலாம், ஆனால் கைது செய்யப்படும்பொழுது வீட்டில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்களாம். இவர்களையும் கைது செய்யுமாறு தொலைபேசிமூலம் பொலிசுக்கு அறிவித்தவர், யாழ்ப்பாணம் பெரிய தெருவில் உள்ள ஓர் அச்சகச் சொந்தக்காரராம். அவ்வச்சகக்காரன் தமிழனா என நீ கேட்பாய்? ஆமாம்! இவர்கள் எல்லாம் தமிழனாகப் பிறந்துவிட்ட துரோகத்துக் கும்பல்......... எட்டப்பன் கூட்டம், இவர்கள் தமிழ்பேசுமினத்துக்கு நன்மை செய்ய மாட்டார்கள். செய்பவர்களையும் தடுப்பார்கள். இவர்கள் யார்...... எனக் கேட்க ஆசைப்படுகிறாயா? ஆம்! காலம் வரும்போது இவர்கள் பலரை நாடறியச் செய்வோம். கள்ளிச் செடிகளை அகற்றுவோம்.

இந்த எட்டப்பன் தொலைபேசி மூலம் பொலிசுக்கு அறிவித்தானு? உடனே பல பொலிசாருடன் 'ஜீப்' வண்டி, நான் குறிப்பிட்ட பரிசோதகர் வீட்டுக்கு முன்பு வந்து படாரென பிறேக் போட்டு நின்றதாம்.

பத்துப்பேரையும் ஜீப்பில் ஏற்றினராம். பொலிஸ் நிலையம் கொண்டு போனுர்களாம். அவர்களை நேரே ஒருவர் பின் ஒருவராக நிற்பாட்டினுர்களாம். பின்பு ......ஈழத்துப் பொலிசார் எதைச் செய்வார். அடி, குத்து, உதை...... ஆமாம் பந்தாடினுராம், ஒரு பொலி சாரா, இரு பொலிசாரா,......... பலர்! பலர்!......... யாருமே எதுவும் பேசாது — அடியை அவ் வாலிபர்கள் பெற்றுக்கொண்டனராம். செல்வநாயகம் படைவீரர்... சாத்துவீக வீரர்...... பொலிஸ் அடியை பலமுறை ஏற்று அனுபவப்பட்டவர்கள்; அஞ்சப்போவது கிடையாது. துஞ்சிடும் போதும், கோழையாகும் தன்மையோ நம் வாலிப ஏறுகளிடம் கிடையவே கிடையாது. உட்காயம் அவ் வாலிப வீரருக்கு ஏற்படுமாறு செய்தனராம், நமது காருண்யம் மிக்க ஆட்சிபீடத்தினரின் நகர் காவலர்கள். பின்பு ஒரு சிறு அறையில் இவர்களைப் பூட்டி வைத்தன ராம். பிணை எடுக்கப் போனவர்களையும் அனுமதிக்க வில்லையாம். செனட்டர் நல்லையா போனபோது பொலிசார் ஏசினராம். எப்படி நமது பொலிசார்...... அட! சத்தியாக்கிரகத்தின்போது இவர்களது தன்மை களை நாம் நன்கு அறிந்து கொண்டோமே. கல் எடுத்து எறியும் பொலிசாரை எங்கள் நாட்டில் தானே உலகு கண்டது. பாவம் பொலிசார் தான் என் செய்வர்? ஆட்சிபீடத்தின் உத்தரவாகவும் இருக்கலாம். இப்படி அட்டூழியம் செய்த பொலிசாரை வாழ்த்தியவர் தானே நமது பிரதமர் அவர்கள். கொடுமை செய் வோரை ஒரு நாட்டின் பிரதமரே வாழ்த்தி நன்றி தெரிவித்தமையைக் கேட்டவர்கள் நாம். இப் பத்துப் பேரும் யார் எனக் கேட்டோம்.

நடிக்கும் பாத்திரமாய் மாறி நடிக்கக்கூடியவரும், கட்சிப் பற்றுக் கொண்டவரும், செல்வநாயகம் வீட்டு அயலவரும் ஆகிய திரு. மு. சுணேசு... வில்லன் நடிப்பில் ஒப்பாரு மிக்காருமற்றவரும், நாடக உலகில் தனி ஒரு இடம் பெற்றவருமாகிய திரு. சு. குணராசா, செல்வநாயகம் அவர்களின் புத்திரரும், எதையும் கண்டு அஞ்சாத அடலேறு போன்றவரும், தந்தையின் திண்மை யுள்ளம் போன்றவருமாய திரு. செ. சந்திரகாசன், எழுச்சியூட்டும் பாடல்களை இயற்றி நாட்டுக்குத் தரும் இளங்கவிஞர் திரு. க. சுப்பிரமணியம், கட்சித் தொண் டரும், தமிழரசுக் கட்சி செயற்குழு உறுப்பினருமான கந்தர்மடம் திரு. வடிவநாதன், புன்முறுவலுடன் எதை யும் ஏற்கக்கூடிய திரு. மகேஸ்வர ஆனந்தன், அறப் போருக்குத் தன்னை அர்ப்பணித்துவிட்ட தொண்டன் திரு. விநாயகமூர்த்தி, பதறாது சிதறாது தமிழ்பேசுமினம் வாழ உழைக்கும் பெரியார் கருகம்பானை உமாபதி சிவம், சத்தியாக்கிரகத்தின்போது பலமுறை தாக்கப்பட்டவரும், பொலிசாரின் குண்டிலிருந்து மயிரிழையில் தப்பியவரும், கட்சியின் உயரிய தொண்டனும், அறப்போர்க் காலத் தில் உணவுக்கான ஒழுங்குகளை ஓடி ஓடிச் செய்தவரும் ஆகிய இணுவில் குமாரசாமி, உணர்ச்சி கொண்ட செல்வன் ஒருவர், இவர் சப்பல் வீதியைச் சேர்ந்தவர்; ஆகிய பதின்மருமே தாக்கப்பட்டவர்களாம். இன்னும் கொடுமை ஓயவில்லையா? ஐயகோ! தமிழினமே! உறங்கியது போதும், துடித்தெழு! உரிமை முழக்கமிடு!

அடுத்த சம்பவத்தையும் கூறினர்.

நாயன்மார்க்கட்டு ஓவசியர் வேலுப்பிள்ளை அவர் கள், குடும்பத்தவர்க்குத் தமிழ் பேசுமினம் கடமைப்பட் டது. ஏனெனில் அவர்கள் குடும்பமே அறப்போரில் ஈடுபட்டிருந்தது. வீரப் பெண்மணிகளைப் பெற்றுவிட்ட வேலுப்பிள்ளை அவர்களை வாழ்த்த வேண்டும். திருமதி வேலுப்பிள்ளை அவர்களும், பிள்ளைகள் பரமசக்தியும், சகோதரிகளும் அறப்போரில் முழு நாட்களும் ஈடுபட்ட வர்கள். அதனுல் ஒருநாள் அவசர கால நிலையுள்ள

இந்த நாட்களில், இரவு எட்டு மணியளவில் சில பொலிசார் திடுதிடுப்பென இவர்கள் வீடு புகுந்து பெண்களை அச்சுறுத்தியதுடன், முதிய ஒரு பெண்ணையும் தாக்கினராம். பின்பு பொலிஸ் அதிகாரி மூலம் தாக்கிய பொலிசாரை அடையாளம் காட்டப்பட்டு இப்போது வழக்காகி விட்டதாம். அறப்போரிலீடுபட்டமைக்காக, அதுவும் பெண்கள் என்று எண்ணுது ... சீ! தூ! இதுவும் ஒரு ஆட்சி! அதற்குமொரு பாராளுமன்றம்! அப் பாரளுமன்றத்தில் சில மந்தி(ரி)க் கூட்டம்!

இச் சம்பவங்களை எல்லாம் இன்று வருகை தந்தோர் மூலம் கேள்வியுற்றோம்.

காலை ஒன்பது மணியிலிருந்து பிற்பகல் ஒருமணி வரையும், பின்பு பிற்பகல் இரண்டுமணி தொடக்கம் மாலை ஐந்துமணி வரைக்கும் பலர் வருவதும் போவதுமாயிருந்ததால் பல புதுச் செய்திகளையும், சுக சேமங்களையும் அறிய முடிந்தது. தனிமையிலிருந்த எமக்கு இன்று சமூகத்தில் வாழ்வது போன்றமைந்தது. மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், பலகாரம் ........ பலப்பல உணவுப் பொருட்கள் வந்தன. எல்லோரும் பரிமாறி உண்டோம். இனி அடுத்த சனிக்கிழமையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். சென்ற இரு மடல்களில் இங்குள்ளோரைப்பற்றியெல்லாம் எழுத ஆரம்பித்து சிலரைப் பற்றி எழுதினேன். அவர்களது அன்புரைகளையும் குறிப்பிட்டே னல்லவா? மற்றையோரையும் அறியத்தானே விரும்புவாய்; இதோ தொடர்க—

## வே அ கந்தையா

கைச்சாத்தை மட்டுமே எழுதி அளித்தார் திரு. வே. அ. கந்தையா அவர்கள். இவர் ஒரு பட்டதாரி; நியாய துரந்தரர்; ஊர்காவற்றுறை மக்களின் குரலான பராளுமன்றப் பிரதிநிதி; சிரிக்கச் சிரிக்க மேடையில் பேசும் ஆற்றல் மிகக் கொண்ட இவர், தமிழிலும் நீங்காத

பற்றுக் கொண்டவர். தமிழரசுக் கட்சியில் சேர்ந்த பிற்பாடு கட்சிக் கொள்கையைத் தனது வாழ்வாக அமைத்து வாழ்ந்து வரும் இவர், சிறந்த மதத் தொண்டருமாவர்.

எனது அறைக்கு முன்னுள்ள அறையில், உடுவில் பிரதிநிதி தர்மலிங்கமும் இவரும் உள்ளனர். முன் அறையாக விருப்பதால் காலையில் ஒரு தாய் போல வந்து, 'புதுமைலோல! தூக்கம் முடியவில்லையா'! எனத் தினமும் என்னை நித்திரைவிட்டு எழச் செய்வார். யான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது சைவச் சாப்பாட்டுக்காரருக்குரிய தயிரில் இடைக்கிடை எனக்கு அனுப்புகின்றார். தனது பிள்ளைகளைப் பக்கத்தே காணாத குறையை இப்படி என்மேலும், கரிகாலன் மேலும் அன்பாக சொரிகின்றார். மனைவியும் பிள்ளைகளும் வந்து பார்த்துப்போக சனிக்கிழமை கிடைத்துவிட்டதல்லவா? மனைவி மைசூர்பாகு கொண்டு வந்து கொடுத்துப் போனார். ஒவ்வொரு நாளும் மத்தியானம் சாப்பிட்ட பின்பு, ஒரு மைசூர்பாகில் அரைவாசியைக் கொண்டு வந்து எனது வாயில் குழந்தைக்கு தீத்துவது போலத் தீத்திவிட்டு, மீதியை தனது வாயில் போட்டுக் கொள்வார். அப்படிச் செய்யாவிட்டால் சாப்பிட்டது போல் இல்லையாம். போகவும் வரவும் எமக்கெல்லாம் உற்சாகமும் நகைச்சுவையையும் பொழிவார். தம் தொகுதியில் அபரிதமான வாக்குகளால் வெற்றியும் ஈட்டிவிட்டார். பாராளுமன்றத்தில் கூட சிறந்த கருத்துக்களை நகைச்சுவை மிளிர, சபை கலீரெனச் சிரிக்கப் பேசுபவர். யாருடனும் கோபியாது எல்லோருடனும் நட்புரிமையுடன் கலந்துரையாடி மகிழ்பவர். எனது சொற்பொழிவு பற்றிப் புகழ்ந்து எனக்கு இன்னும் உற்சாகமூட்டி வருபவர். 'கரம்' அடிப்பதற்கு என்னுடன் வருவார். அவருக்கு அவ் விளையாட்டு முடியாத ஒன்று. ஆனால் ஒரு காயை உரிய துவாரத்தில் போட்டுவிட்டால் குழந்தை போல மகிழ்கின்றார். 'பட்மின்ரன்' நன்றாக ஆடுகின்றார். அமைதியாக எலோருக்கும் உதவி புரிந்துன் வருகிறார்.

கந்தையா அவர்களைப்பற்றி எழுதி, எழுதி மடல் நீண்டுகொண்டே போகின்றது. ஒன்றை எழுத மறந்து விட்டேன். கந்தையா அவர்கள் இத்தனை அமைதியாக இங்கிருப்பினும் தமிழ்பேசுமினத்தின் நிலைபற்றிக் குமுறும் உள்ளமுடன் இருப்பதை யானறிவேன். அவர் மட்டுமா? ஈழத்துத் தமிழ்பேசுமினமே அப்படியாகத் தானே உள்ளது. குமுறும் எரிமலை வெடிப்பெடுத்தால்......! கொந்தளிக்கும் கடல் பெருக்கெடுத்தால்......! சுழன்றடிக்கும் சூருவழி அடிக்க ஆரம்பித்தால்...! முடிபு என்ன? முடிபு அமைதி காணும், அந்த அமைதி இன்பமும் துன்பமும் கொண்டு மிளிரலாம். அதே போன்று ஈழத்து நிலையுமாகலாம் தமிழரின் போராட்டம் ஓயாது மகளே, ஓயாது. தீமை கண்டு நடுங்காது தூய்மையுடன் அன்புப் போரைப் பணியாகக் கொண்டு செய்வோம்; வெற்றி காண்போம்.

திடமான தூய்மை செறிந்த அன்புப்பணி வெற்றி தராது போகாது.

சூரியன் உதிக்கும் இடமெங்கும், எனது கொடி பறக்கும்; நாம் ஆளப் பிறந்தவர்கள்; என ஆட்சிச் சக்கரத்தைத் தன் கையில் வைத்திருந்த பிரிட்டிஸ் காரரை பாரத கண்டத்தை விட்டுப் போக வழி சமைத்தது எது? பீரங்கிப்படையா? வேலா? ஈட்டியா? எதுவுமே அல்ல! மகாத்மா காந்தியின் தூய்மை நெஞ்சம், அன்புத் தொண்டு, அடிமையாயிருந்த பாரத கண்ட மக்களது உள்ளமெலாம் பரந்து செறிந்து சாத்வீகப் போராட்டமாகப் பர்ணமித்தது. துப்பாக்கியும், குண்டும், ஆட்சியும் தன் கையிலே வைத்திருந்த வெள்ளைக் காரனை 'போய் வருகிறேன்' என்று கூறுமளவிற்கு இப் போராட்டம் வழி சமைத்தது. பலாத்கார வழியில் போராட்டத்தை நடாத்தி வெற்றி கண்டிருப்பின் தொடர்ந்த அமைதியைப் பாரத கண்டம் கண்டிருக்க முடியாது. தன்னல மறுப்புடன் உரிமை கோரி அகிம்சை வழியில் போராடிய காரணத்தினுலேயே பாரத கண்டத்

தின் சுதந்திரம் அமைதியுடன் நிலவ வழி அமைந்தது. அது மட்டுமல்லாது பிரிட்டிஷாரது நட்பு தொடர்ந்து இருந்து வருகிறது. எதிரியையும் தோழமைகொள்ள வழிதரும் ஆயுதம் சாத்வீகமே. அன்புடமையும் பண்புடமையும் தமிழனிடம் உள்ளன என்பதை அன்பு வழிப் போராட்டமூலம், சிங்கள மக்களுக்கு உணர்த்த வேண்டியது நம் கடமை, நாம் ஆட்சியாளராக விரும்பவில்லை. நாம் ஆளப் படுபவராக இருக்கவும் விரும்பவில்லை. ஈழத்து ஆட்சியினை ஈழத்தில் வாழும் மக்கள் அத்தனை பேரும் சுமுகமாகவும் உரிமையுடனும் வாழும் பான்மை கொண்ட மக்களாட்சியாக அமைக்கவே விரும்புகிறோம். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற மொழிக்கேற்ப ஆட்சியில் எல்லோருக்கும் பங்கு — எல்லோரும் ஆட்சியை நடாத்துபவர்கள், என்ற நிலையை எதிர்காலம் சமைத்தே ஆகவேண்டும். ஆட்சியாளர் எது செய்யினும், குறுக்கு வழிகளைக் கடைப்பிடிப்பினும், நாம் அசையாது தந்திரத்தினை உபயோகியாது, நேரிய வழியில் தூய நெஞ்சமுடன் அன்பு வழிப் போராட்டத்தை, கடமை உணர்வுடன் செய்வோம். இந்த நினைவே மனிதப்பண்புடைய நம்மிடம் என்றுமிருக்க வேண்டும். மகாத்மா காந்தியின் வழி எமது வழிகாட்டியாக என்றுமிருக்கட்டும்.

மகளே! மற்ற விபரங்களையும் மற்றவர்களைப்பற்றியும் அடுத்த மடலில் படிப்பாய். உனது புகைப்படத்தை அடிக்கடி பார்க்கிறேன்.

உன் அன்புத் தந்தை,
புதுமைலோலன்

## தடுப்புக்காவலில் நாம் - 16

தடுப்புக் காவல் நிலையம்,
பனகொடை,
ஹோமகம.
23-5-1961.

மகளே அன்பரசி!

நேற்றைய மடலில் தடுப்புக்காவல் குடும்பத்தவர்களில் அறியத்தராதவர்களைப்பற்றி அறியத் தருவேன் என எழுதினேனல்லவா? அவர்களைப்பற்றியே இன்று எழுதப்போகின்றேன். ஒருவரா? இருவரா? எழுபத்திநான்கு பேரல்லவா? அதனால் ஒவ்வொருவரையும்பற்றி ஒரேமடலில் எப்படி எழுதமுடியும்?

### க. க. வைத்திலிங்கம்

"தலையைக் கொடுத்து தமிழைக் காக்க முன்வரும் தமிழன்னையின் தனயனே நீ நீடூழி வாழிய..." என எழுதிக் கைச்சாத்திட்டார்கள், திரு. க. க. வைத்திலிங்கம் அவர்கள். இவர் மன்னாரைச் சேர்ந்த மாத்தமிழ் வீரர், பொதுநலத் தொண்டர். மன்னார் அறப்போருக்கு உதவிக்கரமாக அமைந்தவர்; உணர்ச்சிமிக்க பெரியார்.

### வே. கைலாயபிள்ளை

"எல்லோரு மின்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே .." எனத் திரு வே. கைலாயபிள்ளை அவர்கள் எழுதிக் கைச்சாத்திட்டார்கள். மன்னாரைச் சேர்ந்த இலுப்பைக்கடவையில் முதலியார்கமத்தைத் தனது சொந்த ஊராகக்கொண்டவர். முதலியார்கமம் திருக்கேதீஸ்வரத்திலிருந்து செல்லவேண்டியது. இவரும் இன்னுமொரு குடும்பமுமே அக்கிராமச் சொந்தக்காரர்கள். இவர் சட்டக் கல்லூரி மாணவர்; சளசளவெனப் பேசாது அமைதியாகவே இருப்பார். மாலையில் கந்தையா வைத்தியநாதனுடன் சேர்ந்து

யோகாசனம் செய்கின்றார். பகலெல்லாம் தனது சட்டக்கல்லூரிப் பரீட்சைக்கு, ஆயத்தம் செய்கின்றார்; தாடிவளர்க்கின்றார், செயல்வீரர், என்பது தெரிகின்றது. மன்னாரில் நமது கட்சிக்கு ஒரு தூண்போன்றவர்.

### கே. எஸ். ஏ. கபூர்

**"பிறந்துவிட்ட மனிதன் இறப்பது ஒருமுறைதான், அதை நம்இனத்தின் எழுச்சிக்குப் பயன்படும்வழியில் பயன்படுத்துவதே நாம் இனத்திற்குப் புரியும் சிறந்தபணி"** என எழுதிக் கையொப்பமிட்டார், ஜனுப் கே. எஸ். ஏ. கபூர் அவர்கள். இவர் மன்னாரில் உள்ள எருக்கலம்பிட்டியைச் சேர்ந்தவர். அடிக்கடி கொள்கையை உடை மாற்றுவதுபோல மாற்றி, நம்பிக்கையை இழந்துவரும் இஸ்லாமியர் மத்தியில் இவர் ஒரு கொள்கைத் தங்கம்." தமிழ் எங்கள் மூச்சு—எமது தாய்மொழி தமிழே, எனக் கூறிடும் கபூர் அவர்கள், தமிழரசுக் கட்சியில் நீங்காத பற்றுக்கொண்டவர்; நல்ல பேச்சாளர்; அத்துடன் எழுத்தாளரும்கூட. ஒவ்வொரு கணமும் கட்சி பற்றியே சிந்திக்கும் இவர் நூல்கள் எழுதுவதிலேயே நேரத்தையெல்லாம் போக்குகின்றார். வரலாற்று உண்மை செறிய, நூல்கள் ஆக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இவர், தடுப்புக்காவல் முடிந்து வெளியேறியதும் இவற்றை அச்சிடஉள்ளார். நல்லவர்; திறமைசாலி.

### க. வைத்தியநாதன்


கைச்சாத்தைமட்டு மிட்டார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள். இவரை அறியாத ஈழத்துமக்கள் இருக்க முடியாது. ஆட்சிச்சக்கரத்தை உருட்டிய மூளைகளில் ஒன்று. இப்போது திருக்கேதீஸ்வரத்தில் யோகிபோல மதம் வளர உதவும் இவர் ஓர் பக்திமான்; தமிழறிஞர். மன்னார் அறப்போரின்போது சத்தியாக்கிரகவீரருக்கு உணவு கொடுக்கும் பணியை மேற்கொண்ட இவரையும் ஆட்சியாளர் தடுப்புக் காவலில் இட்டுவிட்டனர். பகவத்கீதை, சிலப்பதிகாரம் என்பவற்றைப் படிப்பதும், மற்றையோருக்கு உரைப்பதும், யோகா

சனம் செய்வதும் ஆகப் பொழுதெல்லாம் நன்ருகக் கழிக்கு மிவர், நேரத்தை யெல்லாம் பொன்போலக் கழித்து எமக்கு வழிகாட்டுகின்ருர். பழையகாலம், தன் அரசாங்க உத்தி யோகம், அப்போதைய மந்திரிமார் முதலான கதைகளேக் கூறும்போது கேட்க ஆச்சரியமாயிருக்கும். சிறந்த பண் பாளர் என்பதை அவர் வதனமும் பேசாமல் பேசுகின்றதே.

### ச. சா. கோபாலரத்தினம்

மட்டக்களப்பு மண்ணில் தமிழரசு விதையைத் தூவி வளர்த்த பெரியார்களுள் ஒருவராகிய திரு. ச. சா. கோபால ரத்தினம் அவர்கள், கைச்சாத்தைமட்டு மிட்டார்கள். முதிய நேரம், உணவுகளில் கூடியகவனமெடுக்க வேண்டிய வயது எனினும் தடுப்புக்காவலில் வாழவேண்டிய சூழ்நிலே, தன்பாடும் தானுமாக அமைதியுடன் வாழ்ந்து வருகின்ருர்.

### ம. சி. பொன்னுக்கோன்



**"அறப்போர் தொடுத்து அடைபட்டிருக்கும் மறத்தமிழ் வீரரே, மனம் சோர்வுறுதீர்"** என எழுதிக் கைச்சாத்தையுமிட்டார், திரு. ம. சி. பொன்னுக்கோன் அவர்கள். இவர் மன்னுரிலுள்ள நானுட்டான் மேற்குக் கிராமச்சங்கத் தலேவர்; தோற்றம்போல அமைதியான போக்குக்கொண்டவர். அதிகம் வெளியே வராது தனது அறையிலேயே தங்கி வருகின்ருர்.

### ச. கு. கணேசனுதன்

**"வாழ்க தமிழ் இனம்"** என்றெழுதிக் கைச்சாத்திட்டார், திரு. ச. கு. கணேசனுதன் அவர்கள். மட்டக்களப்பைச் சேர்ந்த இவ்விளேஞர், 'மாதங்களில் அவள் மார்கழி' என்ற கண்ண தாசனின் சினிமாப்பாட்டை பாடியபடியே மேன்மாடியெங்கும் திரிகின்ருர். மட்டக்களப்பு அறப்போரில், முக்கிய பங்குகொண் டிருந்த அன்பர் இவர்.

## சாம். பெ. த. தம்பிமுத்து

**"வாழ்க தமிழரசு"** என்றெழுதிக் கைச்சாத்திட்டார், திரு சாம். பெ. த. தம்பிமுத்து அவர்கள். இவர் இளைஞர், புது வழக் கறிஞர். மட்டக்களப்பில் கட்சித்தொண்டருள் குறிப்பிடக்கூடிய ஒருவர். இவரும் தாடிவளர்க்கிறார். என்ன செய்வது? இவருக்கு அடர்த்தியாக வளர்வதில்லையே! என்னுடன் கரம் ஆடி மகிழ் கின்றார், நூல்கள் படித்து நாட்களை ஓட்டுகின்றார்.

## கெ. வி. கிருஷ்ணக்குட்டி

**"மொழி, மதம், கலை, கலாச்சாரம் போன்ற மனித உரி மைகள் பெற சுரண்டும் வர்க்கத்தை, ஒழித்து முயற்சியும், சுய நலமற்ற சேவையும்தான் ஒவ்வொருவரதும் கடமை புரட்சி வணக்கம்"**, என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. கெ. வி. கிருஷ்ணக்குட்டி அவர்கள். இவர் மட்டக்களப்பில் வாழும் கம்யூனிஸ்ட் நண்பர். நான் யாழ்ப்பாணத்தில் சில கம் யூனிஸ்ட் நண்பர்களுடன் நன்றாகப் பழகுபவன். ஒருசிலரின் பழக்கத்தைக்கண்டு ஆச்சரியப்பட்டவன். தெருவெங்கும் ஆ... ஊ எனப் பிதற்றியபடி முன்பின் முரணாக ஒழுக்கமற்று வாழும் சிலரை எனக்குத் தெரியும். கொள்கை ஒருபக்கமிருக்க, மனித நெறிப்படிகூட சில கம்யூனிஸ்ட் நண்பர்களுக்கு நடக்கத் தெரியாது. இதைக் கம்யூனிஸ்ட் நண்பர்களே ஒப்புக்கொள்வர். மாதகல் கந்தசாமி, அளவெட்டி பொன்னம் பலம் ஆகியோர் பண்புடன் தாம் நம்பும் கொள்கைக்காக ஊழியம் செய்யும் பண் பைக் கண்டிருக்கிறேன். அதேபோன்ற தன்மையுடன் அமைதிநிலவ பண்புடையாள ராகக் கிருஷ்ணக்குட்டி காணப்படுகின்றார். ஏழ்மை துரத்தியடிக்கப்பட்டு, சுபீட்சம் நிலவப் பாடுபடும் இவருடன் யான் அடிக் கடி பேசுவது வழக்கமாகிவிட்டது... கிஞ் சிற்றும் வேறுபாடுகாட்டாது — வேறு கட்சி



யாளன் என்பதற்காக ஒத்துழைக்காது, நடக்கும் பண்பு இல்லவே இல்லை. கம்யூனிஸ்ட் உறுப்பினராக இருந்தும் மட்டக்களப்பு

இரகசிய பொலிஸ்பகுதி ஆட்சியாளருக்குக் கொடுத்த அறிக்கையின் தப்பாலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதை இவர் ஆட்சியாளருக்கு அறிவித்துள்ளார். விரைவில் விடுதலையடைவார் என்றே நம்புகின்றேன். கண்ணியமுடன் நடந்து கொள்ளும் தன்மைகண்டு யான் எண்ணினேன், யாழ்ப்பாணத்தில் தெருவெல்லாம் தமது எழுத்தை தம்பட்டமடிக்கும் அமைதியற்ற, கம்யூனிஸ்ட் எழுத்தாளர், பண்பில்லாது நடக்கும் சில கம்யூனிஸ்ட் தோழர்கள், கிருஷ்ணக்குட்டியைப் பார்த்துப் படிக்க அதிகமுண்டு. கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கிடைத்த நல்ல தொண்டர் கிருஷ்ணக்குட்டி.

## மசூர் மவ்லானு

''அன்பினுல் ஆகா தொன்றிலே—அன்பிலேல்
செயற்கரிய காரிய மெலாம்......''

என எழுதிக் கைச்சாத்தையு மிட்டார், மசூர் மவ்லானு. கல்முனையைச் சேர்ந்த இவர், தற்போது கொழும்பில் வாழ்கின்ருர். சட்டக்கல்லூரியில் படிக்கின்ருர். ஈழத்து அரசியல் பேச்சாளருள் குறிப்பிடக்கூடிய இவரிடம்—நிறையக் கேலியும் கிண்டலும் காணப்படும். எமது மேன்மாடி யெங்கும் கலீரிடும் சிரிப்பையும், கடகடவென அங்குமிங்கும் துடிப்புடன் நடந்து திரியும் ஒலியையும் அடிக்கடி கேட்கின்ருேம். கட்சியை வளர்த்த பேச்சாளருள் இவரும் ஒருவர். நகைச்சுவையையும் உணர்ச்சியையும் சேரப் பேசக்கூடிய திறன்கொண்டவர். இஸ்லாமியரிடையில், கொண்ட கொள்கைமாருத இலட்சியப் பற்றுக் கொண்டவர். வேறு சில முஸ்லீம் தலைவர்களின் புரட்டுத் தனம்கண்டோ என்னமோ தன்னைக்கூடச் சந்தேகக்கண்ணுடன் நோக்குவதாகவும், இது ஒரு அநியாயம் என்றும் என்னிடம் கூறி வேதனைப்பட்டார். உண்மையுணராது முடிபுக்கு வருவதை வெறுக்கும் நான், இவரது வருத்தத்தை எப்படி நீக்குவது என்று தெரியாது உள்ளேன். ஆனல் யார் என்ன சொன்னலும், கட்சிமேல் நீங்காதபற்றும், அரசியலில், இஸ்லாமியருக்கும் சமஷ்டிப் பாதை மூலமே உரிமைபெற்று வாழலாம் என்றும் நம்புமிவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது.

## கோ. நடேசபிள்ளை

**"சொல்லின் செல்வன் தோழ! ஆராய்ந்து செயல்புரி உயர்வு பெறுவாய் ... ...!!**




என்றெழுதிக் கைச்சாத் திட்டார், திரு. கோ. நடேசபிள்ளை அவர்கள். இவர் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் வவுனியாக் கிளைக் காரியதரிசி. வவுனியா சிவசிதம்பரத்தை ஆதரித்து நிற்பவர். தொழிலாளர் உரிமை காணத் துடிக்குமிவர், நன்கு சொற்பொழிவாற்றும் திறனும் கொண்டவர். நூல்கள் வாசிப்பதிலேயே தன் ஓய்வைப்போக்கி வருகின்றார். மனம் திறந்து என்னுடன் பேசுவார், நண்பராகிவிட்டார்.



## த. நல்லையா

கைச்சாத்தைமட்டு மிட்ட திரு. த. நல்லையா அவர்கள், வவுனியா நொச்சி மோட்டையைச் சேர்ந்தவர். வவுனியா சிவசிதம்பரத்தை ஆதரித்து இங்கு வந்தாலும், தற்போது கட்சியாளராக விருப்பதே போற்றற்குரியது என்கிறார். நமது கட்சிபற்றிப் பலவற்றைக் கேட்கின்றார். கடவுள் பக்தர்; அமைதியான போக்குக் கொண்டவர்.

## பொ. பரராசசிங்கம்



**"அன்ப! தங்களின் தேசியத் தொண்டை நினைந்து மகிழ்ச்சி யடைகின்றேன். வருங்காலத்தில் தேசியத் தொண்டர்களைச் சிருஷ்டிப்பது தங்களின் கைகளிலிருக்கிறது, ஆகவே, சிந்தித்துச் செயலாற்றும்படி வேண்டுகின்றேன்"** என்று எழுதிக் கைச்சாத் திட்டார் திரு. பொ. பரராசசிங்கம் அவர்கள். வவுனியாவிலுள்ள பத்தினியார் மகிழங்குளத்தில் வாழும் இவர்,

சிகரெட்டாகவும் சுருட்டாகவும் ஊதித்தள்ளியபடி, மகிழ்வாக ஞானசேகரத்துடன் கேலிபேசியபடி உள்ளார்; நல்லவர்.

## கரிகாலன்

**“இன்று கட்டுண்டோம், பொறுத்திருப்போம், நாளைகாலம் மாறும்...”** என்று எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. கரிகாலன் அவர்கள். எனது அறையிலே என்கட்டிலருகே தங்கும் இவர், பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதும், அடிக்கடி ஏதாவது அரசியல் சர்ச்சையில் ஈடுபடுவதுமாக இருக்கின்ருர். இளம் வயதிலேயே தடுப்புக்காவலில் சுதந்திரம் அற்று, இவரும் இருக்கிருர், என்பதை எண்ண எமக்கெல்லாம் வேதனையே? எழுது மாற்றல், உணர்ச்சி உந்தலுடன் பேசும் ஆற்றல், என்பவற்றை இயல்பாகக்கொண்ட இவர் ஈழத்தமிழர் உரிமை காண எதையும் செய்யுந்தன்மை வாய்ந்தவர். கட்சியின் சிறந்த தொண்டருள் ஒருவர். சென்ற தேர்தலில் சண்டமாருதம்போல மேடைஎங்கும் கர்ஜித்த சிங்கம் இவர் என்பதை நாடு அறியும். இளந்தமிழர் இயக்கத்தை, உருவாக்கிய வாலிபப் படையை நாட்டுத் தொண்டருக்கு உரித்தாக்கிய திறமைசாலி.

## க. சிவகுரு

**‘‘எதையும் தாங்கும் இதயம் வேண்டும்’’** என்று எழுதி கைச்சாத்திட்டார், ஆசிரியர் சிவகுரு அவர்கள். திருமலையில் வாழும் இவர் கட்சிக்காக பல தியாகங்களை புரிந்தவர். அறப் போரின்போது, அறப்போரில் பங்குகொண்டமைக்காக, டெனியாயா, என்ற சிங்கள நாட்டுக்கு மாற்றப்பட்டார். பலமாதச் சம்பளத்தை இன்னும் பெறவில்லை. ஏழு குழந்தைகளுக்குத் தந்தையான இவர், இந்நிலையிலும் மகிழ்வுசூழ நாட்டுக்காக என்னல் இயன்றதைச் செய்கின்றேன் என்ற திருப்தியுடன் உலவுகிருர். தனது நிலைமையைப் பலமுறை என்னுடன் மனந்திறந்து பேசுகின்ருர். இவரது தியாகம் பெரிது, என்பதையுணருகிறேன். படிப்பதும் படுப்பதுமாகவே தமது நேரத்தை, வைத்துக்கொண்டுள்ளார்.

### சபா. சுப்பிரமணியம்

**''எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு''** என்று எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. சுப்பிரமணியம். இவர் வவனியா பட்டினசபைத் தலைவர், கொள்கைப்பற்றில் ஒப்பாரும் மிக்காரும் அற்றவர். பேசும் ஆற்றலும், கடமைபுரியும் திறனும், ஒருங்கே வாய்க்கப்பெற்றவர். இளைஞர்; வவனியா மக்களின் அபிமானம் பெற்ற இவர், கட்சி வளரப் பெரிதும் பாடுபட்டவர். தாடி வளர்த்தபடி, இடைக்கிடை மௌன விரதமும் அனுட்டித்தபடி தம்பொழுதை எல்லாரும் மெச்ச அமைதியாகப் போக்குகின்றார். இவர் நல்லவர்; வல்லவர்; என் நல்ல நண்பர்களுள் ஒருவர்.

### கே. கயிலாயபிள்ளை

**''தேசியத் தொண்டா! உன் பங்கைப்பெறமுன் உனது சகோதரனுடைய பங்கைப் பெற்றுக்கொடு''** என்றெழுதிக் கைச்சாத்திட்டார், திரு. கே. கயிலாயபிள்ளை அவர்கள். துணுக்காயைச் சேர்ந்த இவர் கட்சியின் நல்ல தொண்டர். உணர்ச்சி மிக்க வாலிபர். என் அறையிலேயே தங்கி வருமிவர் இரவிரவாகத் தனது இறந்தகால, நிகழ்கால வாழ்வியலைக் கூறி மெய்ப்பாடுகள் கொள்வார். இவருக்கு வாழ்வில் பல பிரச்சனைகள் இங்கிருக்கும்போது வந்தன. மனந்திறந்து கூறுவார்; என்ன செய்வார்? மேன் மாடியிலிருந்து அசையமுடியுமா? கட்சியில் பற்றுக்கொண்ட இவர், வழுக்கண்டால் படாரெனக் கோபமடைகின்றார். ஆனல், நெஞ்சமோ வெள்ளை.



### சு. செகராசசிங்கம்

**''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன்''** என்றெழுதிக் கைச்சாத்திட்டார், திரு. சு. செகராசசிங்கம். திருமலையைச் சேர்ந்த இவர், கட்சியின்

சிறந்த தொண்டருள் ஒருவர். வஞ்சகமற்று வளர்ந்த உடலமைப்பு உடையவர். மேன்மாடி யெங்கும் நடப்பதும், மகிழ்வாகப் பேசுவதும் தன் தாயை எண்ணி நோவதுமாகவுள்ளார்.

## இ. சம்பந்தர்

திருமலை வழக்கறிஞர் ஆகிய இ. சம்பந்தர், அவர்கள்; கைச்சாத்தைமட்டு மிட்டார்கள். அறப்போரின்போது ஓய்வற்றுத் திருமலையில் தொண்டாற்றியமைக்காகக் கைதுசெய்யப்பட்டவர். பண்பும் அமைதிப்போக்கும் கொண்டு திகழ்கின்ருர். அன்பு! இன்னும் எமது தடுப்புக்காவல் குடும்ப விபரம் முடிவதாயில்லை. இன்னும் சிலருண்டு. நிச்சயமாக அடுத்த மடலில் முடித்துவிடுவேன், இன்னும் எத்தனை எத்தனையோ எழுதவேண்டுமே! ம் உனக்குக் கடிதம் எழுதும்பொழுது வெகு வேகமாகவும் மகிழ்வாகவும் கழிகின்றதே! அன்பரசி! உன்னை மடியிலேற்றி "அன்பு" என்றழைத்து, உன் கன்னத்தில் முத்தம் சொரிந்து, உன்செல்ல மழலை மொழிகளைக் கேட்டு, மகிழும் நாள் என்று? நாளே! ஓடு, மீதி அடுத்த மடலில்—

உன் தந்தை;

**புதுமைலோலன்.**

# தடுப்புக்காவலில் நாம் - 17

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம.
22-5-61.

**மகளே அன்பரசி!**

"தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரில் சிலர் விடுதலை செய்யப்படுவர்" என இன்றைய வானொலிச் செய்தி கூறிற்று. தாமாகவிருக்கலாமோ தாமாகவிருக்கலாமோ என சிலர் எண்ணினர். தமது, மனைவி மக்களை, உறவினரை, சொந்த மண்ணைக் காண்பதில் யாருக்குத்தான் விருப்பமில்லை? சில வேளை பாராளுமன்ற உறுப்பினரை விடுத்து மற்றையோரை விடுதலை செய்யலாமெனவும், சிலர் பேசிக்கொண்டனர். உன் அப்பாவும் சில வேளை விடுதலை அடைவார், ஓடோடிவருவார், தூக்கி அணைத்து முத்தம் விதைப்பார் என எண்ணுகிறாயா? என்னமோ எனக்கு விடுதலை, நாளைய குழுவினருடன் கிடைக்குமென என்னால் எண்ண முடியவில்லை. ஒருசிலர் விடுதலையடைய; மற்றையவர்கள் திரும்பவும் இங்கே தவம் செய்வதை எண்ண எனக்கு வேதனையாகவே உள்ளது, எல்லாம் நாளை தெரியும்தானே.

அன்பு! என்னுடன் இங்கே தடுப்புக் காவலில் உள்ள, மற்றவர்களை இம் மடலில் அறியத் தந்து முடித்துவிடலா மென எண்ணுகிறேன், தொடர்ந்துபடி.

### வ. ந. நவரத்தினம்

இங்கே சில தாடிகளும் உலாவுகின்றன. அதில் சில பழைய தாடிகள்; சில புதுத் தாடிகள். பழைய தாடியைக் கொண்ட திரு. நவரத்தினம் அவர்கள் கைச்சாத்தை மட்டு மிட்டார்கள். நவரத்தினம் என்ற பெயரைக் காரணப் பெய ராகத்தான் பெற்றோர் இட்டிருக்கவேண்டும். நவரத்தினங்கள்

இவரால் மாண்படைகின்றனவா? அல்லது இவர் நவரத்தினங்களால் மாண்படைகின்றாரா? இதன்பதில் என்ன? அப்பதிலே இவர். அதிகம் பேசாது மௌனமாகக் கடமையைச் செய்து வருமிவர், இங்குமப்படியே உலாவுகிறார், தனது நீண்ட சங்கிலியைத் தோளில் புரட்டிவிட்டபடி, தாடியைத் தடவிய படி, அவருக்கே உரித்தான, நடையுடன் மேன்மாடியிலங்குமிங்கும் திரிகின்றார். ஆங்கிலக் கதை நூல்கள் வாசிப்பதும், பழைய சில தமிழ் நூல்களைப் படிப்பதுமாக இருப்பதையும், இடைக்கிடை கரம் அடிப்பதையும், மாலையில் நைப்பந்தாட்ட மாடுவதையும் தனது பொழுது போக்குகளாகக் கொண்டுள்ளார். யார் எதைக் கேட்டாலும், பதில் கூறாது சிரித்தபடி மௌனமாயிருப்பதுமூலம் தப்பிவிடுகின்றாரா? அல்லது அதுதான் பதிலோ தெரியவில்லை. ஆழ்ந்த அன்புள்ளமும், அமைதியாக எதையும் எண்ணைச் செய்யும், செயற்றிறனும், ஒருங்கே அமைந்த இவர் சாவகச்சேரித் தொகுதி மக்களுக்குச் செய்த சேவை குறிப்பிடக் கூடியவை. எத்தனை புதிய பாடசாலைகள்; எத்தனை ஆசிரியர்களுக்கு வேலை - இவை நவரத்தினம் அவர்களின் சேவைக்கு எடுத்துக் காட்டு.

எல்லோரும் மதிக்க நடக்கும் பொறுமையாளரான இவர் இப்போது நன்றாகச் சொற்பொழிவாற்றும் வன்மையும் கொண்டவராக மாறிவிட்டார். ஆரம்ப காலத்தில் முதன் முதல் பாராளுமன்றம் நுழையும் போது ஐந்து நிமிடம் தமிழில் பேசுவதே கஷ்டமாகக் கொண்டிருந்த இவர், தற்போது அழகாக விரல்களைக் கூட்டிக் காட்டியபடி அதிகநேரம் பேசக்கூடியவராகி விட்டார்.

இங்கே கத்தோலிக்க மதத்தவர்களுடன் சேர்ந்து, வணக்கம் செய்வதைக் காண்கின்றேன். எல்லா மதத்திலும் மதிப்பும் அன்பும் கொண்டவரென்பதை இதன்மூலம் காணமுடிகின்றது. சாவகச்சேரி மக்களின் ஏகோபித்த குரலாக ஒப்பற்ற இரத்தினமாக அமைந்துவிட்ட இவர், சிறந்த ஒரு தலைவருக்குரிய தன்மைகள் கொண்டு திகழ்கின்றார். இவர் ஒரு பட்டதாரி,

அத்துடன் நியாயதுரந்தரர், சாவகச்சேரிப் பிரதிநிதி என யான் கூறியா தெரியவேண்டும்? என்றும் சாவகச்சேரிப் பிரதிநிதியார் என மக்களைக் கேட்டால், நம்ம நவம்தான் என்பதைப் பல முறை பலரது வாயிலிருந்தும் கேட்கின்றேன். இவருக்கு நல்ல எதிர் காலம் உள்ளது, என நம்புகின்றேன்.

### வி. தர்மலிங்கம்



**"என்கடன் பணிசெய்து கிடப்பதே என எழுதிக் கைச்சாத்திட்டார்"** உடுவில் பிரதி நிதி திரு. தர்மலிங்கம் அவர்கள். அவர் உடுவில் கிராமச்சங்கத் தலைவருமாவார் குழந்தை போன்ற உள்ளமும், எதையும் எண்ணி நடக்கும் பண்பாடும் உடையவ ராக உள்ளார். சிகரெட், சுங்கான், சுருட்டு என்பவற்றை மாறி உபயோகிக்கும் இவர் சிலப்பதிகாரம், உமர் கயாம் பாடல்கள் என்பவற்றை சுவைத்துப் படிப்பதைக் காண்கின்றேன். கரிகாலனும் இவரும் சேர்ந்து ஆங்கிலச் சொற்களை ஏற்படுத்தும் விளையாட்டை விளையாடுவதிலும், பட்மின்ரன் விளையாடுவதிலும் நேரம் கழிக்கின்றனர். யார் மனமும் நோக நடவாத இவர், என் அறைக்கு முன் உள் ளதால் அடிக்கடி என்னுடன் கலந்துரையாட வருவார். புதிய எண்ணங்கள் பல கொண்ட இவர், எதிர்க் கட்சியினரும் மதிக்க நடக்கும் தன்மை கொண்டவர். பாராளுமன்றப் பிரதி நிதி என்ற எண்ணமின்றி, கல்லூரி மாணவர் போலவே இங் குள்ளார். வழக்கறிஞர்க்குரிய கடைசிப் பரீட்சைக்கும் ஆயத் தம் செய்கின்றார். உடுவில்தொகுதி மக்களால் அபிமானம் பெற்ற இவர், என்றுமே மக்கள் மதிக்கும் பண்புடையாளராக இருப்பார் என்பது என் நம்பிக்கை. தன் தொகுதித்தன்மை, தனது தேர்தல் கால நிகழ்ச்சிகள் என்பவற்றை அடிக்கடி என்னுடன் கலந்துரையாடும்போது கூறுவார்.

தனது பெரிய தந்தை பி. எஸ். சுப்பிரமணியம் (டாக்டர்) மேல் நீங்காத பாசம் கொண்டு காணப்படுகிறார். எல்லாரும் போற்ற மகிழ்வாக இங்கே உள்ளார்.

## இ. மு. வி. நாகநாதன்

கைச்சாத்தை மட்டுமிட்டுத் தந்தார் நாகநாதன் அவர்கள். இவர் சிறந்த ஒரு ஆங்கில வைத்தியர். அரசியல் வாழ்வில் புகுந்து சுழலுமிவரால் தனது வைத்தியத்தை ஒழுங்காகச் செய்து கொள்ள முடிவதில்லை. சிங்களத் தலைவர்களது குடும்ப நண்பராக இருக்கும் இவர், பிரதமரது குடும்ப நண்பருங்கூட. ஆனால் தமிழ் உரிமைக்காக நேரியவழி செல்லும் இவர் அரசியல் உறுதி கருதி இரும்புமனிதன் என அழைக்கப்படு கின்றார். ஒவ்வொரு கணமும், அரசியல் சிந்தனையிலேயே கழிக் கும் இவர், இங்கும் பல புதிய திட்டங்களைத் தீட்டுவதும் மற் றவர்களுடன் ஆலோசிப்பதுமாகவே உள்ளார். வஞ்சகம் சூது தெரியாத இவர், தமிழ் பேசுமினத்தின்மேல் கொண்டுவிட்ட பற்று சொற்களால் அளவிடமுடியாதவை. எங்கள் தொகுதி யாகிய நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியாகவுள்ள இவர், பாராளுமன்றத்தில் யாருக்கும் அஞ்சாதவீரராக ஆங்கி லத்தில் பேசும்போது, சிங்கம், கர்ஜிப்பதுபோல இருக்கும். பொலிசாரின் தடி முறிய அடிவாங்கிய இவர், உடம்பு முன்னைய அளவு பலமானதாயில்லை. எதுவரினும் அஞ்சாது முன் செல் லும் பண்பைப் பலமுறை கண்டுள்ளேன். ஈழத்துப் பட்டேல் இவர்.

## ஜே. திஸவீரசிங்கம்

கைச்சாத்தை மட்டும் இட்டுத் தந்தார் மட்டக்களப்பு நகர சபைத் தலைவர் திஸவீரசிங்கம் அவர்கள். ஆஜானுபாகு போன்ற தோற்றமும், சிரித்த முகமும் கொண்ட இவர் தமது நகரசபை உயர எத்தனையோ புதுப்பாதைகளை வகுப்பவர். நல்லவர், பண் பாளர், மட்டக்களப்பில் அறப்போர் நடக்க மிக உதவியாக அமைந்தவருள் ஒருவர்.

## சு. செ. கதிரேசு

கைச்சாத்தை மட்டுமிட்டார் கதிரேசு அவர்கள். இவர் வவுனியாவைச் சேர்ந்தவர். வவுனியாப் பிரதிநிதியுடன் சேர்ந்து வவுனியாக் கச்சேரி முன்பு அறப்போர் செய்து கைதானவர்.

இவர் தமிழரசுக் கட்சியை ஆதரியாவிட்டாலும், தமிழ் வாழ உழைக்கும் தன்மை கொண்டவர். முயற்சி செய்து செல்வந்தரானவர். பொறுமையான இவர், சிவசிதம்பரம் மேல் நீங்காத பாசம் கொண்டு காணப்படுகின்றார்.

## செ. ஞானசேகரம்

**"தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை"** என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ஞானசேகரம் அவர்கள். இவர் வவுனியாவிலுள்ள குடியிருப்பில் வாழ்பவர். தமிழரசுக்கட்சியின் செயற்குழு உறுப்பினர். கட்சிக் கொள்கையில் நீங்காத பற்றுக் கொண்டவர்.

"தன் தாய் முதிய நேரம் என்றும், அவருக்கு உதவி செய்ய மட்டுமே முடியவில்லை, மற்றப்படி ஒன்றுமில்லை" எனக் கூறிக்கொள்ளுமிவர் கொள்கை தவறுபவர்களைக் காணும் போது நக்கீரராகிவிடுகின்றார். வவுனியாவில் கட்சி வளர உழைத்தவர்களுள் ஒருவர். தமிழரசுக் கட்சியை ஆதரியாதவர்கள் சிந்திப்பது கிடையாதோ என அடிக்கடி என்னைக் கேட்பார். என் அறைவந்து அரசியல் வினாக்கள் பலவற்றைக் கேட்டுக்கொண்டேயிருப்பார். உறுதியும் கொள்கைப்பற்றும் நிரம்பிய இவர், நன்றாக என்னோடு இங்கே வந்தபின்பே பழகினார்; நண்பரானார்.

## இ. வ. வில்வராசா

**"வெல்க அறப்போர்! வாழ்க தமிழ் மொழி** வாழ்க தமிழினம்" என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. வில்வராசா அவர்கள். இவர் வவுனியாவைச் சேர்ந்தவர். வழக்கறிஞர்; வவுனியாப்பிரதிநிதியின் அரசியல் கொள்கையை தமது கொள்கையாகக் கொண்டவர். இங்கு வந்த பிற்பாடு தாடி வளர்க்க ஆரம்பித்தரர். சிவப்பு நிறமான இவருக்கு, கறுப்புத் தாடி கிசு கிசு என வளர்ந்துவிட்டதே! அடிக்கடி தாடியை எமது கழுத்துடன் தேய்க்கிறார்; சிரிக்கிறார்; பேதமற்று எல்லோருடனும் நட்புரிமையுடன் நடந்துகொள்ளுமிவர், தமிழ் உரிமை காணத் துடிக்கும் இளைஞராவர்.

## வே. த. சுப்பிரமணியம்



கைச்சாத்தை மட்டும் இட்டுத்தந்தார் திரு. சுப்பிரமணியம் அவர்கள். இவர் வவுனியா பட்டினசபையின் உபதலைவர். இவர் எனது அறையிலே என்கட்டில் அருகே தங்கிவருகிறார். நேர்மை, கண்ணியம், தொண்டுமனம் என்பன ஒரு சேர வாழ்ந்து வரும், கட்சியின் நல்ல படைக் கலன். வவுனியா வாழ்தமிழ் பேசும் மக்களுக்கு தன்னால் ஆனஅளவு தொண்டு செய்து வரும் பெரியார், குற்றம் கண்டு சீறியெழும் தன்மையும், நெறிகாணப் போராடும் வன்மையும் இவரிடம் காணப்படுகின்றன. எமக்கெல்லாம் தந்தைபோல உதவுகின்றார்.

## கு. ஐயாத்துரை

கைச்சாத்தைமட்டுமிட்டார், திரு. ஐயாத்துரை அவர்கள். வவுனியாப் பிரதிநிதியின் அரசியல்க் கொள்கையை ஆதரிப்பவர். புத்தகம் வாசிப்பதிலேயே தன்பொழுதைக் கழிக்கும் இவர், எல்லாரையும் மதித்துப் பெருமையுடன் வாழ்கின்றார். இவரும் ஒருவழக்கறிஞர் ஆவர்.

## சி. ஐ. குலசேகரபிள்ளை

**''துணியின்மை ஞாலத்திற்கேற்றதே வேந்தன் அணியின்மை வாழும் உயிர்க்கு''** என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. குலசேகரபிள்ளை. இவர் வவுனியாவைச் சேர்ந்தவர். வவுனியாப் பிரதிநிதியின் கொள்கையாளர். வயதிற்கேற்ற அமைதியுடன், சுருட்டைப் புகைத்தபடி கடதாசிக்கூட்டம் **(Card)** விளையாடுவதில் நிபுணராகவேயுள்ளார். இருப்பதே தெரியாது வாழ்கின்றார்.

## சூ. மரியாம்பிள்ளை

**''தமிழ் மொழி வாழ்க''** என எழுதிக் கைச்சாத்தை மட்டுமிட்டார் திரு. மரியாம்பிள்ளை அவர்கள். முல்லைத்தீவு

பட்டினசபைத் தலைவராகிய இவர், தன்னை ஏன் கைது செய்த தெனத் தெரியவில்லை என்கிறார். தான் அறப்போர் எதிலுமே ஈடுபட வில்லையாம். இந்த ஆட்சியாளரின் இரகசியப் பொலிஸ் பகுதியினரின் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு இது. கடதாசிக் கூட்டம் விளையாடுவதிலும், கலந்துரையாடி மகிழ்வதும், வீட்டை பிள்ளைகளை எண்ணுவதாகவுமுள்ளார்.

## ஜி. பி. வின்சென்ற்

"வாழ்க தமிழினம் வாழ்க தமிழ் மொழி," என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. வின்சென்ட் அவர்கள். ஆசிரியர், சென்ற தேர்தலில் வவுனியாத் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராய் நின்றவர். வஞ்சகமற்றவர். மிக மெலிந்து காணப்படுகிறார். சாப்பிடுவது மிகக் குறைவு. நூல்கள் வாசிப்பதை தன் பொழுது போக்காகக் கொண்டுள்ளார். வரலாறு தெரிந்த நல்லாசிரியர்.

## மி. அருளப்பு கூஞ்ஞை

"தமிழ் வாழ்க" என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. அருளப்பு கூஞ்ஞை அவர்கள். மன்னார் மேற்கில் கிராமச்சங்க உபதலைவராயுள்ள இவர் மன்னார் அறப்போருக்கு மிக உதவியாக அமைந்தவர், தன் அறையும் தானுமாகவுள்ளார்.

மகளே! எமது உறவினராக ஒரே குடும்பத்தவராக மாறி விட்ட தடுப்புக் காவல் தியாகிகளைப்பற்றி எழுத மடல் "அனுமால் வால்" ஆகின்றது. மீதி அடுத்தமடலில்.

*உனது தந்தை,*

**புதுமைலோலன்.**


# தடுப்புக்காவலில் நாம் - 18

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம
**24-5-1961.**

**மகளே அன்பரசி!**

சென்ற மடலில் குறிப்பிட்டது போல இந்த மடலில் அறிமுகம் செய்யாத எமது தடுப்புக்காவல் குடும்பத்திலுள்ளோரை எழுதி முடித்துவிட எண்ணினேன். ஆனால் கடிதம் நீண்டுவிடும் என்ற காரணத்தினால் சிலரை அடுத்தவாரம் தள்ளி வைக்க வேண்டிவந்துள்ளது. கண்டிப்பாக அடுத்த கடிதத்துடன் அறிமுகம் செய்வது முடிவடைந்துவிடும்.

**வ. நா. தம்பிராசா**



**"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"** என்றெழுதிக் கைச்சாத்திட்டார். திரு. வ. நா. தம்பிராசா அவர்கள். சாம்பற் தீவுக் கிராமச் சங்கத் தலைவர். இளைஞராயிருந்தும் சாம்பற் தீவு மக்களின் நல்லபிமானம் பெற்ற இவர், குழந்தையுள்ளம் கொண்டவர், மிக நல்லவர். கட்சியில் நீங்காத பற்றும், எதையும் கட்சிக்காகச் செய்யும் பண்பும், உயிரைவிட இலட்சியமே பெரிதெனக் கருதும் வீர உணர்வும் ஒரு சேரக் கொண்டவர். எனது நல்ல நண்பராகிவிட்ட இவர், அடிக்கடி எனது அறை வருவார். பேசுவார்; கேலி செய்வார். பாடுவார்; திருமலைப் பிரதிநிதியின் அபிமானத்துக்குரிய இவர், சிறந்த மக்கள் தொண்டனுவார்.

**த. சின்னையா**

**"மொழியெங்கள் விழி"** என்றெழுதிக் கைச்சாத்திட்டார் செல்வன் சின்னையா அவர்கள். இவர் திருமலையைச்

சேர்ந்தவர். பாடசாலை மாணவர்- மாணவர் படையுடன் அறப் போர் செய்தமைக்காக இந்த மாணவனையும் எனது குடும்பத் தில் ஒருவராக்கி மகிழ்கின்றது சிறிமா அரசு. கரம் ஆடுவ தும், ஓடுவதுமாக உள்ளார்.

### கே. பி. சீதாராமன்

**''ஓடையிலே என் சாம்பல் கரையும் போதும் ஒண் தமிழே சலசலத்து ஓடவேண்டும்''** என்றெழுதிக் கைச்சாத்திட்டார் செல்வன் கே. பி. சீதாராமன் அவர்கள். இவரும் திருமலை யைச் சேர்ந்த ஒரு மாணவன். ஒரு கையை இழந்துவிட்ட இவரிடம், விளையாட்டுக்களில் முதன்மையாயிருக்கும் தன்மை உள்ளது. சமுதாய ஊடாட்டத்தில் சிறந்த இவரது வதனம் வாடியிருந்த நாளை நான் காணவில்லை.

### கே. ஸி. பாலச்சந்திரன்

**''நேர்மையும் நிதானமும் மேன்மை தரும்''** என எழு திக் கைச்சாத்தாக 'இடிமுழக்கம்' என இட்டார், திரு. கே. ஸி. பாலச்சந்திரன் அவர்கள். இவர் ஒரு திருமலை வழக்கறி ஞர். விடய அறிவுகொண்டவர், எந்த விடயத்தைப்பற்றியும் அறிந்து வைத்திருப்பவர். தன் அறையும் தானுமாக, வாசிப்பதி லேயே பொழுதையெல்லாம் கழிக்கின்றார் தமிழ்மக்களின் எதிர் காலம் பற்றிய எண்ணச் சுழலில் சிக்கிச் சிந்தித்த படியே இருப்பார். தன் சிந்தனைகளை மற்றவர்களிடம் நீட்டுகின்றார். நல்ல ரசிக உள்ளம் கொண்டவராக உள்ளார்.

### ந. இ. இராஜவரோதயன்

**''என் கடன் பணி செய்து கிடப்பதே''** என்றெழுதிக் கைச் சாத்திட்டார் திரு. ந. இ. இராஜவரோதயன் அவர்கள். தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலம் தொட்டுப் பாராளுமன்றப் பிரதிநிதி யாக இருக்குமிவர், திருமலை மக்கள் மட்டுமல்ல ஈழத்து மக்களின் அபிமானத்திற்கும் நேசத்திற்கும் உரியவர். பொறு மையும் பண்புடைமையும் அரசியலுணர்வும் இலட்சிய மூச்சும் கொண்ட இவர், திருமலை மக்களுக்குக் கிடைத்த ஒரு வைடூ

ரியம். தன்பணம், பிறர் பணம் என்று கருதாது தன் பணத்தை மக்கள் தொண்டுக்காக செலவு செய்யுமிவரது சேவையை என்றுமே திருமலை மக்கள் மறக்கமாட்டார்கள். பொதுமக்களின் உறவினன் போல, திருமலை முற்றவெளியில் அனந்த சயனம் செய்யும் கிருஷ்ணர்போலப் படுத்தபடி, வேண்டியன செய்யும் ஆற்றல் மிகக் கொண்டவர். பொய்ம்மையோ ஏமாற்றோ தன்னிடமில்லை என்பதை அவரது அழகு முகமே உணர்த்துமே. பல நூல்களை இங்கு வாங்குகின்றார்; ஆராய்கின்றார். ஓர் அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டியதன்மைகள் இவரிடம் நிறையக் காண்கின்றேன்.

## அன்ரனி

**''நீதியின் நிமித்தம் உபத்திரப்படுபவர் பாக்கியவான்கள்'',** என்றெழுதிக் கைச்சாத்திட்டார், திரு. ஏ. அன்ரனி அவர்கள். யாழ்ப்பாணம் குருநகரைச் சொந்த ஊராகக் கொண்ட இவர், சட்டக் கல்லூரி மாணவர். நல்ல ஆங்கிலப் பேச்சாளன்; திறமைசாலி. இங்குள்ளோருக்கு மிக உதவியாக அமைகின்றார். ஓடிஓடி மற்றையோருக்குத் தேவையானவற்றிற்கு ஆவன செய்கின்றார்.

## ரங்கநாதன்



**''ஒன்றாக வாழ்ந்த பனகொடை வாழ்வை மறக்கவே முடியாது.''** என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ரங்கநாதன் அவர்கள். இவர் திருமலையைச் சேர்ந்த வழக்கறிஞர். காதல் மனைவியின் அன்புபற்றியே எண்ணமிட்டபடி உள்ள இவர், நல்லவர். எப்போது விடுதலைகிட்டுமென ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்.

## ஜே. ஏ. பி. துரைநாயகம்.

**''தேமதுரத் தமிழ் ஓசை உலகெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்.''** என்று பாரதி குரலை எழுதிக் கைச்சாத்திட்

டார் திரு. ஜே. ஏ. பி. துரைநாயகம் அவர்கள். இவரும் வழக்கறிஞர். கட்சியிலிவரது குடும்பமே பற்றுக்கொண்டது. அமைதியும் கண்ணியமும் கொண்ட இவர், கட்சிப்பற்று நிறைந்து காணப்படுகின்றார்.

## ஆர். சந்திரபாலன்

**"எதையும் இனிப்பாகக் கொள்ளப்பழகுக,"** என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ஆர். சந்திரபாலன் அவர்கள். இவர் திருமலையைச் சேர்ந்த வழக்கறிஞர். தன்பாடும் தானுமாக நூல்கள் வாசிப்பதையே தனது பொழுதுபோக்காகக், கொண்டு அமைதியாகவுள்ளார்.

## சி. சிதம்பரப்பிள்ளை

**"தலைவர்களை விடச் சிறந்த அறிவாளிகளே இந்நாட்டின் முதுகெலும்பு"** என எழுதிக் கைச்சாத்திட்டார், திரு. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள். இவர் ஓமந்தை கிராமச் சங்கத் தலைவர். வவுனியா சிவசிதம்பரத்தை ஆதரிப்பவர். இலட்சியப் பற்றுக்காணப்படுகின்றது. தன் மனைவி மக்களைக். காணும் ஆவலும் காணப்படுகின்றது. நல்ல உள்ளம் நிரம்பிய இவர் எல்லாருடனும் நட்புறவுடன் நடமாடுகின்றார்.

## செ. இராசதுரை

**"கோழைகள், சோம்பேறிகள் சுதந்திரத்தின் நிழலில் கூட நிற்க முடியாதவர்கள்"** என வெழுதிக் கைச்சாத்தையுமிட்டார், திரு. செ. இராசதுரை, அவர்கள். மட்டக்களப்புப் பிரதிநிதியாய இவர் வீர உணர்வும், இலட்சியப் பற்றும் நிரம்பக் கொண்டவர், என்பதை நான் எழுதியா தெரிய வேண்டும்! எந்த மக்களும் அசையாது நின்று கேட்கக் கூடியதாகச் சொற்பொழிவு செய்யும் இவர்; பெரு நாவலன்; சொற்கொண்டல் என்பதை ஈழம் அறியும், மட்டக்களப்பில் தமிரசு விருட்சத்தை வளர்த்த பெருமையில் அதிக பங்கு இவருக்கே யுண்டு. எழுதுமாற்றல், பேசுமாற்றல் ஒருங்கே கொண்ட இவர் இங்கே சில வேளைகளில் ஒரே சிந்தையுடன் காணப்

படுகின்றார். ஏன் என்று தெரியவில்லையே. படிப்பது, சிந்திப்பது, நம்முடன் தாம் சிந்திப்பதை கலந்துரை செய்வது, பாடுவது, பந்தாடுவது, வானொலி கேட்பது, உறங்குவது, ஆகத் தன் பொழுதைக் கழிக்கின்றார். அடிக்கடி 'மாஸ்ரர் மாஸ்ரர், என என்னை அழைத்துப் பேசி வருகின்றார். இளம் வயதிலேயே மட்டக்களப்பு மண்ணில் இலட்சியப்பற்றையும், மொழிப் பற்றையும் எற்படுத்திய இவரை தமிழினம் மறக்க முடியுமா? தமிழை இனிமையாக்கிக் காட்டிய பெருமையும் இவரதே!

## அரியநாயகம்

**"நமது அவல நிலைக்கு எல்லாம் இன்று அதிகாரத்தில் இருப்பவர்கள் தான் காரணம் என்று சொல்லிவிட முடியாது, முந்திய ஆட்சியாளரும் முனைந்து நிற்கும் பதவி ஆசைக்காரர் களுமான குழுவினர், ஐக்கியம், தேசியம், என்ற போர்வைக்குள் வைத்திருக்கும் வஞ்சக வகுப்பு வாதமே முழுக்காரணம் ஆகும்"** என்று எழுதிக் கைச்சாத்திட்டார் அறப்போர் முன்னணித்தலைவர், அரியநாயகம் அவர்கள். கிழக்கு மாகாணத்திலுள்ள திருக்கோயிலைச் சொந்த இடமாகக் கொண்ட இவர். அறப்போர்ப் பணியை தமது வாழ்வுப்பணியாகக் கொண்டவர், மொழியுரிமைகிட்டுமட்டும், தாடியை வெட்டேன் எனச் சபதம் இட்டபடி தாடியுடன் காணப்படும் இவரிடம், மொழிப்பற்று மிக மிக அதிகமாகவுள்ளதைக் காண்கின்றேன். மேன் மாடியைவிட்டு விடுதலை கிட்டும்வரை இறங்குவது இல்லை எனச் சபதமுடன் உள்ளார். இவருக்கு உணவு இவரது அறைதேடி வருகின்றது, எப்போது மேன்மாடி வந்தாரோ அன்று தொட்டு மேன்மாடியை விட்டு இறங்குவது கிடையாது. விடுதலையின் அன்று மட்டுமே இறங்குவதாகக் கூறுகின்றார். மாலையில் ஒரு மணித்தியாலம் கீழே இறங்கும், சந்தர்ப்பம் இருந்தும், அதை அவர் விரும்பாது மேன்மாடியே சதமெனவுள்ளார். எதிலும் இலட்சிய வாழ்வை விரும்பும் இவர் எதற்கும் அஞ்சாத அடலேறு. கவியியற்றும் வன்மை கொண்ட இவர், சிறந்த இலக்கிய ரசிகர்மட்டும் அல்லாது, ஆய்வாளரும் கூட. புதுக்கண்ணோட்டமுடன் இலக்கியத்தைப் பார்க்கின்றார்; நல்லவர்; வல்லவர்; தமிழின் உயிர் போன்றவர்.

### வை. சிற்றம்பலம்

**"நல்லவனாக வாழ்ந்தால் மட்டும் போதாது வல்லவனாக வாழத்தெரிய வேண்டும்"** என்று எழுதிக் கையொப்பமிட்டார். திரு. வை. சிற்றம்பலம் அவர்கள். வவுனியா நெளுக் குளத்தில் வாழ்பவராகிய இவர், தமிழரசுக் கட்சியில் நீங்காத பற்றுக்கொண்டவர். ஆரம்பகாலந்தொட்டு கட்சித் தொண்ட ராகப் பணி செய்பவர்; அமைதியான போக்கும், எதையும் சிந்தித்துச் செய்யும் ஆற்றலும் கொண்டவர்.

### பி. ஆர். செல்வநாயகம்

"கைச்சாத்தை மட்டுமிட்டார் திரு. பி. ஆர் செல்வநாய கம் அவர்கள்," இவர் மட்டக்களப்பு நகரசபை உபதலைவர்; இளைஞர்; தாடிவளர்த்தபடி துள்ளித் திரிகின்றார். குழந்தைத் தனம் நிரம்ப உள்ளவர்.

### தா. சிவசிதம்பரம்

**"நண்ப! புதுமை கண்டு வியக்க, திறமை கண்டு களிக்க எடுக்கும் முயற்சிகளில் விழிப்புடன் இரு"** என எழுதிக் கைச் சாத்தையிட்டார் திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள். இவர் வவுனியாப் பிரதிநிதியாவர், எனது நெடுநாளைய நண்பன். எம். பி ஆவதற்கு முன்னமே ஒன்றாகி வாழ்ந்தவர்கள். நட் புரிமையுடன் இருந்தவர்கள், யான், ஹிங்குருக்கொடா அரசின் ர்கனிஷ்டபாடசாலை ஆசிரியராக இருந்தபோது, விவசாய உத்தியோகத்தருக்குரிய (Village cultivation) பயிற்சியும் ஹிங்குறக் கொடாவிலேயே நடந்தது. அப்பயிற்சிக்கு சிவசிதம் பரம் அவர்கள், வந்தார்கள். ஹிங்குருக் கொடாவில் தமிழர் மிகக் குறைவு. சில கடைக்காரர், சில உத்தியோகத்தர், அத் துடன் நாங்கள் மட்டுமே, எல்லோரும் ஒட்டுறவாக இருப் போம். சிவசிதம்பரம் அவர்கள் நல்ல ஒரு ரசிகர். புத்தகங்கள் படிப்பதில் மிக ஆவல் கொண்டவர், எழுதவேண்டும் என்ற ஆவலும் நிறைந்தவர். ஆகவே, புத்தகங்கள் படிப்பதில் பழகி னேம்; நண்பரானேம். ஒவ்வொரு மாலையும் என்னைக் கண்டு

பேசுவார். படம் பார்க்கப் போவோம். காடுகள் எல்லாம் சுற்று வோம். எந்தவித மறைப்பும் அற்ற நல்ல நண்பரானோம். அவ ரது பயிற்சி முடிந்து வெளியேறும்போது கூட கண்ணீருடன் பிரிந்தோம். பின்பு அடிக்கடி யாழ்ப்பாணத்தில் இருவரும் சந்திப்போம். இங்கிலேயில் அவர் வவுனியாப் பிரதிநிதியானுர் சுயேச்சை யாளராகவே பிரதிநிதியானுர். எமது கட்சியில் இல்லேயே என்ற வேதனேயே இருப்பினும், கொள்கைக்கு முதலிடம் கொடுப்பவன் யான், அதனுல் கடந்த தேர்தலில் அவரை எதிர்த்துப் பிரசாரம் செய்யவும் நேர்ந்தது. நட்புக்கும் கொள்கைக்கு மிடையில் போராட்டம் எனினும், நட்பில் எந்த விதத்திலும் குந்தகம் ஏற்படமுடியவில்லே. இங்கு தடுப்புக் காவலில் ஒன்ருக வாழ நேர்ந்துவிட்டது, வவுனியாவில் அறப் போர் செய்து மொழியுரிமை காப்பதில் தயங்கேன் என்பதை உறுதியாக்கி விட்டார் சிவசிதம்பரம் அவர்கள். இங்கு கூட வாதமிடுகின்ருேம். எங்கள் கட்சியின் கொள்கைபற்றி வாதாடு கின்ருேம். முன்பு எப்படி எனது நல்ல நண்பராகக் காணப் பட்டாரோ, அப்படியே இப்பொழுதும் காணப்படுகின்ருர். எந்த விதமாறுபாட்டையும் காணவில்லே. முன்பு போலவே, பேசு கின்ருர்; நடக்கின்ருர்; தாடிவளர்க்கின்ருர். ஓவியங்களேத் தனது அறையில் தீட்டுகின்ருர். மகாத்மா காந்தி, புத்தர்; வ. உ. சி, பாரதியார். யேசு ஆகியோரை பென்சிலினுல் உயி ரோவியமாக்கியுள்ளார். கட்சி பேதம், காட்டாது, நட்பு உரிமை யுடன் எல்லோருடனும் பழகுகின்ருர். இவருக்கு நல்ல எதிர் காலம் உண்டு, என்பதை யாரும் மறக்கமுடியாது.

உனது அன்பு அப்பா
**புதுமைலோலன்.**

# தடுப்புக்காவலில் நாம் - 19

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
25-5-61.

மகளே அன்பரசி!

சென்ற மடலில் குறிப்பிட்டதுபோல இந்த மடலில் அறிமுகம் செய்யாத - எமது தடுப்புக்காவல் குடும்பத்திலுள்ளோரை எழுதி முடித்துவிட்டே மற்றவற்றை எழுத உள்ளேன்.

## மு. மாணிக்கம்

மட்டக்களப்பைச் சேர்ந்த பெரியார் மு. மாணிக்கம் அவர்கள், முன்னுள் அரசாங்க ஊழியர். இவர் கைச்சாத்தை மட்டுமிட்டார். அடுத்த தமிழரசு செனட்டராகப் போகுமிவர், பெருமையான போக்குடையவர். யாரும் மதிக்க நடப்பவர், நல்லவர். செல்வி கலாமாணிக்கத்தைத் தனது மகளாகக் கொண்டவர். கலா மாணிக்கம் பெண் பேச்சாளரிடையில் சிறந்த ஒருவர் அல்லவா? எதிர்காலம் கட்சி செய்ய வேண்டியவை பற்றிய சிந்தனையிலேயே தனது காலத்தைப் போக்குகின்ருர். இவருக்கும் அரசியலில் நல்ல எதிர்காலம் உண்டு.

## வி. ஏ. அழகக்கோன்

**''பாடப் பாவுண்டு படிக்க நல்நாவுண்டு. கலை கலாச்சாரமுண்டு, மொழியற்று வாடவகையேன்? சிறை கிடந்தாலும், மலையைப் பெயர்த்தெறியும் வலியுடைய மறத்தமிழா! வீரமுடன் விரைந்தெழுவாய், மகிமையுடன் நம் நாடு சிறக்க வேண்டும், அறம் பொங்கி உலகெலாம் உய்ய பகைமை யில்லாப் பண்புடன் என்றும் வாழவேண்டும். தீந்தமிழ் காவியங்கள் படிப்பதுடன் இயற்றவும் வேண்டும். பாந்தமுடன் தமிழோசை தரணியெலாம் ஒலிக்கவேண்டும். இனிமையுடன் தமிழ்மக்கள் இசைந்து வாழ தனியரசு தந்தருள்வாய் நற்பரனே!''** என நீளமாக எழுதிக் கைச்சாத்திட்டார். திரு.

வி. ஏ. அழகக்கோன் அவர்கள். இவர் மன்னுர்ப் பிரதிநிதி; வழக்கறிஞர்; தமிழரசுக் கொள்கையை மன்னரில் பரப்பிய இவர்; கொள்கையில் நீங்காத பற்றுடையவர். அன்புள்ளமும் கடவுள் பக்தியும் ஒருங்கேகொண்டஇவர், மேன்மாடி யெங்கும் கேட்கப் பேசுகின்ருர்; சிரிக்கின்ருர்; ஆராதனையிலதிக நேரத்தைச் செலவு செய்கின்ருர்.

## பொ. மாணிக்கவாசகம்

**''சத்தியம் என்றும் வெல்லும்''** என எழுதிக் கைச்சாத்திட்டார் பொ. மாணிக்கவாசகம் அவர்கள். இவர் கற்குடாப் பிரதிநிதி; மிக அமைதியானவர்; அதிகம் பேசமாட்டார். ஆனல் செயல்வீரர், எதற்கும் ஒரு புன்முறுவல்; அது மற்றவர்களைக் கவரக்கூடியது. எந்த விடயத்திலும் ஆழ்ந்த தெளிவுகொண்டு காணப்படுகின்ருர்; எல்லோரது மதிப்பையும் பெற்றுத் திகழ்கின்ருர்.

## ஞா. லூக்கஸ்

**''எதையும் தாங்கும் இதயம் வேண்டும்''** என எழுதிக் கைச்சாத்தையு மிட்டார் திரு. ஞா. லூக்கஸ் அவர்கள். கட்சிப்பற்றும், செயற்றிறனும் ஒருங்கே அமையப்பெற்ற இவர் திருமலையில் வாழ்ந்தாலும் யாழ்ப்பாணத்தவரே. அமரர் ஏகாம்பரத்தின் அபிமானத்துக்குரிய இவர், பொறுப்புடனேயே எதையும் பேசுகின்ருர். கட்சியில்நீக்கமற்ற பற்றுக்கொண்டு திகழுமிவர், படிப்பதும் சிந்திப்பதுமாக உள்ளார். இங்கே எனது நல்ல நண்பராகிவிட்டார். அடிக்கடி வந்து மனம் திறந்து பேசிகின்ருர்.

## சி. இராஜதுரை (ராஜு)

**''தமிழன் உயர்வுக்காக தலைபோவ தென்றுலும் தயங்காதே தமிழா''** என எழுதிக் கைச்சாத்திட்டார், ராஜு என நாமமழைக்கும் திரு. சி. இராசதுரை அவர்கள். இவர் திருமலைவாசி, திருமலை நகராண்மைக்கழக உறுப்பினர். நல்ல தேகக்கட்டுடைய இவரது மனமும் பண்பானதே. கட்சியில் நீங்காத பற்றுடன் திகழ்கின்ருர். அமைதியாகப் பெருமையாக இங்கே வாழ்கின்ருர். அண்மையில் மணமுடித்தவராகையால். புதுமனைவி நினைவு வராமல் போகமுடியுமா என்ன? எனினும் நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் எதையும் தாங்கச் செய்கின்ற தென்கிருர்.



## பா. நேமிநாதன்

''வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழினம்'' என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. பா. நேமிநாதன் அவர்கள். இவர் திருமலை வழக்கறிஞர். முன்னாள் நகராண்மைக் கழகத் தலைவர். 'ருன்ஸிஸ்டர் றேடியோ'வுடன் திரிகின்றார், நல்ல நூல்களைப் படிப்பதில் பொழுதைக் கழிக்கின்றார், சிகரட்டாக ஊதித்தள்ளுகின்றார். எல்லோருடனும் பேசிப் பேசி மகிழ்ந்து திரிகின்றார்.

## ம. கிருபைராசா

''செய் அல்லது செத்துமடி'' என்றெழுதிக் கைச்சாத்திட்ட செல்வன் ம. கிருபராசா. ஓர் மட்டக்களப்பு மாணவன். வஞ்சகமற்ற நல்லபிள்ளை. மட்டக்களப்புப் பிரதிநிதிமேல், அண்ணு அண்ணு என்றழைத்துப் பாசமுடன் நடக்கின்றார். நல்ல திறமைசாலி. எதிர்காலத்தில் மின்னப்போகிறவர் கிருபராசா. எனது அறை வந்து நெடுநேரம் தங்கள் ஊர், கொள்கையாளர், எழுத்தாளர், தன் ஆசிரியர் எஸ். பொன்னுத்துரை பற்றியெல்லாம் பேசியபடியே இருப்பார்.

## எம். திருச்செல்வம்

கைச்சாத்தைமட்டுமிட்டார் திரு. எம். திருச்செல்வம் அவர்கள். முன்னாள சொலிஸிற்றர் ஜெனரலான இவர், கட்சியிலும் செல்வாவிலும் நீங்காத பற்றுடையவர். மலைநாட்டில் நம் கொள்கை பரப்பப்படல் வேண்டும் என்பதுபற்றியே சிந்திக்கின்றார். தமிழ் நூல்கள் படிக்கின்றார். விளங்காத தமிழ்ச்சொற்களை பருத்தித்துறைப் பிரதிநிதியிடமும், என்னிடமும் கேட்டுப் படிக்கின்றார். வீர உணர்வும், கட்சிப்பற்றும் இரு கண்களாகக் கொண்ட இவர், சிறந்த செயல்வீரர். இனம் உயர தன்னுலானதைச் செய்யவேண்டுமென்பதே இவரது கனவு.

## சி. மு. இராசமாணிக்கம்

''தமிழன் என்று சொல்லு தலைநிமிர்ந்து நில்லு'' என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. சி. மு. இராசமாணிக்கம் அவர்கள். இவர் பட்டிருப்புப் பாராளுமன்றப் பிரதிநிதியாவதுடன் தமிழரசுக்கட்சியின் தலைவருமாவர். சிந்தனையில் இட்டே எதையும்

முடிவுகாணும் இவர், எதற்கும் உணர்ச்சிவயப்படுவதும் கிடையாது. ஒரு கட்சித்தலைவருக்குரிய தன்மைகள் நிறைய இவரிடம் காணப்படுகின்றன. எதையும் அதிகநேரம் சிந்தித்தபின்பே முடிவுக்கு வருகினறார். நேர்மையாளராகவும், கண்ணியமிக்கவராகவும், பெருந்தன்மைகள் நிறையக் கொண்டவருமாகத் திகழ்கின்றார். கட்சித்தலைமைக்குக் கிடைத்த இன்னோர் செல்வநாயகம் இவர். கிழக்குமாகாணம், ஒன்றுபட்ட தன்மையுடன் என்றுமே திகழ அயராது பாடுபடுபவர் இவர்.

## செ. மகாலிங்கம்

**''என்றும் சுதந்திரம் என்றும் தமிழ்மொழி''** என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. செ. மகாலிங்கம் அவர்கள். சுதந்திர உணர்வும், மொழிப்பற்றும் கொண்ட இவர், என்றும் களிப்புடன் காணப்படுகின்றார். பண்பாளர், மதித்து நடப்பவர், இவர் திருமலையைச் சேர்ந்தவர்.

அன்பு! எமது தடுப்புக்காவல் குடும்பத்தினரைப்பற்றி யெல்லாம் எழுதிவிட்டேன்.

இன்று எட்டுப்பேர் விடுதலை பெற்றனர். இதில் உன் அப்பாவுமிருப்பார் என எண்ணுகின்றாயா? இல்லையடி மகளே இல்லை!

கந்தையா வைத்தியநாதன், வழக்கறிஞர் சம்பந்தன். வழக்கறிஞர் ரங்கநாதன், மட்டக்களப்பு பட்டினசபைத் தலைவர் திசவீரசிங்கம், கணேசனாதன், கிருஷ்ணக்குட்டி, வழக்கறிஞர் பாலச்சந்திரன், யாழ் மேயர் துரைராசா, ஆகியோரே விடுதலை பெற்றனர்.

எண்மரும் கண்ணீருடன் பிரியாவிடை பெற்றனர். அவர்களைப் பாடிப் பிரியாவிடை கொடுத்தனுப்பினோம். ''வாழ்க தமிழ் மொழி'' என்ற பாரதி பாடலையும், ''திராவிடப் பொன்னாடு' என்ற பாட்டையும் உருக்கமுடன் இராசதுரையும், மங்கையர்க்கரசியும் பாட எண்மரும் விடைபெற்றுப் பொலிஸ் வண்டியில் போனார்கள். எழுபத்திநான்கு பேராகஇருந்த நாம், அறுபத்தி ஆறு பேராகிவிட்டோம்.

நாளை மீதி எழுதுகின்றேன்—

உனது அன்பு அப்பா,

**புதுமைலோலன்**

## தடுப்புக்காவலில் நாம் - 20

தடுப்புக்காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
27-5-1961

**மகளே அன்பரசி!**

நேற்றுத் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்கள் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். மலாயாப் பழைய மந்திரிகளுள் ஒருவராயிருந்த திரு. சரவணமுத்து அவர்கள், கட்சிப் பிரமுகர்களுடன் கலந்து ஆலோசிக்கப் போவதாக அக்கடிதத்தில் எழுதியிருந்தார். இன்று மாலை திரு. சரவணமுத்து வருவதெனவும் அம்மடலில் எழுதப்பட்டிருந்தது.

நேற்றுமாலை ஏழு மணியளவில் அமெரிக்க செய்திப் படமொன்று காட்ட ஒழுங்கு செய்தனர். 'ஒரு மாணவனை எப்படித் தகுதியாக்கல்' என்பது பற்றியபடம் அது. ஒன்றரை மணித்தியாலம்வரை அப்படம் நடைபெற்றது.

இன்று காலை பத்துமணியளவில் கல்முனை பாராளுமன்றப் பிரதிநிதி ஜனப் அஹமது அவர்கள் எமது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் இத்தனைநாளும் அவரது வீட்டிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இன்றுமாலை சரவணமுத்து அவர்களுடன் ஆலோசிப்பதற்காகவும் இருக்கலாம்; இங்கு கொண்டுவரப்பட்டுள்ளார். நான் அஹமது அவர்களை முதன் முறையாக இப்போதுதான் நேரில் சந்தித்தேன்; பேசினேன், வயதில் குறைந்த வாலிபராகிய இவர் அரசியலுக்கும் புதியவர் என்பது புலப்படுகின்றது. ஒரு கல்லூரி மாணவன் போன்று தோற்றமளிக்கின்றார். இஸ்லாமியத் தலைவர்களில் பலர், நிரந்தரமான கொள்கையுடன் அரசியல் வாழ்வில் நடந்து கொள்ளாத படியினால், யாரிலுமே சந்தேகப்படக்கூடிய தன்மை இன்றைய ஈழத்து இஸ்லாமிய தலைவர்கள் மேல் ஏற்படுவது இயல்பு. ஆனால் அஹ

மது இளைஞர்; எதிர்காலம் இருக்கின்றது. எனவே, கொள்கையை மதிக்கும்பண்பு இருக்குமென்றே யான் நம்புகின்றேன். காரியப்பரையும் முஸ்தபாவையும் சந்தித்த கட்சி தமிழரசுக்கட்சி. அனுபவப்பாடம் விளக்கமுறித் தீட்டத்தானே செய்யும். காலம் விடை தரும்!

## சரவணமுத்துவின் சமரச முயற்சி

இன்றுமாலை ஆவலுடன் எதிர்பார்த்தோம். மலாயா முன்னாள் அமைச்சர் திரு. சரவணமுத்து, தமிழரசுத் தந்தை செல்வநாயகம், உடுப்பிட்டி பிரதிநிதி சிவசிதம்பரம் ஆகியோர் மாலைவந்தனர். திரு. சரவணமுத்து அவர்கள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா; கவர்னர் ஜெனரல் சாம். பி. சி. பெர்னாண்டோ ஆகியவர்களைத் தாம் சந்தித்துப் பேசிய விபரங்களைக் கூறினார். இன்றைய அரசியல் நெருக்கடி தீரவும், மொழிப்பிரச்சினைக்கு ஒரு முடிவு காணவும் திரு. சரவணமுத்து அவர்கள் முயன்றுள்ளார் என்பதை அவரது பேச்சிலிருந்து அறியக்கூடியதாயிருந்தது. ஒப்பந்தமெழுதி, உறுதிதந்து, நட்டாற்றில் விட்ட சிங்கள ஆட்சியை உணர்ந்த கட்சியாளராய நாம் அவசரப்பட்டு எதையும் ஏற்க ஆயத்தமாக மாட்டோமே! சரவணமுத்து அவர்கள் கொண்டுவந்த ஆலோசனையின் தொகுப்புக் கீழ்வருமாறு -

1. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக அந்தஸ்துடன் திகழும்.

2. நீதிஸ்தலமொழியும் தமிழ் பேசுமினத்திற்குத் தமிழாக அமையும். பதிவு செய்தல் (Record) மட்டும் சிங்களமாகவே அமையும்.

3 சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்கு வந்த 1956-ம் ஆண்டுக்குப்பின்பு, உத்தியோகத்தில் சேர்ந்தோர் யாவரும் சிங்களம் படித்தல்- 1956-க்கு முன்பு அரசாங்க ஊழியரானோர் விரும்பினால், ஆண்டு சேவையைக் கூட்டி விலகலாம். 1956-ம் ஆண்டுக்குப் பிந்தியோர் விரைவில் குறிக்கப்பட்ட காலத்துள் சிங்களத்தில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

4. பிரதேசசபை ஏற்படுத்தலுக்கு ஒரு "கமிஷன்" தெரிவுசெய்தல்.

மேற்கூறிய நான்கு திட்டங்களையும் திரு சரவணமுத்து அவர்கள், தான்பிரதமருடனும் மற்றும் பலருடனும் பேசி முடித்ததாகவும், சம்மதம் அளித்ததாகவும் கூறினார். நீதிஸ் தலத்தில் பதிவை சிங்களத்தில் வைத்தலை ஒரேயடியாகத் தமிழினம் எதிர்த்தது; எதிர்க்கும் என்றே நாமும் கூறினோம். இது தவிர சத்தியாக்கிரகத்தின் போது நாம் கோரிய குறைந்தபட்சக் கோரிக்கையை நினைவுறுத்தினோம். அக் கோரிக்கையைக் கூடத் தர எண்ணாத ஆட்சிபீடத்திடம் வேறு எதையும் கையேந்திப் பெற விரும்பவில்லை என்றோம்.

மேற்குறிப்பிட்டவற்றிற்குச் சம்மதமென்றால், இரண்டு மூன்று நாட்களுக்குள் விடுதலையுடன் அவசரகாலமும் நீக்கப் பட ஏதுவுண்டு என்றார் சரவணமுத்து. ஆயுள் பூராவும் தடுப்புக்காவலில் இருக்க நேர்ந்தாலும்; எமது கோரிக்கையை விட்டுக் கொடுக்க ஆயத்தமாய் இல்லை என்றோம். ஏகமன தாக — சரவணமுத்து அவர்களது கோரிக்கையில், எங்களது குறைந்தபட்ச கோரிக்கையை முன்வைத்துப் பல திருத் தங்கள் செய்து பேசினோம். ஆனால் அதை ஆட்சி பீடம் ஏற்காது எனவும், தெண்டிப்பதாகவும் சரவணமுத்து அவர்கள் கூறினார்.

## பழைய பல்லவியே

1958-ம் ஆண்டு ஆவணிமாதத்தில் நிறைவேறிய தமிழ் மொழி விசேட உரிமைகள் மசோதா கூறுவதைத் தானே கிட்டத்தட்ட சரவணமுத்து அவர்கள் கூறுவதுபோல, பெரும் பாலும் பட்டது எனக்கு.

—"இலங்கை பூராவும் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்விவரை தமிழ் மாணவருக்கு தமிழே போதன மொழியாயிருக்கும். தமிழில் படித்தோர் அரசாங்க உத்தி யோகங்களுக்குத் தமிழில் பரீட்சை எழுதலாம்.

மக்கள் அரசாங்கத்தோடு கடிதப் போக்கு வரத்துக்களைத் தமது சுய மொழிகளில் நடாத்தலாம்.

வடக்குக் கிழக்கு மாகாண ஸ்தல ஸ்தாபனங்கள் தமது கருமங்களைத் தமிழில் நடாத்த முடியும், எந்த அரசாங்கக் காரியாலயங்களுடனும் தமிழிலேயே பதில் பெறலாம். இது சட்டமாகிவிட்ட பின்பு, சரவணமுத்து அவர்கள் கேட்டவற்றையும் சேர்த்து எண்ணிப் பார்க்கும்போது யாவும் கண் துடைப்பு என்பதை தெள்ளிதில் உணர முடிகிறது.

யாம் கோரிய குறைந்தபட்சக் கோரிக்கை கூட ஆட்சியினர் 1958-ல் உண்டாக்கிய சட்டத்தை சிறிது விரிவு படுத்தி அமைக்கின்றது. இது நியாயமானதும் கூட.

## நமது கோரிக்கை

நாங்கள் கேட்ட குறைந்தபட்சக் கோரிக்கையையும் சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன். அப்போது தான் பிரச்சனை புரியும்.

—"வடக்குக் கிழக்கு மாகாணங்கள் எல்லா விவரங்களையும் தமிழில் செய்தல். எல்லாத் தஸ்தாவேஜுகளும் கூடத் தமிழிலே இருக்கவேண்டும்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் யாவும் தமிழிலும் நிறைவேற்றப்படல். நீதி மன்றப் பதிவுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழில் இருத்தல்.

தமிழ் மக்கள் எங்கிருப்பினும் அரசாங்கத்துடன் தமிழில் தம் தொடர்புகள் வைத்திருக்கக் கூடிய உத்தரவாதம்.

பிரதேசசபை ஆலோசனையை விரைவுபடுத்தல் "குறைந்தபட்சக் கோரிக்கையையும்" 1958-ல் நிறைவேறிய தமிழ மொழி விசேட சட்டத்தையும், சரவணமுத்து அவர்கள் கோரிக்கையையும் ஒப்பு நோக்கி எண்ணிப்பார்க்க வேண்டியது எங்கள் கடமையாகும், அரசாங்கம் எங்கே நிற்கின்றது? நாங்கள் என்ன கோருகின்றோம்! ...... என்பதை அப்போது தான் புரிய முடியும்.

## காலம் மாறும்; உண்மை மடிவதில்லை

தமிழ்மொழி உரிமையைக் கொடுப்பதை வழு என எண்ணி விட்ட, இந்த ஆட்சியா நமக்கு உரிமைதர எண்ணும்! காலம் மாறும் மகளே! காலம்மாறும்! உண்மைமடிவதில்லை! உரிமை பறிக்கக்கூடியதா? — அதைப்பறிகொடுக்கத் தமிழினம் ஆயத்தமா? அதனாலேயே, 'ஆயுள் பூராவும் மேன்மாடியே எமக்கு சாஸ்வதமெனினும் கூட தமிழினத்தை விற்க முன்னைய தலைவர்கள் போலநாம் ஆயத்தமாயில்லை' நாங்கள் தமிழரசுக் கட்சிப் பாடிவீட்டில் உருவாக்கப்பட்ட கொள்கையாளர்கள். உயிரைவிட மானத்தைப் பெரிதாக மதிக்கும் பதவியாசையில்லாத தலைவர்கள் கட்டி எழுப்பிய எஃகுக் கோட்டையல்லவா எமது தமிழரசுப் பாசறை. மகளே! சரவண முத்து போலப் பல பெரியார்களை ஆட்சிபீடம் அனுப்பி எமது கோரிக்கையை திசை திருப்ப எண்ணலாம். தடுப்புக் காவலில் இருந்து விடுதலை பெறுவதற்காக, நாம் விட்டுக் கொடுக்கக் கூடுமென்று அரசாங்கம் எண்ணலாம். ஆனால் அரசாங்கம் எங்களைப்பற்றித் தப்புக் கணக்குப் போடுகின்றது. நாட்டு விடுதலையே எங்களுக்கும் விடுதலையாகும்.

சரவணமுத்து அவர்கள் கட்சியாளரைச் சரியாக உணர்ந்திருப்பார். இதைப்போய்ப் பிரதமருக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் கூறட்டும்.

இரவு ஏழரை மணியளவில் சரவணமுத்து அவர்களும், செல்வாதம்பதிகளும், சிவசிதம்பரம் அவர்களும் விடை பெற்றுப் போனார்கள்.

மகளே! 29-5-61 யான் கொழும்பு போகவுள்ளேன். இல்லையில்லை, கொழும்பு கொண்டுபோவர். 'ஏனப்பா? எதற்காக?' எனநீ கேட்பது கேட்கின்றது. அடுத்தமடலில் எழுதுகின்றேனே!

உனது அன்பு அப்பா,
**புதுமைலோலன்.**

தடுப்புக்காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம;
*29-5-1961*

மகளே அன்பரசி!

நேற்று உனது அம்மாவின் மடல் கிடைத்தது. "நாற்பது நாட்கள் ஹோமகம மேன்மாடியில் இருக்கின்றீர்கள். 'நல்ல ஒரு காரணமே என்னைச் சிறைக்கு அழைக்கின்றது மணி' என பொலிசார் கைதுசெய்யும்போது கூறிச்சென்றீர்கள்! அக்கூற்றை என்னால் மறக்கமுடியவில்லை. எனினும் ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொருநிமிடமும் உங்கள் எண்ணத்திரள்களை ஏந்தி இதயபாரத்தை ஏற்படுத்திவிடுகின்றனவே. 'அப்பா! அப்பா!' எனச் செல்லமாக எங்கள் செல்வ மகள் அன்பரசி கூப்பிடும்போது, அவ்வொலி உங்களை அடையவில்லையா? நீங்கள் போகும் போது இருந்ததோற்றத்தில் எங்கள் மகன் அன்பழகன் இன்றில்லை. பொக்கைவாய் திறந்து சிரிக்கிறான்; காலையசைத்து ஒலி எழுப்புகிறான். அன்பழகனின் ஆரம்ப வளர்ச்சி நேரத்தில், தாங்கள் பக்கமில்லையே என்பதை எண்ண, வேதனைதானே உண்டாகும். சிலர் விடுதலை பெறுகின்றனர் என வானொலியும் பத்திரிகையும் கூறின. சிலவேளை தாங்களும் வரலாமென கற்பனை செய்தேன். கற்பனை கற்பனையாகவே உள்ளது. பிரதமர் சிறிமாவுக்கும் மூன்று குழந்தைகளுண்டே. தாய்

மையுணர்ச்சியிருக்க வேண்டுமே! உரிமையையும் பறித்து, எத்தனை குடும்பங்களைப் பிரித்து வைத்து மகிழ்கின்றார். ஒரு பெண்ணுக்கு இது தெரியவில்லையா? ஈழநாட்டின் சாபக்கேடுதான்; போகட்டும். இந்த அநியாய ஆட்சிபீடம் இன்னும் எத்தனை நாட்கள், மேன்மாடியில் அடைத்து வைப்பார் எனவும் பார்த்துவிடுவோமே......'' இந்தக் கருத்துப்பட உன் அம்மா எழுதியிருந்தார். இம்மடலை இரகசிய பொலிஸ் பகுதி எப்படி அனுமதித்தது என்பது புதுமை. இம்மடலைப் படித்து அனுமதி கொடுப்பவரும் யாரோ ஒரு தமிழராகத்தானே இருக்கவேண்டும். தமிழனிடம் தமிழன் என்ற உணர்ச்சி இல்லாமலா போகமுடியும்.

இம் மடல், என் உடலை மேன்மாடியிலிருத்தி, உள்ளத்தை உங்கள் அருகே கொண்டுவந்து விட்டது. பின்பு எண்ணம்......எண்ணம்......எண்ணம்! உன் அம்மா, நீ, உன் தம்பி அன்பழகன் யாவரும் வந்தீர்கள்.......பின்பு பெருமூச்சுமட்டுமே பறந்தது. மகளே! எதையும் தாங்கும் இதயம் வேண்டுமாமே!......மகிழ்வாக இருங்கள். ஓடிவரும்நாள் வராமல் போகாதடா.

கொழும்புக்குச் சென்றேன்

சென்ற மடலில் கொழும்புஅழைத்துப்போவர் என எழுதினேனல்லவா? உன் அப்பா ஓர் ஆசிரியர் அல்லவா? ஆகவே பாடசாலைக்குப் போகவிடாது தடுத்து வைத்திருப்பதால்—இந்த நாட்கள் எந்த லீவாகக் கருதப்படும் என்பதே தெரியவில்லை. ஏன் பாடசாலைக்குப் போகவில்லை

என்பதை அறியத்தரவேண்டியது எங்கள்கடமை தானே! இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குப் போகமுடியாமையை அறிவித்தோம். அந்த அறிவித்தலின் படி எம்மை அழைத்திருக்கின்றனர் இன்று. என்னையும் திருமலையைச் சேர்ந்த ஆசிரியர் சிவகுரு அவர்களையும் அழைத்தனர்.

காலை எட்டுமணியளவில் என்னையும் ஆசிரியர் சிவகுரு அவர்களையும் பொலீஸ் ஜீப்பில் ஏற்றினர். ஜீப்பின் முன் ஒரு உதவிப் பொலீஸ் அதிகாரி, ஜீப்பில் எங்கள் அருகே துப்பாக்கியுடன் ஒரு பொலிஸ். ஜீப் எங்கள் முகாமை விட்டுப் புறப்பட்டது. இராணுவ வீரருக்குக் கட்டும் புதிய பெரிய கட்டிடங்கள் இருமருங்கும் காணப்பட்டன. ஆட்சியினர் இராணுவத்திற்குச் செய்யும் செலவை அறியமுடிகின்றது எங்கும் ஒரே கட்டிட மயம். இடைக்கிடை இராணுவ காவலிடங்களில் ஜீப் நிற்கும். பொலிஸ் அதிகாரி கைச்சாத்திட்டே சென்ருர்.

விடுதலை வேட்கை.

பனுகொடை ஊடாக ஜீப் ஓடுகின்றது. இருபுறமும் ஆவலுடன் கடைகளை, வீடுகளைப் பார்த்தோம். சுதந்திரமாகச் செல்லும் மக்களைக் காணக் கொஞ்சம் பொருமை உண்டாகத்தான் செய்தது. அதோ ஒருவர் சைக்கிளில் உல்லாசமாகச் செல்கின்ருர்; அதேபோன்று யாழ்ப்பாணத் தெருவில் யானும் போன எண்ணங்கள் முட்டுகின்றன.

அதோ ஓர் மோட்டார் வண்டி வேகமாக பறக்கின்றது. அதேபோன்று யானும் போன சிந்தனை உடைப்பெடுக்கின்றது. அதோ ஒரு தந்தை, அவர் கரத்திலே ஒரு குழந்தை, பக்கத்தே நடந்தபடி இன்னோர்பிள்ளை. அத் தந்தை யானுகின்றேன்......கரத்தில் அன்பழகன், பக்கத்தே நடந்தபடி நீ. இப்படியான எண்ணச் சிலம்பம் — ஹோமகம ஊடாக ஜீப் ஓடுகின்றது. அவிசாவலையில் இருந்து கொழும்பு செல்லும் பெரிய தெரு இது, வண்டிகள் போவதும் வருவதுமாகவுள்ளன. ஒரே சனநெரிசல், வண்டிகளின் கும்பல். வந்துவிட்டோம் கொழும்பு மாநகரம். எத்தனை நாட்களுக்குப் பிறகு பல மனித முகங்களைப் பார்க்கின்றோம். வாகனங்களை, அது செல்லும் அழகை, கடைகளை, அங்குள்ள பொருட்களை எல்லாம் பார்க்கின்றோம். பொலீசாரின் பாதுகாப்பில் போகும் எங்களையும் சில கண்கள் பார்க்கின்றன. ஏதோ குற்றம் செய்தமைக்காக பொலிசார் பிடித்துப் போகின்றார்களாக்கும் என அக் கண்களின் சொந்தக்காரர்கள் எண்ணியிருப்பர். காலை பத்துமணிக்கு பதினைந்து நிமிடங்கள் வரை உண்டு.

சொலிசிற்றர் ஜெனறலுடன் சம்பாசணை

கொழும்பு சொலிசிற்றர் - ஜெனரல் கந்தோர் அருகே, ஜீப் வந்து நின்றது. முன்னே பொலிஸ் அதிகாரி, இடையே யானும் சிவகுருவும் போகப் பின்னே துவக்கை நீட்டியபடியே பொலிஸ் காவலர். கந்தோருக்குள் நுழைந்தோமா? கந்தோரில் வேலைசெய்வோர் கண்கள்

ஆவலுடன் இந்தக் காட்சியை காண் கின்றன. அக்கண்களிலே சில தமிழ்க் கண்கள்—தமிழ்க் கண்களிலும் இரண்டு கண்கள் என் கண் களைப் பார்க்கின்றன. என்ன ஆச்சரியம்! எனது ஊர்த் தோழனின் கண்களல்லவா? அக் கண்க ளின் சொந்தக்காரனைப் பார்த்தேன். யான் எண் ணிய அதே அவர் பேச வருகின்றார்......பொலிஸ் அதிகாரி விடுவாரா என்ன? நாம் தடுப்புக்கா வல் கைதிகளல்லவா?

கண்கள் பேசுகின்றன. கலங்கிவிட்ட கண்க ளாகின்றன. சீ! இதற்கெல்லாம் கண்ணீர் விடு வதா? என்றால் சிரிக்கவே முடிந்தது. லிவ்ற்றில் ஏற்றுகின்றனர். பக்கத்தே அப்போதும் பொ லிஸ் அதிகாரியும், பொலிசும்; — சொலிசிற்றர் ஜெனரல் அலுவலகம். முதல் ஆசிரியர் சிவகு ருவை அழைத்தனர். அறையுள் பொலிஸ்அதிகா ரியுடன்போனார், எனக்குக்காவலாகமற்றப்பொ லிஸ் நின்றார். இருபது இருபத்தைந்து நிமிடங் களின் பின்பு ஆசிரியர் சிவகுரு முறுவலுடன் வந் தார். அடுத்து என்னை அழைத்தனர். சொலி சிற்றர் ஜெனரல் சிறிமானே நடுவே உட்கார்ந் திருக்கச் சூழவர இருவர் உட்கார்ந்திருந்தார் கள். எமது விசாரணையைப் பதிவு செய்ய ஓர் பெண்லிகிதரும் இருந்தார்.

சிறிமானே அவர்களே யாவற்றையும் கேட் டார். அவற்றுக்கெல்லாம் பதில் கூறினேன். உள்ளதை உள்ளபடி கூறினேன். சொலிசிற்றர் ஜெனரல்:- ''புதுமைலோலன் என்று சொல்லப் படுகின்ற கந்தையா கந்தசாமி நீங்கள்தானே!''

நான்: "ஆம்"

சொ. ஜெ : நீங்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியில் செயற்குழு அங்கத்தவரல்லவா?

நான்: "ஆம்"

சொ. ஜெ. : நீங்கள் கட்சியில் நிரந்தர அங்கத்தவரா?

நான்: "உண்மை"

சொ. ஜெ. : "கட்சிக்கு வருடாவருடம் சந்தா கட்டும் அங்கத்தவர்தானே"

நான்: "அப்படியில்லாதுவிட்டால் செயற்குழுவில் அங்கம் வகிக்க முடியாதே"

சொ. ஜெ. : நீங்கள் கட்சியின் பிரதான பேச்சாளருள் ஒருவர் அல்லவா?

நான்: "கட்சிக் கொள்கையில் நம்பிக்கை உண்டு. அதை மக்களுக்கு விளங்கப் பேசி வருபவன்."

சொ. ஜெ: "சத்தியாக்கிரகத்தின்போது வகுப்புத் துவேசமுடன் சில மேடைகளில் பேசி, மக்களைச் சத்தியாக்கிரகம் செய்யத் தூண்டியுள்ளீர் - மெய்தானே! உங்களது பேச்சுக்கள் யாவும் பதிவுசெய்யப்பட்டு, 'ரேப் றெக்கோடிங்' மூலம் பிரதமர் அலுவலகத்திற்கு வந்துள்ளன"

நான்: ''பேசியது உண்மை. உணர்ச்சியுடன் பேசியிருப்பதையும் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் வகுப்புத் துவேசம் உண்டாகக்கூடிய தாகப் பேசினேன் என்பதை மறுக்கிறேன்' பிரதமர் அலுவலகத்தில் உள்ள என் பேச்சுப் பதிவைப் போட்டுப் பார்த்தால் உண்மை தெரியும்''

சொ. ஜெ: ''என்ன சாரப்பட மேடைகளில் பேசியிருப்பீர்?''

நான்: ''சிங்கள மக்களும் தமிழ்மக்களும் நெடுங் காலம் இந்நாட்டில் சகோதரராக வாழ்ந்த வர்கள். அதேபோன்று அவர்களது மொழி களாயசிங்களமும்தமிழும் கைகோர்த்தபடி வாழ்ந்தவை. ஆங்கிலம் அரசோச்சிய காலத் திலும், இம்மொழிகள் தகுந்த இடத்திலே வைக்கப்பட்டு இருந்தவை. இப்போது ஒரு மொழி அரசட்டிலிலும், இன்னோர் மொழி குப்பைத் தொட்டியிலுமா? இது நியாயமா? இரண்டு மொழிகளும் ஈழமாதாவின் இரு கண்கள்போல ஏன் அமையக் கூடாது! ஒற்று மையாக இரண்டு இனம், தமது சுய நிர்ணய உரிமை மாசுறுது-பெருமையுடன்வாழ கூட் டாட்சியே (Federalism) மார்க்கம். ஜனநா யக வழியில் ஆண்டாண்டாக ஆட்சிபீடத் தைத் தமிழ்பேசுமினம் கேட்டாயிற்று...... கடைசி மார்க்கப் போராட்டம். சனநாயக நாட்டில் அடக்கப்பட்ட இனம், செய்யக் கூடிய பண்புடைய போராட்டம்தானே சத்

தியாக்கிரகம். அதைத்தான் நாமும் செய்ய வேண்டும். பண்புடன் எங்கள் உரிமை கோரிச் செய்வோம்...இப்படியான சாரப்படவே பேசுவேன்'' சிங்களவரையோ, சிங்கள மொழியையோ எங்கள் கட்சிப் பேச்சாளர் தூசிப்பது கிடையவே கிடையாது. (மிக ஆவலுடன் சொலிசிற்றர்ஜெனரல் கேட்டபடி யிருக்கிறார்.)

சொ. ஜெ.: ''நீங்கள் பாடசாலைக்குப் போக விரும்பவில்லையா?''

நான்: ''யான் போகத்தான் விரும்புகிறேன். அரசாங்கம் அல்லவா தடுத்து வைத்துள்ளது.''

சொ. ஜெ.: (சிரித்துவிட்டு) கடைசியாக என்ன கூறவிரும்புகின்றீர்?''

நான்: ''கடைசியாக நான் கூறக்கூடியது, யான் ஒரு தனிப்பட்ட முகாமையின் கீழ் உள்ள பாடசாலை ஆசிரியன். ஆகவே அரசியல் உரிமை இருக்கின்றது. ஜனநாயக உரித்துக் கருதி ஒரு பிரசை தன்னாலானதைச் செய்ய முடியும் இது ஜனநாயக உரிமை. அதையே யானும் செய்தேன்''

சொ. ஜெ.: (பக்கத்தே இருந்த பெண் லிகிதரைப் பார்க்கிறார். நாங்கள் பேசியவை யாவும் பதிவு செய்தாயிற்று என்கிறார். அப்பெண் ஆம் என்கிறாள்) ''போகலாம்''

நான்: ''வணக்கம்''

அறைக்கு வெளியே வருகிறேன். ஆசிரியர் எதிர்பார்த்தபடியுள்ளார். ஜீப்பில் ஏறினேம்' ஜீப் புறப்பட்டுவிட்டது. கொழும்பைப் பார்த்த படியிருக்கிறேம். ஆசிரியர் சிவகுருவை என்ன கேட்டனர் எனக்கேட்டேன். அவர் கூறினர். கட்சியின் செயற்குழு உறுப்பினர்; கட்சியின்பிரதான உறுப்பினன். சத்தியாக்கிரகத்தின் போது முழு மூச்சாக நின்று நடத்தியவர்; என்பதாகக் கேட்டார்களாம். அதைத் தான் ஒப்புக்கொண்டதாகக் கூறினர் ஆசிரியர்.

நாம் வேடதாரிகள் அல்ல:

பொய்யுரைத்திருந்தால், இனிமேல் நாங்கள் கட்சியில் ஒத்துழைக்கமாட்டோம் என்று ஒரு வார்த்தை கூறியிருந்தால், இரண்டு மூன்று நாட்களில் விடுதலையாக முடியும்.

நாங்கள் தமிழரசுக் கட்சி உறுப்பினர், அப்படி போலி வேடமிட முடியாது மகளே! நுகசொடையில் ஜீப்பை மறித்து, எமது தடுப்புக்காவல் குடும்பத்தவர் சொல்லிவிட்ட சில சாமான் வாங்க இறங்கினேன். யான்முன்னே, என்பின்னே துப்பாக்கியுடன் ஒரு பொலிஸ், எங்கே யான் போனுலும் எந்தக் கடையில் நின்றுலும் என் பின்னே அப்பொலிஸ். நுகசொடைக் கடைக்காரர்கள் ஆவலுடன் இக்காட்சியைப் பார்க்காது விடமுடியுமா? எல்லாக்கண்களும் எம்மை மொய்க்கின்றன. ஒரு கடை, தமிழ்க்கடையது. அதுவும் தமிழரசு அனுதாபக் கடை. என்னை அவர்களுக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டும்.

கடைக்காரர்: "நீங்கள் தானே புதுமைலோலன்"

நான்: "ஆமாம்"

கடைக்காரர்: "உங்களை மேடையிலே பலமுறை கண்டிருக்கிறேன். தடுப்புக்காவலில் இருப்பதாகவும் கேள்விப்பட்டோம். செல்வநாயகம் முதலியோர் சுகமாயுள்ளனரோ"? நானும் விபரங்களைக் கூறினேன் என்னமோ தெரியாது பொலிஸார் அனுமதித்தனர். தமிழ் முகத்தைப் பார்த்து அனுதாபமுடன் பேசக் கிடைத்த வாய்ப்பை மறக்க முடியவில்லை. தமிழ் முகங்கள் கூடி விடைதந்தன.

ஜீப் எங்கள் தடுப்புக்காவலிடத்தை அடைந்தது. என்னகேட்டனர்? என்ன கூறினீர்கள்? என எம் தடுப்புக்காவல் குடும்பத்தவர்கள் கேட்க நாம் பதில் கூற இன்று கழிகின்றது.

நாற்பத்திரண்டு நாட்களுக்குப் பின்பு வெளியே போய்வந்தது கொஞ்சம் அமைதியாயுள்ளது போல எண்ணுகின்றேன். நாளை வேறு சிலர்விசாரணைக்குப்போகவுள்ளனர். வேறென்ன மற்றவிபரங்களை அடுத்த மடலில் வரைகிறேன்.

உனது அன்பு அப்பா,
புதுமைலோலன்.

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
12-6-1961.

மகளே அன்பரசி,

அடிக்கடி மடல் எழுதி வந்த யான், இடையில் பதின்மூன்று நாட்கள் எழுத முடியாததாகிவிட்டது. யான் என்ன செய்ய? ஏன்? என்ன காரணம் என அறிய விருப்பப்படுவாய் தானே! தினமும் மாலையில் ஒரு மணித்தியாலம் கீழிறங்கி விளையாடலாம் அல்லது உலவலாம் அல்லவா? யான் தினமும் கைப்பந்தாட்டம் ஆடுவது வழக்கம். ஒரு நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பக்கம், மற்றவர்கள் ஒரு பக்கமாகப் பிரிந்து கைப்பந்தாட்டமாடினோம். ஒரே ஆரவாரத்திடையில் விளையாடிக் கொண்டிக்கும்போது, உயரே வந்த பந்தைத் துள்ளிக்கையை உயர்த்தியடித்தேன். படார் என வலக்கைத் தோட்பட்டையில் பிடித்துக்கொண்டது. அதாவது ஒன்றுமே செய்யமுடியாத உழைவு, நோ. இத்தோட்பட்டையில் சத்தியாக்கிரக ஆரம்ப நாட்களில் பொலிசாரின் குண்டாந்தடி விளையாடியதல்லவா? அந்த நோவை மாற்றியிருந்தும், எலும்பு ஆனதால் திரும்பவும் அதில் ஏதாவது வேகமேற்பட்டதும் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது.

அன்று அதாவது மாசி இருபதாந் தேதி...! நினைவுத் திரையில் வருகின்றது. என் தோள்பட்

டையில் அடிபட்ட காட்சி; மக்களின் எழுச்சி... யாழ்ப்பாணம் மட்டுமல்ல முழு ஈழத்திலும் ஏற்படுத்தப்பட்ட கொந்தளிப்பு... அன்பு! யாழ்ப்பாணக் கச்சேரியில் இரத்தம் சொரிந்த அன்று அறப்போரின் அச்சாரம் அம்மா!

அன்று ...! அதிகாலை எழுந்தேன். கச்சேரியடியை அடைந்தேன். எழுச்சிக் குரல் எழுப்பியபடி தமிழ் அரசுத் தொண்டர்கள், ஊர்வலமாக, தந்தை செல்வநாயகம் தலைமையில் போகின்றார்கள். பொலிஸ்ஜீப் அங்கும் இங்கும் வேகமாக ஓட்டம் செய்கின்றது. "எங்கள் மொழி தமிழ் மொழி..." "உயிரைக்கொடுத்தும் உரிமைபெறுவோம்...."போர்!போர்!அறப்போர். "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" இப்படி கோஷமிட்டபடி ஊர்வலம் கச்சேரியடியை அடைந்தது. கச்சேரி நிறைய பொலிசார் குழுமிநிற்கின்றனர். தெருவெங்கும் பொலிசார் நடமாட்டம் செய்தனர்.

வாயில்களில் தொண்டர்கள் உட்கார்ந்தனர். கச்சேரி பிரதான வாயிலில் தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம், துரைரத்தினம், பிரான்சிஸ் பெரேரா ஆகியோரும் தொண்டர்களும் குழுவியிருந்தனர். அடுத்த வாயிலில் டாக்டர் நாகநாதன், உடுவில் தர்மலிங்கம் ஆகியோருடன் தொண்டர்கள் குழுமியிருந்தனர். எதிரே மக்கள் கூட்டம் இக்காட்சியைப் பார்த்தபடி உணர்ச்சி வசப்பட்டு நிற்கின்றது. ஒன்பது மணியை நேரம் நெருங்குகின்றது.

கச்சேரி ஊழியர்கள் வருகின்றார்கள். அவர்கள் எப்படி உள்ளே நுழைவது? எந்த வாயிலாகப் போக முடியும்? வாயில்களில் அவர்களின் சகோதரர்கள். அறப் போர் வீரர்களை எப்படிக் கடப்பது? எனவே ஊழியர்களில் பலர் - மனித நெறி தெரிந்த மனம் கொண்டபலர் கூட்டமாக எதிரே நிற்கின்றனர். ஒரு ஊழியர் உள்ளே போக முயல்கின்றார். அவரா? ஈனத்தனமே செய்யும் கம்யூனிஸ்ட் அனுதாபியாம்.. உடனே பொலிஸ் அதிகாரி வழி கொடுக்க முனைகின்றார். போகஊழியர் இடம் கேட்டால், வழி கொடுக்க வேண்டியது பொலீசாரின் கடமைதான். ஆனால் போக முனையும் உத்தியோகஸ்தரா? அதோ அவ்வதனம்...தமிழ்ப் பெற்றோர் மறந்து பெற்ற பிள்ளை, காட்டிக் கொடுக்கும் துரோகக் கூட்டத்தில் ஒரு மகன். உத்தியோக உயர்வும் பணமும் போதுமென எண்ணிவிட்ட விபச்சாரி போன்றவன். தமிழினத்தில் உருவாய கறைகளில் ஒன்று...... ஐயோ யாழ்ப்பாணமே! இவனையுமா உன் மண் பெற்றது. இவனையுமா ஒரு தாய் பத்துமாதம் வருந்திப் பெற்றாள்? அவமானம், அவமானம்! அந்த ஈனப்பிறவி அறப்போர் வீரர் முன் நீண்ட காற்சட்டையுள் கையைவிட்டபடி உள்நுளையக் காத்திருக்கின்றது.

தொண்டர்களைத் தூக்கிப் பொலிசார் எறிகின்றனர். இரண்டு பொலிசார் ஒரு தொண்டனைத் தலையிலும் காலிலும் பிடித்து எறிகின்றனர். பந்தைச் சுவரில் எறிந்தால் எப்படி அதே வேகமுடன் திரும்பி வருமோ, அதே போன்று

வெகு வேகமாகத் தொண்டர்கள் மெய் வருத்தம் பாராது உரிய இடத்தை அடைகின்றனர். பொலிசாருக்கு அதிக வேலை கொடுத்தவர், நீர்கொழும்பு தந்த உணர்ச்சி வீரன் பிரான்சிஸ் பெரேரா அவர்களே. பிரான்சிஸ் பெரேராவின் உடைகள்கிழிகின்றன. பொலிசார் ஓயாது தூக்கி வீசுகின்றனர். பெரேராவின் உடல் உடைகிறது, வருத்தமடைகின்றது. ஆனால் பிரான்சிஸ் பெரேரா வெகுவேகமாக உரிய இடத்தை அடைகின்ருர். பார்வையாளர் கண்கள் அனல் கக்குகின்றன. ''ஏ பொலிசே! பெரேரா மேல் கைவையாதே'' என்ற குரல் ஒலி! அறப்போர் சூடுபிடிக்கின்றது. அறப்போர் தொடங்கமுன்பு, தந்தையிடம் அறப்போரில் ஆசிரியர்களின் பங்கு யாது? எனக் கேட்டேன். 'ஆரம்பத்தில் வேண்டாம், நாள் வரும்' என்ருர்.

ஆகையால் நான் அறப்போர் வீரருக்கு உதவி செய்துகொண்டு நின்றேன். அறப்போர் வீரருக்குத் தேநீர் கொடுத்தபடி கச்சேரியடிச் சந்தி பிரியும் வாயிலடியில் நிற்கின்றேன். தொண்டர்கள், யான் கொடுக்கும் தேநீர் பருகுகின்றனர். உள்ளே பார்த்தேன். பொலிஸாரை ஒன்ருக வைத்து பொலிஸ் அதிபர் ஏதோ கூறுகின்ருர். ஒரு ஜீப் வண்டி உள்ளிருந்து புறப்பட்டு, நான் நின்ற தொண்டர்களிருந்த வாயிலடியை நோக்கி வருகின்றது. ஜீப்பினுள் தெரிந்த முகம் ஒன்று கண்டேன். அவரா?... கடவுள் பக்தர்; மத காவலர்... தமிழறிஞர். மொழியில் நீங்காத பற்றுக்கொண்ட அண்ணல்; என்று மேடைகளில் அறிமு

கம் செய்ய, அதேமேடையில் நான் இருந்து கேட்டிருக்கிறேன். அதே அவரா? அறப்போரைக் குலைக்க, மொழிப் போரைக் கலைக்க காரண கருத்தா... அந்த அவரை ஸ்ரீ காந்தா என்பர். அரசாங்க அதிபர் அவர். ''நீதிஸ்தலம் போக வேண்டுமாம்; அரசாங்க அதிபர் போகாது விடலாமா? ம் ம்! பொலிஸாருக்குச் சந்தர்ப்பம் கொடுக்க ஆட்டக்காய் ஆடுகின்றார் ஸ்ரீகாந்தா அவர்கள்'' கொஞ்சம் முன்பு, அடுத்த வாயிலில் உள் நுழைய முனைந்து முடியாதுபோன ஊழியரின் பண்புக்கு எங்கள் தமிழ் அபிமானி அரசாங்க அதிபருமா? என்னுச்சரியம்!

ஜீப் உறுமியபடி தொண்டரின் பின்னே; தொண்டர்களைப் பார்க்கிறேன். அவர்கள் முகங்களைப் பார்க்கின்றேன்; எல்லார் முகங்களிலும் ஒளி... அச்சமற்றமுறுவல்... அதோ இரும்பு மனிதன்நாகநாதன்.... அச்சமற்ற அடலேறு அமிர்தலிங்கம். உறுதிகொண்ட தர்மலிங்கம். துயர்கண்டு அஞ்சாத துரைரத்தினம்......ஜீப் உறுமுகின்றது. 'ஜீப் போகவிடுங்கள்!' பொலிஸ் அதிபர் கூறினார். அறப்போர் வீரர் மௌனமாக இருக்கின்றனர். எங்கள்மேல் 'ஜீப் போனாலும் அசைய மாட்டோம்; என்று உறுதியுடன் இன்னும் நெருங்கி உட்கார்ந்துகொண்டனர். அவ்வமயம் படார், சடார், படார், — குண்டாந்தடியின் ஓசை, தொண்டர்களின் உடல்களில் அடி, குத்து, மிதி—தொண்டர்கள் படுத்தபடி உள்ளனர். பொலிஸாரின் சப்பாத்துக் கால்

கள் தொண்டர்களை முத்தமிடுகின்றன. இரத்தம் சிந்துகிறது. தொண்டர்களின் உடைகள் செந்நிறமாகி புரட்சிக் கொடியாகிவிட்டன. ஜீப் முன்னேறுகின்றது. அதோ ஒரு சில்லினுள் பழனி என்ற வாலிபன். அடுத்த சில்லினுள் அமிர்தலிங்கம், துரைரத்தினம், ஒரு கணம் சென்றால்......! ஜீப் உறுமுகின்றது. அந்த ஜீப்பின் உள்ளே... ஆமாம் தமிழபிமானி...... இந்த நேரம் தெருவின் அடுத்த கரையில் நின்ற மக்கள் வெள்ளம் குரலிடுகின்றது. ''அடியாதே மிதியாதே'' எனக் கோஷமிடுகின்றது. பார்வையாளர் அருகே போய், "கத்துவதில் பிரயோசனமின்று, வாருங்கள் நாமும் வாயிலில் படுப்போம்.—ஜீப் போவதைப் பார்ப்போம்'' என அழைத்தேன். ஓடிப் போய் நானும் ஜீப்பின் முன்னே படுத்தேன். உணர்ச்சியின் அந்தத்திலிருந்தேன். என்னருகே கைகோர்த்தபடி தமிழன் பாசறை அருணசலம், அடுத்து டாக்டர் நாகநாதன் அவர் உடம்பில் பட்டபொலிஸ்தடி முறிந்து வீழ்கின்றது. இரும்பு மரத்தை உடைத்தது. கற்கள் பாய்கின்றன. பார்வையாளரை நோக்கி பொலிசார் எறிந்த கற்கள் பாய்கின்றன. படுத்தோமா?......!

பொலிசார் மத்தியில் அளவுக்கதிகமான ஆத்திர உணர்வு, எங்கள் தொண்டரின் உறுதி கண்டு நெஞ்சுகொண்ட ஆத்திரம். அடி...... அடி ......மிதி, துவையல் நடக்கின்றது. அப்போது என்மேல் ஏறியபடி, ஒரு பொலிசின் சப்பாத்து, என்னை தோள்பட்டையைக் குறிவைத்து அடிக்கின்றது. அது ஒரு பொலிஸ்—இருதயம் கழற்

றப்பட்ட ஒரு கூடு, காக்கியுள் புகுந்துகொண்ட ஒரு உருவம்......சாய்ந்தேன், இரத்தம் பீறிடு கின்றது ... ... குப்புறப்படுத்தேன்.....கூரிய கல் நெஞ்சைப் பிளந்தது. அதனாலும் இரத்தம் பீறிடுகின்றது. பின்பு ஆஸ்பத்திரி கொண்டு செல் லப்படுகின்றேன். அதன் பின்பு, இரத்தத்தை கச் சேரி வாயிலில் தோய்ந்தபிற்பாடு எங்குமே எழுச்சி; அயர்ச்சியற்ற எழுச்சி! தூங்காத தமி ழன் ஆகிவிட்டான். அப்போர் எழுச்சிக்கு வித் தூன்றிய அன்று நீராக எமதிரத்தம் பாய்ச்சி னோமே, அதிலே உன் அப்பாவின் இரத்தச் சொட்டுக்களும் கலந்தன, என மகிழடா மகளே!

அந்தத் தோட்பட்டை நோ மாற ஒருமா சத்திற்கு மேற்சென்றது. ஆனல் பந்தாட்டத் தின்போது பழையநோவில் வேதனை......என் னறையிலுள்ள வே. கயிலாசபிள்ளை எண்ணே யிட்டு உரோஞ்சினர்; இன்றுதான் எழுதக்கூடி யளவுக்கு கையில் நோ குறைந்திருக்கின்றது.

சென்ற வாரத்தில் வவுனியா கதிரேசு, ஓமந் தைக் கிராமசபைத் தலைவர், வவுனியா குலசே கரம்பிள்ளை ஆகியோர் விடுதலையடைந்தார்கள். சென்ற சனிக்கிழமை உன் சித்தப்பாவும் எனது சகோதரனுமாகிய ஜெயராசசிங்கம், உன் மாமா சிவலிங்கம், எங்கள் கார்ச்சாரதி கனகரத்தினம், ஆசிரியர் அமிர்தலிங்கம், ஆசிரியர் இ. க. தியா கராசா ஆகியோர் காலையும், மற்றச் சித்தப்பா வும் என் சகோதரனுமாகிய குணராசா(செங்கை ஆழியான்) மாலையும் வந்து பேசிப்போனர்கள்.

அன்புயர் தந்தை,
புதுமைலோலன்,

தடுப்புக்காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம.
*14-7-1961*

மகளே அன்பரசி!

கிட்டத்தட்ட ஒரு மாதமாக உனக்கு மடல் எழுதவில்லை. எழுத முடியவில்லை.

ஏன்? இந்த ஏன் என்பதற்கு எப்படிப் பதில் எழுதுவேன் என்றே தெரியவில்லை. சிறைக்கூடத்தில் இருக்க இருக்க சிலருக்குப் பலவித தன்மைகள் மாறுகின்றன. குணங்களில் மாற்றங்கள் காண்கின்றேன். இந்நிலை எல்லாரிடமுமல்ல மகளே! ஒரு சிலர் பேசுமளவிற்குத் தியாகம் செய்ய ஆயத்தமாயில்லை என்பதை நன்ருக உணர்கின்றேன். தமிழ் மக்களிடம் காணப்படும் சில தன்மைகள் இயல்பானவை அத்தன்மைகள் இங்குள்ள சிலரிடமும் பற்றிக்கொண்டு ... பலப் பல வேதனை நிலைகளை உருவாக்கவே செய்கின்றன. யாரையும் பெயர் குறிப்பிட்டு எழுத யான் விரும்பவில்லை ஒரு சிலர் என்று மட்டுமே குறிப்பிடமுடியும் ... குடும்பப் பிரிவு-பிள்ளைப்பாசம்-பொருளாதார நெருக்கடி-உத்தியோக நீக்கம் - நோய்... இத்தியாதி தன்மைகள் சிலரது இதயங்களைப் பிய்த்து விளையாடி விட, மாறுபட்ட குணங்கள் கொண்டவராக மாறுகின்றனரோ என்னவோ? ஒரு சிலரின் இந்நிலை கண்டு ஆச்சரியப்பட்டேன் மகளே!

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல இன்றையசெய்தியை பத்திரிகையில் "படித்தோம்" கல்முனை எம். பி. அஹமது ராஜிநாமாச் செய்து விட்டார் என்பதே அச்செய்தி. முஸ்லீம் மக்கள் தலைகுனிய வேண்டிய அடுத்த கட்டம், "ஒரு இலட்சியம் கிடையாத இனம் இஸ்லாம் இனம்" என்பதைச் சில தலைவர்கள் மெய்ப்பித்தனர். அதே வழியில் அஹமது காரியப்பர் முஸ்தபா இதோ அடுத்த முஸ்லீம் அஹமது. இலங்கை வாழ் இஸ்லாம் மக்கள் தலை நிமிர முடியுமா? அண்டிப் பிழைத்துப் பழகிவிட்டவர்கள் ஆகிவிட்டனரா? பதவி, உத்தியோகம், பந்தம் மட்டும் இவர்களுக்குப் போதுமானதா? சீ! துரோகம்! துரோகம். ஓரினத்தையே விற்றுவிடுகின்றனரே. இதே இஸ்லாம் மக்கள் மத்தியில் பிறந்தவர்கள் தானே மசூர் மவ்லானுவும், கே. எஸ். ஏ. கபூரும்; அவர்கள் எங்களுடன் தடுப்புக்காவலிலிருந்து தம்மாலான தொண்டைச் செய்கின்றனரே! கேவலம் இத் தடுப்புக் காவலுக்குப் பயந்தா ராஜிநாமா, ராஜிநாமாவுக்குக் கொடுத்த காரணம் போலியானதென்பதைக் குழந்தையும் ஒப்புமே. சீ! சீ! அஹமதுவுக்கு அரசியல்தான் ஏன்? பாராளுமன்றம் தான் ஏன்? சென்ற தேர்தலின் போது மசூர் மவ்லானு விட்டுக்கொடுத்து; தமிழரசுக் கட்சி உழைத்து பெற்றுக்கொடுத்த வெற்றியல்லவா இது. அதை இப்படிப் போட்டு உடைக்கலாமா? இப்போதும் தந்தை செல்வநாயகம் அவர்கள் திரும்பவும் யோசிக்குமாறு அஹமதுவுக்குக் கடிதம் வரைந்துள்ளார். தமிழரசுக்கட்சி அபேட்சகராக வெற்றி

பெற்ற இவர் எம். பி. பதவிக்கு யார் காரணமோ அவர்களை விட்டுப் போகும் போது கட்சியை விட்டு மட்டுமல்ல எம். பி. பதவியையுமல்லவா விட்டு விலக வேண்டும். இது தான் நீதி. அபேட்சகராக முன் வரும்போது கட்சிக்குக் கொடுத்த வாக்குறுதிப் பத்திரப்படி செய்யவில்லையே!

அஹமது ஒரு அரசியல் குழந்தை. அக்குழந்தை இலட்சியம் என்ற கண்ணாடியைப் போட்டு உடைத்து விளையாடுகின்றது. இதே கண்ணாடியின் பரல்கள் இவரைத் தாக்க, இரத்தம் சொரிய கழி விரக்கப்படும் நாள் அதிக தூரத்திலல்ல.

அஹமதுவின் பாதையில் முன் சென்ற காரியப்பரும், முஸ்தபாவும் மக்களால் தூக்கி வீசப்பட்ட காட்சியைக் கண்டோமே! அடுத்த தேர்தலில் அஹமதுவின் வாழ்வும் அதுவேயாகும். இது வரலாறு காட்டும் உண்மைகள் மகளே! காலம் விடைதரும்.

யாழ்ப்பாண மாநகர உறுப்பினர் அழகையா மட்டக்களப்பு பூபாலரத்தினம், திருமலை வழக்கறிஞர் பாலச்சந்திரன், நாவுட்டான் கிராமச் சங்கத் தலைவர் பொன்னுக்கோன், மன்னார் அருளப்புக்குழந்தை ஆகியோர் தனித்தனி விடுதலை பெற்றனர். அவர்களுக்குப்பாடி, எழுச்சியூட்டி விடைகொடுத்தோம். நாத் தழு தழுக்கப்பிரிந்து சென்றனர், கண்ணீர் கன்னம் வழி வாய்க்கால் கட்ட ஜீப்பில் ஏறிப் போயினர். சென்ற கிழமை போட்டியாகப் பந்தாட்டமாடினோம். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களும் திருமலையைச் சேர்ந்தவர்களும் ஒரு பக்கம், வவுனியாவைச் சேர்ந்தவர்களும் மன்னாரைச் சேர்ந்தவர்களும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களும் ஒரு பக்கம். இவ்விளை

யாட்டுக்கான ஆரம்ப ஆயத்தங்களை சாவகச்சேரி பிரதிநிதி நவரத்தினம் செய்தார்கள். விளையாட்டு முடிவுவரை ஒரே ஆரவாரமாகவே இருந்தது. வவுனியா, மன்னூர், மட்டக்களப்புப் பக்கமே வெற்றிகிட்டியது. அதைத்தொடர்ந்துகரம் அடிக்கும் போட்டியையும் ஏற்பாடு செய்து வருகிறோம்.

குறிப்பிடக்கூடிய ஓர் ஏற்பாடு செய்து விட்டோம். அதாவது ஐந்து குழுக்களாக இங்குள்ளோர் பிரிந்து, ஆலோசித்து ஆவன செய்கின்றனர். பிரசாரக்குழுவில் யான் அங்கம் வகிக்கின்றேன். இக்குழுக்களின் திட்டங்கள் நாம்விடுதலையானதும் நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்யப்படும். அடுத்த போராட்டத்திற்கு இது மிக உதவியாகும். இந்தப் போராட்டத்தின் போது, நாங்கள் சந்தித்த அனுபவங்களை எல்லாம் ஆராய்ந்து அடுத்த போராட்டத்தின் போது மாற்றம் காணவும், புதிய ஏற்பாடுகள் செய்யவும், ஆவன செய்து இருக்கின்றோம். இதற்கானவற்றை இக்குழுவினர் இரவு பகலாகச் சிந்தித்து எழுதி வருகின்றனர். ஈழத்தில், தமிழரின் இன்றைய நிலை மாறவேண்டும்; மாறியேயாகும்.

அதற்கு-அடுத்த போராட்டத்தை இன்னும் திறமையாக நடத்த வேண்டுமென்பதே எமது ஆசையாகும். விடுதலை கிட்டட்டும்; திரும்பவும் முரசறைவோம்; முயல்வோம் உரிமை பெற உழைப்போம்.

மற்றவை பின்பு

உனது அன்புத் தந்தை,

புதுமைலோலன்.

தடுப்புக்காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமஹம,
16-7-61

மகளே அன்பரசி!

மேன்மாடியில் தடுப்புக் காவலில்—ஏகாந்த வாழ்வில்-இருக்கத்தொடங்கி இன்றுடன் மூன்று மாதங்கள் முடிவடைகின்றன. ஒரு சில மணித்தியாலங்கள் ஓரிடத்தில் இருக்கமுடியாத நானு மூன்று மாதங்கள் துறவிபோல் வாழ்ந்துவிட்டேன். என்னைப்போல எத்தனைபேர்!

ஆச்சரியமாயிருக்கிறது மகளே, ஆச்சரியமாயிருக்கிறது. மூன்று மாதங்கள் எப்படியோ ஓடிவிட்டன. இம்மூன்று மாதங்களிலும் பல உயரிய நூல்களைப் படிக்க முடிந்தது. அரசியல் என்ற பாடத்தில் பல புதிய சிந்தனைகளை, அனுபவங்களைப் படிக்கவும் முடிந்தது. இதைவிடப் பல அரசியல் கட்டுரைகளையும் அடிக்கடி உனக்கு மடல்களையும் எழுத முடிந்தது. அதிக பக்கங்கள் கொண்ட நூல்களைப் படிக்க அரிய சந்தர்ப்பமாக இச் சிறைவாசம் அமைந்துவிட்டது "எல்லாம் நன்மைக்கே" என்பார்களே! அதுவும் அர்த்தம் கொண்ட வாக்கியம் தானு?

நேற்று செல்வநாயகம் அவர்கள் லண்டன் பயணமானுர்கள். அவரது சுகயீனத்தை சொஸ்தமாக்க முடிந்த விசேட டாக்டர் அங்

குள்ள படியாலும், அந்த டாக்டர் மட்டுமே உரிய சத்திர சிகிச்சையைச் செய்யமுடியும் என்பதாலும் போனூர். முன்னேற்கனவே நான் குறிக்கப்பட்ட விடயமிது. எங்களுக்கு எழுதிக் கேட்டார். தந்தை வீட்டுக் காவலிலிருக்கும்போது போவதை அவர் விரும்பவில்லை. அப்படியான நிலையில், தடுப்புக்காவலில் உள்ளோரது நெருக்கமே அவரைப் போகச் செய்தது. அவர் போகும் போது ரத்மலானையில் ஒரே கூட்டமாம். கண்ணீர் மல்கிப் பலர் விடைகொடுத்தனுப்பினராம். அவர் போகும் அந்த நேரம், நாங்களனைவரும் கூடிப் பிரார்த்தித்தோம், கீதமிசைத்தோம்.

விடுதலை பெற்று யாரும் செல்லும்போது பாரதியின் "வாழிய செந்தமிழ்" என்ற பாட்டையும், 'ஈழத் தமிழ்நாடு' என்ற கீதத்தையும் பாடுவது வழக்கம். அதேபோன்று நேற்றும் தந்தை செல்வா போகும் நேரம் பாடினேம். 'ஈழத் தமிழ்நாடு' என்ற பாட்டு, கண்ணதாசனின் 'திராவிடப் பொன்னுடு' என்ற பாட்டுப் போன்றது. அறப்போர் முன்னணி அரியநாநாயகம் பாடியது. சிலதிருத்தங்களை திரு வி. ஏ. கந்தையா அவர்களும் செய்து உயரிய உன்னத பாட்டாயிற்று. அப்பாடலை மட்டக்களப்புப் பிரதிநிதி பாடவேண்டும் அல்லது மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பாடவேண்டும். அவ்வமயம் கனிவு ஆருக ஓடும். இதயம் துள்ளும்; உறுதி நெஞ்சம் விம்மும். அப்பாட்டை நாங்களியக்க மேடைகளில் பாடுவதெனத் தீர்மானித்துள்

ளோம். அப்பாட்டை நீயுமறியவேண்டும் மகளே! நீ வளர்ந்து இப் பாட்டைப் பாட யான் கேட்க வேண்டும். நீ மட்டுமல்ல ஈழச் சிறுவரும் சிறுமியரும் இப்பாட்டைப் பாடவேண்டும்! அப்பாட்டை இம்மடலின் கடைசியில் எழுதியுள்ளேன்.

அப்பாடலின் கருத்து, வரலாறும் உண்மையும் செறிந்தது. அறமும் பொருளும் இன்பமும் சேர்ந்த நாடு—இதயத்தின் வெற்றிக்கொடி நாட்டிய மன்னன் யாழால் — புகழீட்டிய பாணன் இசைக்கு நூல் தந்தான் ஒருவன்—இசையுடன் வாழும் தமிழன்—மீன்பாடும் தேன் நாடாம், மட்டக்களப்பும் நீருற்றுக்கொண்ட திருமலையும் ஏர் ஓடும் வன்னியும், முத்தெடுக்கும் மன்னாரும், வாழ்வளிக்கும் மலையக மக்களும் நாவலனும் ஞானப்பிரகாசரும் விபுலானந்தரும் வளர்த்த மொழியும் கொண்ட ஈழத்துத் தமிழன் ...ஆகா இக்கருத்துக்கள்கொண்ட அப்பாட்டைப்பாட எழுச்சியும் இனமுழக்கமும் கொண்ட ஈழத்துத் தமிழன் ... ...ஆகா இக் கருத்துக்கள் கொண்ட அப்பாட்டைப் பாட எழுச்சியும் இன முழக்கமும் உண்டாகும் மகளே!

எங்களைத் தடுப்புக்காவலில் வைக்கப்பிடித்தது 17-4-61-ல் அல்லவா? ஒவ்வொரு 17-ந் திகதியும் அவசரகால நிலையைப் புதுப்பிப்பதுடன், எமக்கும் தடுப்புக்காவலில் வைத்திருக்கும் அறிவித்தல் பத்திரமும் தருவர். இன்றிரவு—கொஞ்ச நேரம் முன்பு தரவந்தனர். நாங்கள் மறுத்துவிட்டோம். ஏனெனில் சிங்களத்தில் அப்பத்திரம்

இருந்ததே காரணமாகும் எமக்கு விளங்காத மொழியிலிருப்பதை எப்படி ஏற்கமுடியும்? இரகசிய பொலீஸ்பகுதியெமக்கு விளக்கம் தருவதாகவும், கைது செய்யும் அறிவித்தலையும் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டனர். நாம் மறுத்துவிட்டோம். எங்கள் அறைக் கதவுகளில் ஒட்டிச் சென்றார்கள். ஆட்சிப்பீடத்தின் அநீதிக்கு எங்கிருப்பினும் எதிர்ப்பை, எங்கள் போராட்டத்தை நாம் தளர்த்தப் போவது கிடையவே கிடையாது. அகிம்சை தோற்றதில்லை! நியாயம் தோற்றதில்லை. உரிமை பறிகொடுக்க முடியாதது. அவ்வின மக்கள் போராடத் துணிந்துவிட்டால்...மகளே! இக்கடிதத்தில் குறிப்பிட்ட பாட்டைப் படி. திராவிடப் பொன்னாடு என்ற மெட்டில் படிக்கவேண்டும்.

இதோ அப்பாடல்

—ஈழத் தமிழ்நாடு இசைவாழும் பொன்னாடு
இயல் இசை நாடகம் அறம் பொருள் இன்பம்
இலங்கும் எம் தமிழ் நாடு (எங்)

1. இமயத் தலையில் தமிழ் ஒலித்தான்
எங்கள் ஈழத்து அரசன் இசை அமைத்தே
இன்னமுதிசையால் யாழ்மீட்டி எங்கள்
முன்னவன் ஒருவன் புகழ் அமைத்தான்
இசையினைப் போலே உலகினில் வேறே இல்
தொகுத்தான் ஒருபுலவன் [லையெனத்
இசையாலே தோன்றி இசையாலே வாழ்ந்து
இசையோடு உயிர் ஓம் தாய்நாடு (எங்)

2. மீன்மகள் பாடும் மணிவாவி மட்டுநகர் வலம்மேவி
கொலுவிருப்பாள்,
தீஞ்சுவையென வெந்நீரூற்று, எங்கள் திருமலை தனி
லே திகழுகிறுள்,
திருமலைபோலே உலகினில் வேறே தேயங்களுளதோ
இயலபாலே.
திகழ்கின்ற குன்றில் இரைகின்ற சங்கின் திரைவந்து
மோதும் தாய்நாடு. [எங்]

3. வன்னி நாட்டின் வளம் கொழிக்க, எங்கள் வண்ட
மிழ் வீரர் ஏர்பிடிப்பார்
மன்னர்க் கடலில் முத்தெடுத்து எங்கள் மானத்
தமிழர் வடமமைப்பார்
மலைகளின் மேலே வளர்பயிராலே மலைவாழ் தமிழர்
வாழ்வளிப்பார்
மறங்கொண்ட நெஞ்சில், அறங்கண்டு விஞ்சி,
புறங்கொண்டு வாழும் தாய்நாடு: [எங்]

4. யாழ் நகர் பிறந்து தமிழ் காத்தான்,
எங்கள் நாவலன் இறவாப் புகழ் போர்த்தான்
ஞாலத் திறலின் மொழி ஆய்ந்தே
எங்கள் ஞானப்பிரகாசன் மொழி வளர்த்தான்,
கலைக் குயில்போல் இஸ்லாமிய மாதர் கவிதைகளில்
கன்னித் தமிழ் இசைத்தார்;
கலையாத சொத்து, இசையாழ் நூல்வித்து
விபுலானந்தன் தந்த புகழ் ஏடு. [எங்]

அன்பரசீ! நீ வளர்ந்து பாடு, ஈழமே பாடட்டும்!

உனது அப்பா
புதுமைலோலன்.

விக்ரோறியா ஹோட்டல்,
கோட்டை,
கொழும்பு.
27-7-61.

அன்பின் பாச வாத்சல்லிய மகளே அன்பரசி!

—தடுப்புக்காவல் முகாம், ஹோமகம, என்ற முகவரியிலிருந்து எழுதிய என் அப்பா, இம் மடலை விக்ரோறியா ஹோட்டலில் இருந்து எழுதுகின்றாரே— என சிந்திக்கின்றாயா? இன்று மாலை நாலு மணியிருக்கும்— எங்களுக்குக் காவலாக இருக்கும் பொலிஸ் அதிபர், மேல் மாடிக்கு வந்தார், கையில் பெரியதொரு நீள பெயர்ப் பட்டியல்; எல்லோரையும் அழைத்தார். இன்று யான் வாசிக்கும் பெயருடையோர் விடுதலை செய்யப்படுகின்றனர் எனப் பொலிஸ் அதிபர் கூறினார். என்பெயர் அப்பட்டியலில் வரும் என யான் எதிர்பார்க்கவேயில்லை.. பொலிஸ் அதிபர் பெயர்களை வாசித்துக் கொண்டே போனவர் என் பெயரையும் கூறினர்.

விடுதலை என்றதும் மனதில், இதயத்தில் ஒரு துள்ளல் —உன்னை.,, உன் தம்பி அன்பழகனை, உன் அம்மாவை... உன் அப்பாச்சியைக் காணப்போகிறேன், உறவினரைச் சந்திக்கப்போகின்றேன், நண்பர்களுடன் கலந்துரையாடப் போகின்றேன்: யாழ்ப்பாண மண்ணை, யான் ஓடியாடிய தீந்தமிழ் மண்ணை தீண்டப் போகின்றேன்.... என் கடமையை எதிர்பார்க்கும் பாடசாலையைக் காணப்போகின்றேன். போராட்ட வீரர்களை, தமிழரசுத் தியாகிகளைச் சந்திக்கப் போகின்றேன்... என்பதை எண்ண நெஞ்சம் எல்லாம் மகிழ்வு கட்டிப் புரண்டது. கும்மாளம் இட்டது. அதே வேளையில் இன்னும் விடுதலை பெறாத பாராளுமன்ற உறுப்பினர்களையும் வேறு சிலரையும் எண்ண வேதனை முட்டுகின்றது, இதயத்தைப் பிழிகின்

றது. பாராளுமன்ற உறுப்பினர்களும் வேறு சிலரும் மட்டும் இன்னும் விடுதலை அடையாது உள்ளனரே, நாம் மட்டும் எப்படி மகிழலாம். எமது தடுப்புக்காவல் குடும்பம் அருகி அருகி இப்போது இருபத்திரண்டு பேர் மட்டுமே உள்ளனரே,—ஒன்ருக அன்புரிமையுடன் ஒரே குடும்பமாக வாழ்ந்த நாம், அவர்களிலே சிலரை இன்னும் தடுப்புக் காவலில் விட்டுப் போவதா? ஐயகோ! மகளே! நெஞ்சம் புண்ணுகின்றதே; சீழ் கொட்டுகின்றதே!

வேதனை—வேதனை! ஒரு பக்கம் மகிழ்ச்சி— மறுபக்கம் வேதனை. மகிழ்வு கலந்த ஒரு வேதனை— ஈழத்துத் தமிழ் பேசுமினம், எதற்கு மகிழப்போகின்றனர். துயரமே வாழ்வாகக் கொண்டுவிட்ட தமிழ்பேசுமினத்தின் உறுப்பினர் யாம். இந்த விடுதலை கேட்டு மகிழவா வேண்டும்? நாம் வீடு போக மாட்டோம் எல்லோருடனும் எங்களை அனுப்பு என ஆட்சிபீடத்தைக் கேட்டால் அப்படியும் செய்யமாட்டார்களே, ஒரு சில மணித்தியாலங்கள் கூட தாமதிக்கவிடமாட்டார்களே.

விடுதலை செய்யப்பட்டோர், போவதற்கு ஆயத்தம் செய்கின்றனர். ஆகவே நானும் ஆயத்தமானேன், இன்று தான் பலர் ஒன்ருக விடுதலை பெற்றனர். ''ஈழத் தாய் நாடு பாட்டு ஒலிக்க ஆரம்பித்து விட்டது, மங்கையர்க் கரசியின் இனிமைக் குரல் இப்பாட்டைப் பாடுகின்றது. உணர்ச்சி உந்தலில் நாகநாதன் கூடவல்லவா பாடுகின்ருர். எல்லாரும் பாடுகின்றனர். அதோ தமிழ்க் கொண்டல் இராசதுரையின் கணீர் ஒலி, கண்ணை மூடியபடி வி. ஏ. கந்தையா அவர்களும் பாடுகின்ருரே ஊனையும் உருக்கும் பாடல். ''அன்புப் பிணைப்பும் குடும்ப நட்பும் கொள்கையிலூக்கமும் கொண்டு ஒருவரில் ஒருவராக வாழ்ந்த நாம் பிரிவதா? தாங்கமுடியாத வேதனை கலந்த மகிழ்ச்சியாயுள்ளதே. இன்றுடன் யான் தடுப்புக் காவல் அடைந்து நூறு நாட்கள் முடிகின்றது. சரியாக நூறு நாட்களால் விடுதலை.

நாளை உன்னருகே இருப்பேனென நம்புகின்றேன். உன் அப்பாவின் மடியில் நீ இருந்து மழலை பேசி மகிழ் விப்பாயா? உன் மெல்லுடல் ஸ்பரிசத்தில் பாசத்தின் உணர்வு ஆறுக ஓடுமே, இவ்வுலகை அடைந்து, முப்பத் தொன்பது நாட்களால் விட்டுப் பிரிந்து வந்தேனே; உன் தம்பி அன்பழகனை விட்டு — இப்போ; எப்படி இருப்பான் வளர்ந்து நான் கற்பனை செய்யமுடியாதபடி இருப்பானே அவன் பொக்கைவாய்ச் சிரிப்பு என்னை, மகிழ்ச்சி என்ற ஊஞ்சலிலிட்டு ஆட்டுமே, இந்தக் கற்பனையில் நின்றபடி இருந்தேன்.

அதோ ஜீப்வண்டி; அதில் ஏற்றிக்கொண்டு கொழும்பு செல்வராம்! பின்பு புகைவண்டி மூலம் அவரவர் ஊர் போகலாமாம். இந்த இராணுவக் கட்டிடத்தில் கூட ஒரு அன்பு... காக்கிச் சட்டையுடன் உள்ள பொலிசாரில் கூட ஒருவகை அன்பு... எமக்கு அன்ன மூட்டிய சமையல் பையன்களில் கூட ஒரு அன்பு.. எமது தலைமயி ரைச் சவரஞ்செய்த கோமதி என்ற கைதியில் கூட ஓர் அன்பு ... இவர்களைக் கூட விட்டுப் பிரிய ஏதோ மாதிரி உள்ளதே; பழக்க தோஷமோ!

எல்லாரும் பிரியாவிடை பெறுகின்றனர்! இதயம் எவ்வி, எழும்பிப் பெருமூச்சிட்டபடி பிரியாமல் பிரியும் பிரியாவிடை பெறுகிறேன். தானுண்ணும் எதிலும் சிறு பகுதியை பிள்ளை போலக் கருதி என்வாயிலிட்டு மகிழும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி கந்தையா அவர்களைப் பிரிய வா? சிகரட் தந்து புகையுங்கோ மாஸ்ரர், என்று அன்புரி மையுடன் பழகும் உடுவில் பிரதிநிதி தர்மலிங்கத்தைப் பிரியவா? இலக்கிய முயற்சியில் ஈடுபடுங்கோ மாஸ்ரர் எனக் கூறும் அன்புயர் அமிர்தலிங்கம் அவர்களைப் பிரிய வா? பழமையை மறந்துவிட முடியாதே... கிங்கொருக் கொடாவில் ஒன்ருக வாழ்ந்த நினைவுகளை அடிக்கடி கூறும் வவுனியாப் பிரதிநிதி சிவசிதம்பரத்தைப் பிரியவா; அரசி யல் வாதம் எழுப்பிப் புதுப்புது சிந்தனைகளை வருவிக்கும் துரைரத்தினம், துணுக்காய் கைலாயபிள்ளை, வவுனியா வைச் சேர்ந்த சுப்பிரமணியம், ஞானசேகரம், முதலி

யோரைப் பிரியவா; நாட்டுக்குழைத்து கணவனுடன் கைகோர்த்துத் தியாகம் புரியும் தியாகவல்லி மங்கையர்க் கரசியைப் பிரியவா? பொறுமை மிளிர எமக்கு வேண் டிய உதவிகள் செய்யும் ராஜசேகரத்தைப் பிரியவா? நண்பருக்கு நண்பராய், — கொள்கையிலூக்கம் மிக்க நடராசாவைப் பிரியவா? எழுத்திலேயே பொழுதைக் கழிக்கும் கொள்கையாளன் கதிரைப் பிரியவா? எத்தனை நண்பர்கள், அத்தனை பேரையும் பிரிய நேர்ந்து விட்டது. மகளே.

என்ன செய்ய முடியும்? பிரியத்தானே வேண்டும் இவர்களை விரைவில் யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம் தானே. ஜீப்பில் ஏறினோமா! மேன்மாடியிலே மற்றை யோர் கையசைத்து கும்பிட்டு விடை தந்தனர். நெஞ் சத்து நிலை உடைப் பெடுத்து கண்ணீர் வழி ஆறுகி கன்னம் எங்கும் வாய்க்கால் கட்டியது. ஜீப் ஓடியது! ஓடியது! கொழும்பு கோட்டை ஸ்தானத்தை அடைந்தோம். இறங் கினோம், அப்படி! நூறு நாட்களுக்குப் பின் சுதந்திர மாய் விடப்பட்டோம். இன்னும் அரை மணித்தியாலம் உண்டு புகைவண்டி புறப்பட. எங்களை அழைத்து வந்த பொலிஸ் வண்டிகள், புறப்பட ஆயத்தமாகும்போது, புகைவண்டிப் பிரயாணத்திற்குரிய உத்தரவு (வாறன்ட்) கேட்டோம். விடுதலை அடைந்தபோது புகைவண்டி பிர யாணச் சீட்டுடன் பெற்றுத்தரப்படும் எனக் கூறியவர்கள் தங்களுக்குத் தெரியாது என்றனர். சபாஷ் இதுவும் ஒரு தண்டனையா? —ஆட்சிபீடம் வேண்டுமென்றே தருகின் றது. நல்லது— புகைவண்டி போயே போய் விட்டது. உடனே தொலைபேசி மூலம் இரகசிய பொலிஸ் பகுதிக்கும் உடுப்பிட்டி சிவசிதம்பரம் அவர்களுக்கும் அறிவித்தோம். இன்னும் பத்து நிமிடம் உண்டு புகைவண்டி புறப்பட. கோட்டை ஸ்தானத்தில் காத்திருந்தோம், புகைவண்டி போயும் விட்டது. இரகசிய பொலிஸ் பகுதி உத்தியோ கத்தரும், சிவசிதம்பரமும் வந்தனர். புகையிரத சீட்டுக் குரிய பத்திரம் தந்தனர். எனக்கு முதலாம் வகுப்புக் குரிய உத்தரவு கொடுத்தனர்.

தடுப்புக் காவலில் வைக்க ஆகாய விமானம் மூலம் அழைத்தவர்கள். விடுதலை செய்யும் போது கஷ்டமுடன் புகையிரதச் சிட்டையும் தந்தனர்...சரி சரி புகைவண்டி போய் விட்டதே. எப்படிப் போவது? இரவு என்ன செய்வது எனக்கேட்டோம்; முன்னமே தெரிந்திருந்தால் பொலிஸ் வண்டியை விட்டே இறங்காது சத்தியாக்கிரகம் செய்திருப்போமே: விக்ரோரியா ஹோட்டலில் தங்க வசதி செய்து தந்தனர். புகையிரதச் சீட்டுடன், வீடுபோக வேண்டிய எங்களை இன்றிரவு ஹோட்டலில் தங்க வைத்து வேண்டிய உணவும் தந்து, நாளை அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சியாளருக்கு ஏற்பட்டு விட்டது. எப்படி எமது ஆட்சிபீடத்தவரின், போக்கும் வீண் செலவுகளும், என்பதற்கு இதுவே போதுமே;

நாளை அதிகாலை உன்னருகே இருப்பேன் என எண்ணினேன் முடியவில்லை. இன்றிரவு விக்டோறியா ஹோட்டலில் இருந்து இம்மடலை வரைகின்றேன். நாளைக் காலை வண்டி என்னையும் இழுத்தோடிவரும்—நூறு நாட்களின் பின்புயாழ்ப்பாணம் வருகிறேன், நூறு நாட்களையும் திரும்பிப் பார்த்தால்......

ஏதோ நாட்டுக்காக, எம்மாலானதைச் செய்துள்ளோம். தமிழன் மானத்தை, தீரத்தை உயர்த்த உதவியுள்ளோம். இன்னும் இப்படி எத்தனை காராக் கிரகங்களைத் தமிழன் தாண்டவேண்டுமோ! உரிமை பெறும் வரை நாம் ஓயப்போவது கிடையாதே! மகளே! விரைவில் அடுத்த போராட்டம் ஆரம்பிக்க தடுப்புக் காவலின் போதே திட்டம் தீட்டி விட்டோம்; ஆட்சியை அசைப்போம், உரிமையை அடைவோம், என்ற நம்பிக்கை எனக்குண்டு. எதையும் தாங்கும் இதயமுடன் தமிழன் என்றிருக்க வேண்டும்— ஒற்றுமையுடன் போராடவேண்டும் அதுவே தேவை.

மகளே! நாளை இம்மடல் கிடைக்கும் போதே நானும் வந்து விடுவேன் என நம்புகிறேன். இத்தனை நாட்களும் நான் உனக்கு வரைந்த மடல்களைச் சேர்த்துவை. ஈழத் தமிழன் வரலாற்றில் ஏற்பட்ட நிலையை அம்மடல்கள் உணர்த்தும். முடிந்தால் இம்மடல்களைச் சேர்த்து விரை வில் நூலாக்கவும் எண்ணியுள்ளேன், நாளை சந்திப்பேன் தானே? எல்லாம் நேரில்.

உனது அப்பா
**புதுமைலோலன்**

முற்றும்.